Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :239 ஆடி 10ஆம் நாள் சனிக்கிழமை 25 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## பாடசாலை நேரம்: காலை 7.30இலிருந்து மாலை 3.30 மணிவரை

கொழும்பு, ஜூலை 25
அனைத்து அரச பாடசாலைகளிலும் தரம் 11, 12 மற்றும் 13 இல் பயிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 7.30 27

# சமஷ்டியைக் கோருவதற்கு தமிழருக்கு உரித்துண்டு

## சந்திரிகா ஆதரவுக் கரம்

கொழும்பு, ஜூலை 25
சமஷ்டி, அதிகாரப் பரவலாக்கல் போன்ற கோரிக்கைகள் நாட்டுக்கு ஆபத்தானவை அல்ல. அதைக் கோருவதற்குத் தமிழர்களுக்கு உரிமை உண்டு. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். 27



## மாதிரி வாக்குச் சீட்டுடன் பல்கலை மாணவன் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கு ஆதரவான சுவரொட்டிகளை ஒட்டிய இருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சுழிபுரம், வழக்கம்பரை சந்தியில் தேர்தல் பரப்புரை சுவரொட்டிகளை ஒட்டிக் கொண் 26

## தேர்தல் விதி மீறல்: 16 பேர் கைது

மன்னார், ஜூலை 25
நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் மன்னார் மாவட்டத்தில் இதுவரை 35 முறைபாடுகள் மாவட்டச் செயலக தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. பொலிஸில் 9 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கு அமைவாக 16 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 9 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஒ,5)

## கூட்டமைப்பின் கூட்டத்தில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் இ.ஆனல்டின் பரப்புரைக் 26

## முல்லைத்தீவில் கடையில் கொடுக்கப்பட்ட வாக்காளர் அட்டைகள்

முல்லைத்தீவு, ஜூலை 25
முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தேராவில் பகுதியில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படாமல் வர்த்தக நிலையம் ஒன்றில் 24 வாக்காளர் அட் 27

## அலங்காரக் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூரில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அலங்கார கந்தனின் கொடியேற்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 27 நாள்கள் 26

## நல்லூரானைத் தரிசிக்க அ.அட்டை அவசியம்!

### பொலிஸார் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
நல்லூர் ஆலயத் திருவிழாவில் பங்கேற்க வரும் அடியவர்கள் அனைவரும் அடையாள அட்டை கொண்டு வருவது அவசியம் என்று யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ அறிவித்துள்ளார். 27

## விக்கியிடம் சி.ஐ.டி. விசாரணை!

யாழ்ப்பாணம், ஜூலை 25
வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனிடம் சி.ஐ.டியினர் நேற்று இரண்டு மணித்தியாலங்கள் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.
யாழ்ப்பாணம், நல்லூர் கோயில் வீதி 26

## கறுப்பு ஜூலையை நினைவுகூர்ந்த கனேடியப் பிரதமர்

ஒட்டாவா, ஜூலை 25
1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கறுப்பு ஜூலை படுகொலைகளை நினைவுகூர்ந்து கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இன்று நாங்கள் இலங்கையில் கறுப்பு ஜூலையில் இடம்பெற்ற பயங்கரமான சம்பவங்களை 27

## சுவரொட்டி ஒட்டியவர்கள் 4 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 25
வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டியை ஒட்டிய நால்வர் நேற்று இரவு 8.30 மணியளவில் வட்டுக்கோட் 27

## மாநகரசபைக் கூட்டம் செல்லுபடியற்றது!!!

### ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற மாதாந்தக் கூட்டம் செல்லுபடியற்றது என்று வடக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ள நிலையில் எதிர்வரும் 31ஆம் திகதி மாதாந்தக் கூட்டத்தை மீண்டும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஜூலை மாதக் கூட்டம் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றது. கூட்டம் 1947ஆம் ஆண்டின் 29இலக்க மாநகர சபை கூட்டத்தின் 27

## குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய கச்சேரி



யாழ்ப்பாணம், ஜூலை 25
அரச நிதியில் அமைக்கப்பட்ட வீதிகளை யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் திறந்து வைத்து ஒரு வாரத்தின் பின்னர், அந்த வீதிகளில் அறிவித்தல் பதாகை ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வீதிகள் பொதுமக்க 27

## மூன்றிலிரண்டு கேள்விக்குறிதான்!

### சுருதி மாற்றுகின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஜூலை 25
தேர்தலில் நாம் வெற்றி பெறுவது உறுதி. ஆனால், மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெறுவதுதான் கேள்விக்குறி. இவ்வாறு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள் 27

## முல்லைத்தீவுக்கு நான்கு மருத்துவர்களை அனுப்புமாறு பணிப்புரை

முல்லைத்தீவு, ஜூலை 25
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ளக மருத்துவப் பயிற்சியை முடித்த நான்கு மருத்துவர்களை உடனடியாக முல்லைத்தீவு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்குமாறு சுகாதார அமைச்சு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் 27

# எந்தவொரு தொழிற்சங்கத்துடனும் அரசியல் செயற்பாடு வேண்டாம்!

## அரச ஊழியர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 25

**வாக்களிப்பு காலத்தில் அனைத்து அரச ஊழியர்களும் எந்தவொரு தொழிற்சங்கத்துடனும் நேரடித் தொடர்பைக் கொண்ட அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என தேர்தல்கள் ஆணைக்குழு கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளது.**

அரசியல் உரிமை இருந்தாலும், இல்லாவிடினும் அனைத்து அரச ஊழியர்களும் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய அனைத்துப் பிரிவினரும் எந்தவொரு அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபடக் கூடாது என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுடன் தொடர்புடைய வேட்பாளர்களின் பிரசார நிகழ்வுகளில் தொழிற்சங்க தலைவர்கள் உள்ளிட்டவர்கள் பங்கேற்று வருவது தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆகவே அனைத்து அரச ஊழியர்களும் இவ்வாறான நிகழ்வுகளில் பங்குபற்றுவதை தவித்து கொள்ள வேண்டும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## கஞ்சாவுடன் நான்கு பேர் கைதாகினர்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடுப் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று நால்வர் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ம-113)

## மனைவியைக் காணவில்லை என கணவன் பொலிஸில் முறைப்பாடு



வவுனியா, ஜூலை 25

வவுனியா புதிய கற்பகபுரம் பகுதியில் வசித்து வரும் தனது மனைவியைக் காணவில்லை என்று அவருடைய கணவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுத்துள்ளார். காணாமல் போனவர் 4 பிள்ளைகளுக்குத்தாய். அவருக்குவயது 31. காணாமல் போனவர் இரு தினங்களுக்கு முன்னர், வவுனியா பொதுமருத்துவமனைக்குச் செல்வதாகத் தெரிவித்தே சென்றுள்ளார். தனது கடைசி மகளுடன் வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளார். காணாமல்போன தினத்தன்று அவர் நீல நிற ஆடை அணிந்திருந்தார் பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-110)

## தேர்தலை நடத்த 50 கோடி ரூபா மேலும் செலவு

கொழும்பு, ஜூலை 25

எதிர்வரும் பொதுத் தேர்தலை சுகாதார விதிமுறைகளுக்கு அமைய நடத்துவதாயின் மேலதிகமாக 50 கோடி ரூபா செலவாகும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை வாக்களிக்கும் மத்திய நிலையங்களின் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள கைகழுவும் கிருமி நீக்கும் திரவம், முகக்கவசம் மற்றும் கைகளில் மை தடவுவதற்கு பயன்படுத்தப்படும் மெழுகுக் குச்சி என்பன குறித்த மாவட்டங்களுக்கு நேற்று வியாழக்கிழமையே அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்கெண்ணும் மத்திய நிலையங்களின் பயன்பாட்டிற்காக உடல் வெப்ப நிலையை அளவீடு செய்யும் 60 வெப்பமானிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. தேர்தல்கள் செலவுக்காக 100 கோடி ரூபா மத்திய திறைசேரியினால் தற்போது பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)




## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

வவுனியா - கிடாச்சூரி பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியைச்சேர்ந்த 35 வயதுடைய மோகன் சிவகுமார்என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலமாக மீட்கப்பட்டவர் கிடாச்சூரி பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கிநின்று கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுவந்திருந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு வீட்டின் பின்பகுதியில் இருந்து அவர் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் வீட்டின் முதலாம் மாடியிலிருந்து தவறி வீழ்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்துவருகின்றனர். (அ.110)

## மகளுக்கு பாலியல் சீண்டல் தந்தைக்கு 14 நாள் மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 25

மகளுக்குப் பாலியல் தொல்லைகொடுத்த தந்தை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அல்லைப்பிட்டிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மதுபோதையில் வந்த தந்தை தனது 17 வயது மகளுக்கு ஆண் குறியைக்காட்டி மகளைப் பாலியல் வதைக்கு உட்படுத்தினார் என்று பாதிக்கப்பட்ட மகள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளார். விசாரணையை முன்னெடுத்த பொலிஸார் தந்தையைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினார்கள். சந்தேக நபரை 14 நாள்கள் மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-25)

## திருட்டுக்களுடன் தொடர்புடையவர் மடக்கிப் பிடிப்பு!


### வவுனியா இளைஞர்கள் அதிரடி

வவுனியா, ஜூலை 25

பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் வவுனியா இளைஞர்களால் நேற்று மடக்கிப் பிடிக்கப்பட்டார். சந்தேக நபர் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

வவுனியா வடக்கு நெடுங்கேணி பகுதியில் கடந்த சில நாட்களாக இரவு வேளையில் வீடு புகுந்து தொலைபேசிகள், இலத்திரனிய உபகரணங்கள் போன்றன திருடப்பட்டிருந்தன. இவ்விடயம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த சந்தேகநபர் வவுனியா நகரில் உள்ள தொலைபேசி



நிலையத்துக்கு தான் திருடிய தொலைபேசியை மிகக் குறைந்த விலையில் விற்க முற்பட்டபோது அவர் இளைஞர்களால் பிடிக்கப்பட்டு வவுனியாப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவரிடம் இருந்து சில பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. (ம-18)

## பாரவூர்தி எமனானது: விபத்தில் ஒருவர் சாவு

கிளிநொச்சி, ஜூலை 25


கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் இரவு வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியோடு, சொகுசு வாகனம் மோதுண்டதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 8.40 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி, ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, மன்னார் யாழ். வீதியில் பாரவூர்தி ஒன்று, எவ்வித சமிக்ஞையும் இல்லாமல் தரித்து நின்றுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சொகுசுவாகனம், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியைக் கவனிக்காமல் வந்த வேகத்தில் அதனோடு மோதியதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த விபத்தில் சொகுசுவாகனத்தில் பயணித்த மூவரில் சாரதிக்கு அருகில் இருந்து பயணித்தவரான, யாழ்ப்பாணம், மல்லாகம் பகுதியைச் சேர்ந்த சுவேந்திரன் (வயது 43) என்பவர் உயிரிழந்தார். சாரதியும், இன்னொருவரும் காயமடைந்தனர். உயிரிழந்தவரின் சடலம் முழங்காவில் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை ஜெயபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ,35)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2020

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



**எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!**

**20 வருடங்களாக துக்கத்தில் தூங்கிக்கொண்டிருந்தது போதும்!**

**மக்களே! விழித்தெழுங்கள்!**

**ஒரு மாபெரும் வாக்குப் புரட்சிக்கு!**

**அரசியல் உரிமைகளையும் அபிவிருத்தியையும்**

**அறுவடைசெய்ய தயாராகுங்கள்!**

- ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள், மாநாடுகள், பேச்சுக்கள், குழுநியமனங்கள், கலந்துரையாடல்கள், வீர வசனங்கள் என்பவற்றை.....

**செய்பவர்கள் செய்யட்டும்! நம்புபவர்கள் நம்பட்டும்!**
**நாங்கள் முட்டாள்கள் அல்ல, நீங்கள்.......?**

- ஒவ்வொரு ஐந்தாண்டுப் பதவியில் சுகபோகமாக காலத்தை ஓட்டி, மீண்டும் அடுத்த ஐந்தாண்டுக்காக ஊருக்குள் முகங்காட்டும் அரசியல் வாதிகளை ஓட ஓட விரட்ட 2020 தேர்தலில் தமிழ்த் தேசத்தின் இளைஞர்கள் யுவதிகள் வாக்குப் புரட்சி செய்வதற்கு தயாராகி விட்டார்கள்! மற்றையவர்களும் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள்.
- அபிவிருத்தி என்ற பெயரில் பூனைக்கு, குரங்கு அப்பம் பகிர்ந்து கொடுத்த மாதிரியான செயற்பாடுகளை ஊதிப் பெரிதாக்கி, வாக்கு வேட்டையில் இறங்கிய வஞ்சகர்களை மக்கள் இந்தத் தேர்தலில் புறக்கணிப்பர்!
- எங்களைப் பலப்படுத்தினால்தான் பேரம் பேசலாம் என்று அன்றிலிருந்து இன்றுவரை வாக்குவேட்டை செய்து நாடாளுமன்றம் சென்றவர்கள் இன்றுவரை பேரம் பேசி சாதித்தது என்ன? இந்தத் தேர்தலில், சர்வதேச சந்தையில் பேரம் பேசி சாதிப்போம் என்று உங்கள் காதில் பூ சுற்றுவார்கள்! நீங்கள் நம்பத் தயாரா?
- சிறிசேன, ரணில், மாவை, கூட்டு நல்லாட்சியின் பங்காளர்களாக இருந்த போது தீர்வுப் பொதியை மாத்திரமே தூக்கி அலைந்து திரிந்து, எந்தவிதமான பொருளாதார அபிவிருத்தியை யும் எங்கள் பிரதேசத்திற்குக் கொண்டுவராமல், அரசியல் சந்தர்ப்பத்தை நழுவ விட்ட அரசியல்வாதிகள் இனி ஆளப்போகும் எங்கள் ஆட்சியில் அவர்களால் எதிர்ப்பு அரசியலில் இருந்து எதுவும் செய்யமுடியும் என்று நம்புகிறீர்களா?
- ஏழு பழைய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக்கு அனுப்புங்கள்! ஏழு புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்களாகிய நீங்கள் தெரிவு செய்யுங்கள்.

**எமது தமிழ் தேசம் ஒளிமயமான தேசமாக மிளரும் என்பதில்**
**அங்கஜன் அணிக்கு எந்தவிதமான ஐயமும் இல்லை.**


- எமது வாழ்க்கை, எமது கையில். எனவே இந்தத் தேர்தலில் ஒரு நல்ல மாற்றத்தை உருவாக்க ஒரு மாபெரும் வாக்குப் புரட்சியின் மூலம் கை சின்னத்துக்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!

***தமிழ்த் தேசத்தில் இருக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சரியான பலனடையக்கூடிய தூரநோக்குடைய திட்டங்களை நான் வகுப்பேன் என்றும் உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.***

**" உங்கள் வாக்கு உங்கள் உரிமை**
**சரியான முறையில் வாக்களியுங்கள்! "**

**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.**

# பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)



X

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

**உண்மைகள் யாவும் அம்பலத்திற்கு....**




16
# தமிழர்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டிய தருணமிது

## சபையில் சரவணபவன்

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தென்னிலங்கை சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியோ, மக்கள் சக்தியோ, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ பொதுஜன பெரமுனவோ அக்கட்சிகளின் பேச்சுக்களையும் வாக்குறுதிகளையும் நம்பமுடியுமா? அவர்கள் தேர்தல் காலங்களில் மேடைகளிலும் அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் கூறப்படுபவை, கூறப்பட்டிருந்தவை எதுவுமே நேர்மையானதாகவோ நம்பகத் தன்மையுடையதாகவோ இல்லை. அவை எல்லாம் சீனி பூசப்பட்ட விஷ மாத்திரைகள். நாம் இன்று நேற்றா ஏமாற்றப்படுகின்றோம். காலம் காலமாக ஏமாற்றப்பட்டே வந்துள்ளோம். ஏமாற்றப்படும் ஒரு இனமாகவே எம்மை அடையாளப்படுத்தியுள்ளனர். தென்னிலங்கையில் வாழும் சிங்களவர்கள் தான் தமிழர்களின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள், தீர்மானிப்பவர்கள் என்று கருதுகின்றனர். இந்தத் தவறான நினைப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

நாம் பல போராட்டங்களைக் கடந்து வந்தவர்கள். சாத்வீகப் போராட்டம், ஆயுதப் போராட்டம், ஜனநாயகப் போராட்டம் எனப் போராட்டங்களை நடத்தி ஓய்ந்து போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். சிங்கள அரசுகள் நன்றாகவே தெரிந்து கொண்டுவிட்டன. தமிழர்கள் ஒன்றுபடமாட்டார்கள். ஒன்றாக வரமாட்டார்கள் என்று. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது பழமொழி. ஒன்றாக இரண்டாக அல்ல ஒன்பதாகத் திட்டமிட்டு உடைத்து சிதைந்துவிட்டனர்.

இது சிங்கள அரசுகளின் திட்டமிடப்பட்ட ஒரு சதி. அடுத்த வீட்டுக்காரன் எம்மை திடீரென வந்து தாக்கிவிட முடியாது. உன் வீட்டில் இருப்பவர்கள் கதவைத் திறந்து வைத்துவிட்டால் கள்ளன் இலகுவாக உட்புகுந்துவிடுவான்.

அதேபோன்றுதான் வடக்கு, கிழக்கு மாகாணம் எனும் நம் தமிழ்த் தாயகத்தின் கதவை எதிரிகளுக்கு திறந்துவிட்டு எரியும் வீட்டில் குளிர் காய்கின்றனர் சில குள்ள நரிக்கும்பல்கள். இவர்கள்தான் இன்று கை என்றும் யானை என்றும் சுயேட்சை என்றும் முன்னணிகள் என்றும் களம் இறங்கி நம் ஐக்கியத்தை உடைத்து சிதைத்துவிட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் எமக்குக் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும். எமக்கு வேண்டியது மானம், மரியாதையை இழந்து மண்டியிட்டு பெறும் அபிவிருத்தியா போராடிப் பெறும் தன்மான தமிழ்த் தேசமா இதை சிந்தித்து செயற்பட வேண்டும்.

1 2 3 4 5 6 7 8 9 10

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# வெலிஓயா சிங்களவருக்கு காணி பிடிக்கும் ராணுவம்

## சாள்ஸ் நிர்மலநாதன் சீற்றம்

முல்லைத்தீவு, ஜூலை 25

ஒதியமலையிலிருந்து 1984ஆம் ஆண்டு சுட்டுத் தள்ளி விரட்டியடித்த இராணுவம் இன்று எமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்ய விடாமல் விரட்டி நிலத்தை அபகரித்து சிங்கள மக்களுக்கு வழங்க முயற்சிக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

1972ஆம் ஆண்டு காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. அந்த மண்ணில் வாழ்ந்தவர்கள் 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் செய்த உலகமறிந்த படுகொலையை அடுத்து எமது மண்ணில் இருந்து விரட்டப்பட்டோம். அதன் பின்பு எம்மை அந்த ஊர் பக்கமே விடாத அரசு தனது இன மக்களை வளைத்து வளைத்து குடியமர்த்தியது. எமது பூர்வீக நிலமான உடங்கன், கருவேலமுறிப்பு ஆகிய கிராமங்களில் இருந்து 300 மீற்றருக்கு அண்மையாக வரை ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது. காணிகளை நாம் துப்பரவு செய்து வாழ்வாதார முயற்சியில் ஈடுபட்ட சமயம் வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமான பகுதி என்றனர். அப்போது வனவளத் திணைக்களத்தினரை அழைத்துவர அவர்கள் எமது உடமைகளைப் பறித்துச் சென்றனர். எமது ஆவணங்களை காண்பித்த நிலையில் அவை மக்களிற்கு உரித்தான இடம் என வனவளத் திணைக்களம் வெளியேறிவிட்டது. தற்போது ஒதியமலையில் உள்ள 64ஆவது பிரிகேட் இராணுவத்தினரை ஏவிவிட்டு தடைபோடுவது மட்டுமன்றி இராணுவம் விவசாயிகளை அடித்து விரட்டுகின்றது.

இரு தினங்களுக்கு முன்பு இந்தப் பகுதியில் புதிதாக இரு காவலரண்களையும் அமைத்து நிரந்தரமாக நிலை கொண்டு அந்தப் பிரதேசம் அரச நிலம் என்கின்றனர். இங்கு இரு குளங்கள் உண்டு. அவை இரண்டும் தற்போது கமநல சேவைத் திணைக்களம் ஊடாக புனரமைக்கப்பட்டன. அது மட்டுமன்றி 18 கிணறுகள் உண்டு. இவ்வாறு அனைத்தும் உள்ள நிலையில் அருகில் உள்ள வெலிஓயாவில் வசிக்கும் சிங்கள மக்களுக்கு நிலம் பிடித்துக் கொடுப்பதற்காக சிவில் நிர்வாகத்தால் இராணுவத்தின் பிரசன்னம் ஏற்புடையதல்ல.

1984 ஆம் ஆண்டு 181 குடும்பங்கள் வாழ்ந்த கிராமங்களில் இன்று 80 குடும்பங்களும் இல்லாமல் செய்யப்பட்ட நிலையில் அங்கே எஞ்சியுள்ள மக்களையும் விரட்டி அடிப்பதன் மூலம் முழு நிலத்தையும் வன்வளைப்புச் செய்து சிங்களமயப்படுத்தும் முயற்சியாகவே காணப்படுகின்றது. கொரோனா காரணமாக அனைத்து விளை நிலங்களும் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தப்படாத நிலங்களை படையினர் பயன்படுத்துவர் என்று ஜனாதிபதி தெரிவிக்கும் நிலையில் அந்த மக்களை விதைப்பதற்கு அனுமதி மறுத்துவிட்டு அடுத்த வருடம் படையினர் விவசாயம் செய்வர் இரண்டாம் வருடம் சிங்கள மக்களிற்கு தாரை வார்க்கப்படும்.

இவ்வாறுதான் எமது முல்லை மண் கூறுபோடப்பட்டது. இதனை எவ்வாறு அனுமதிப்பது? இத்தனை பிரச்சினைகளின் மத்தியில் காணப்படும் இந்த மண்ணில் ஒரு பிரச்சினையும் இல்லை. அபிவிருத்தி மட்டுமே முக்கியம் என்ற கோசத்தோடு உலா வருகின்றனர் அரச ஆதரவுக் கட்சியினர். அவர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று மக்களின் உண்மையான பிரச்சினையைக் கண்டறிவது மட்டுமன்றி அதனை தெற்கில் கூறும் துணிவுதான் அவர்களுக்கு உண்டா? என்று கேள்வி எழுப்பினார். (ஒ,5)

# நீதிமன்றத் தீர்ப்பை முன்னிறுத்தி நாட்டை பிளவுபடுத்த அனுமதியேன்

## மஹிந்த உடும்புப்பிடி

கொழும்பு, ஜூலை 25

சமஷ்டி தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்னர் வழங்கிய தீர்ப்பைக் காரணம் காட்டி நாட்டைப் பிளவுபடுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒருமித்த நாடு என்ற சொற்பதத்துக்குள் சமஷ்டித் தீர்வை தன்னாட்சி தீர்வை உருவாக்க முடியும். எதிரணிகளின் இந்தத் திருட்டுத்தனம் பற்றி நாம் மிகவும் அவதானமாக இருக்கின்றோம். அதனாலேயே ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம், என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:

ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு. இந்தச் சொற்பதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தமாட்டோம். சம்பந்தன் அணியினரும் சஜித் அணியினரும் கூறும் ஒருமித்த நாடு என்ற சொற்பத்தை ஏற்கவேமாட்டோம். ஏனெனில் ஒருமித்த நாடு என்ற சொற்பதத்துக்குள் சமஷ்டித் தீர்வை தன்னாட்சித் தீர்வை உருவாக்க முடியும். எதிரணிகளின் இந்தத் திருட்டுத்தனம் பற்றி நாம் மிகவும் அவதானமாக இருக்கின்றோம். அதுதான் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

சொற்பதங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியாவது இலக்கை அடைய வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடாப்பிடியாக உள்ளனர். அதுதான் அவர்கள் ஒருமித்த நாடு என்ற சொற்பதத்தைத் தூக்கிப்பிடித்துக்கொண்டிருக்கின்றார்கள். இதற்கு சஜித் அணியினரும் ஒத்தாசை புரிகின்றார்கள்.




சமஷ்டி தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்னர் வழங்கிய தீர்ப்பைக் காரணம் காட்டி நாட்டைப் பிளவுபடுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம், என்றார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாப்பில் சமஷ்டிக் கொள்கை அடிப்படையிலான தீர்வே தேவை என்று குறிப்பிடப்பட்டுள்ளதை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றில் சிங்கள கடும்போக்குவாத அமைப்புக்கள் வழக்குத் தாக்கல் செய்தன. அந்த வழக்கில், சமஷ்டி பிரிவினை அல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. (அ,22)

# ரதத்தில் வந்தடைந்தது நல்லூரானின் கொடிச்சீலை

படங்கள் -
ஐ.சிவசாந்தன்









வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் சம்பிரதாயபூர்வ நிகழ்வு நேற்று நடைபெற்றது. செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது வழக்கமாகும். அதன்படி யாழ். சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை சிறிய ரதத்தின் மூலம் பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு காலை 9.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயம் வந்தடைந்தது. அங்கு சுபநேரத்தில் பூஜைகள் இடம்பெற்று கொடிச்சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது. (ரி1)

## நல்லூரில் பரவப்படும் தொற்றுநீக்கிய மணல்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர் கந்தன் ஆலய சுற்றாடலுக்கு தொற்றுநீக்கிய மணல் பரவும் பணிகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நாகர் கோவிலிலிருந்து எடுத்து வரப்பட்ட மணல் மாதிரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு ஆராய்ச் சிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

மணலில் கிருமித்தொற்று இல்லை என்று ஆய்வறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் இந்த மணல் பரவும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன என யாழ்ப்பாண மாநகர பதில் முதல்வர் து.ஈசன் தெரிவித்தார். ஒவ்வொரு வருடமும் இந்த நடவடிக்கை பின்பற்றப்பட்டு வருகின்றது. (து-17)

## வைக்கோல் எரிப்பதை தடைசெய்யக் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் வைக்கோலை வீதி ஓரங்களிலும், வயல் நிலங்களிலும் எரிப்பதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பலபோக பயிர்ச்செய்கை நிறைவுபெற்றுள்ளதால் இவ்வாறான செயற்பாடுகள் அதிகம் இடம்பெறுகின்றன.

வயல் நிலங்களில் வைக்கோலை எரிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது என்று பல கூட்டங்களில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும், அவை நடைமுறையில் இல்லாது போயுள்ளன என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். பிரதான வீதி ஓரங்களிலுள்ள வயல் நிலங்களில் வைக்கோல் எரிக்கப்படும்போது எழும் புகை மூட்டம் காரணமாக வீதியால் செல்லும் பயணிகள் பல நோய்த் தாக்கங்களுக்குள்ளாகின்றனர் மற்றும் வீதி விபத்துக்கள் அதிகம் இடம்பெறுகின்றன எனவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ள னர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். (ரி1-113)



## நல்லூரான் சிறப்பம்சம்

### நல்லூரில் நம்முருகன் கொடியேறினான்

நல்லூரில் நம்முருகன் கொடியேறினான்
எல்லையில் ஆனந்தம் ஏனோ இல்லை
தொல்லைமிகு வைரசின் தொற்றுதலால்
எல்லாமே தலைகீழாய் மாறியதோ
நல்லைநகர் வாழுகின்ற நம் முருகா உன்
எல்லைக்கும் வர முடியாத் துயரம் இங்கு
எப்போது எம் வாழ்வில் உயரம் இங்கு

- புலோலியூர் வேல்நந்தன்

### அருள் தரும் கொடியேற்றம்!

வேற்பெருமான் வீற்றிருக்கும்
ஆலயத்தின் கொடியேற்றம்!
நாற்றிசையும் புகழோங்கு
நல்லையிலே கொடியேற்றம்!
ஆற்றலெல்லாம் கொண்டவனின்
திருவிழாக் கொடியேற்றம்!
போற்றிசெயும் அடியவர்க்கு
அருள் தரும் கொடியேற்றம்!

- நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

### வல்லமையை தந்துவிடு

நல்லைநகர் வீற்றிருந்து நல்லாட்சி செய்பவனே
தொல்லை யகற்றி தொழுவோரை இரட்சிப்பவனே
வல்லமையைத் தந்துவிடு கொரோனாவை விரட்டியே
கல்லையொத்த மனமுருகி உனைவந்து வணங்கிடவே.
எல்லையிலா இன்புருவே இணையிலா எழிலழகே
இல்லையெனாது தந்திடுவாய் உன்னருளை கொடியேறியே.

தெல்லியூர் தேவி.

### வடிவேலனுக்கு கொடியேறுது

நல்லூரில் கொடி ஏறுது கொடி ஏறுது
அலங்காரக் கந்தனுக்கு கொடி ஏறுது
அழகன் முருகப்பெருமானுக்கு கொடி ஏறுது
வடிவேலனுக்கு கொடி ஏறுது.

வாழ்த்துக்கள் இசைத்து என் பாடல்'
ஏ, மனமே கடவுளுக்கு வாழ்த்திசைக்கிறாயா?
மக்கே உனக்கு கொஞ்சம் கிஞ்சமான கர்வமல்ல.
என்ன செய்வது மண்ணிலே நான் வாழ்வது கந்தனால்த்தானே!

காலதேவன் என் கரங்களை இறுகப்பற்றியே
இழுத்துச் செல்கையில் வந்தாரே வடி வேலவன்
ஆம் வந்தாரே வடி வேலவன் மயில் மீதிலே
யாம் இருக்கப் பயம் ஏன் என்றே
அதனாலே வாழ்த்திசைத்தே என் பாடல்.

மீசாலையயூர்க் கமலா



# அரசியல் மேடையில் பேசும் விடயம் அல்ல மகப்பேறு!

## பிரதமர் மஹிந்தவின் கருத்துக்கு ஹிருணிகா கடும் கண்டனம்



கொழும்பு, ஜூலை 25

பெண்களின் மகப்பேற்று சுதந்திரம் என்பது ஒவ்வொரு கணவன் மனைவியினதும் தனிப்பட்ட விடயமாகும். இது அரசியல் மேடையில் பேசப்பட வேண்டிய விடயமல்ல என்று தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்தொன்றுக்குக் கடும் கண்டனமும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் சஜித் பிரேமதாஸ மற்றும் அவரது மனைவி ஜலனி பிரேமதாஸ ஆகியோரை விசனப்படுத்தும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வெள்ளிக்கிழமை பிரதமர் அலுவலகத்தின் முன்னால் அமைதியான முறையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் அமைப்புக்கள் பல கலந்து கொண்டிருந்ததோடு அதன் இறுதியில் பிரதமர் அலுவலகத்தில் கடிதம் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே ஹிருணிகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒரு நாட்டின் தலைவராக இருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ இவ்வாறான கருத்தை தெரிவித்து முழுப் பெண் இனத்தையும் வேதனைப்படுத்தியுள்ளார். கட்சி இன மத பேதம் இன்றி அனைவரும் இந்த கருத்தால் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.


இவ்வாறான கருத்துக்கள் மூலம் அவர் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தும் முன்னுதாரணம் என்ன? இந்தக் கருத்து ஒரு பெண் அல்லது தம்பதியர் மீது மாத்திரம் கூறப்பட்டதாக நாம் கருதவில்லை. குழந்தைப் பாக்கியம் அற்ற அனைத்து பெண்கள் மீதும் முன்வைக்கப்பட்ட விமர்சனமாகவே கருதுகின்றோம்.

இவ்வாறான தனிப்பட்ட கருத்துக்களை அரசியல் மேடைகளில் மாத்திரமல்ல. பொது மேடைகளிலும் தெரிவிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு அனைவரிடமும் கோருகின்றோம் - என்றார். (எ)




# சிறுபான்மை பிரதிநிதிகள் அரசுக்கு பெரும் தலைவலி

## ஹக்கீம் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 25

சிறுபான்மை இனத்தவர்கள் நாடாளுமன்றத்தில் இருப்பது அரசுக்குத் தலைவலியாக மாறியுள்ளது. சிறுபான்மைப் பிரதிநிதிகள் நாடாளுமன்றில் அதிக அழுத்தங்களைக் கொடுப்பதால் அவர்களைச் சிதறடிப்பதற்கு பொதுஜன பெரமுன அரசு பல்வேறு வழிகளைக் கையாள்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

கண்டி மாவில்மடையில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கண்டி மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் வேட்பாளரும் வெற்றி பெற முடியாதளவுக்கு வாக்குகளைச் சிதறடிப்பதற்காக கண்டி மாவட்டத்தில் 22 முஸ்லிம் வேட்பாளர்களை ஊக்கப்படுத்திச் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளனர். வாக்குகள் சிதறடிக்கப்பட்டு, இறுதியில் ஒரு முஸ்லிம் வேட்பாளரும் வெற்றி பெறமாட்டார்.


பொதுஜன பெரமுன அரசு இவ்வாறான குறுகிய நோக்கம் கொண்ட வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு, தமக்குத் தேவையான அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. 19ஆவது அரசமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்கு நாட்டின் சிறுபான்மை நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் அரசுக்குப் பெரும் தடையாக இருக்கின்றது.

அதனால் மிகவும் பொருத்தமான வேட்பாளரை தெரிவு செய்து, வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜனாதிபதித் தேர்தலில் இனவாதத்தை பரப்பி, வாக்காளர்களை ஏமாற்றி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவானார். பொதுத் தேர்தலில் பயங்கரவாத

செயல்களை கூறி, முஸ்லிம் பிரதிநிதிகளை நாடாளுமன்ற முறையில் இருந்து நீக்கும் இரகசிய வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்- என்றார். (எ)

# மனோ தொடர்பாகச் சிறிதரன் கூறியது கட்சி நிலைப்பாடல்ல

## கே. வி. தவராசா தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 25

மனோ கணேசனை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டியது கொழும்புத் தமிழர்களின் கடமை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்திருக்கின்றமை கூட்டமைப்பினது உத்தியோகபூர்வ கருத்தல்ல.

இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணியும் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவருமான கே.வி. தவராசா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றில், கொழும்பு மாவட்டத்தில் அனைத்து இன மக்களும் வாழுகின்ற மாவட்டம். அங்கு வசிக்கின்ற சிங்கள மக்கள் சிங்கள தேசியக் கட்சிகளுக்கே தமது வாக்குகளை வழங்குவார்கள்.

ஆகவே, அங்கு இருக்கின்ற தமிழர்கள் தமது வாக்குகளைச் சிதறடிக்காது தமது விருப்பு வாக்குகளை மனோ கணேசனுக்கு வழங்கிகடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கொடுத்த ஆணையை விட பல மடங்கான ஆணையை வழங்க வேண்டிய கடமை உள்ளது. இந்த ஜனநாயகக் கடமையை இந்த காலத்தின் கட்டளையை கொழும்பு மாவட்டத்தில் வாழும் தமிழர்கள் நிறைவேற்றுவார்கள் என நம்புகின்றேன் என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் கருத்தானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது கருத்தோ அல்லது தமிழரசுக் கட்சியின் கருத்தோ அல்ல. அது அவரின் தனிப்பட்ட கருத்தாகும். எதிர்காலத்தில் இது தொடர்பாக ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் - என்றார். (எ)

# இன நல்லிணக்கம் உருவாகவில்லை!

## கடந்த ஆட்சி பற்றி கூறுகின்றார் பிரதமர் மஹிந்த

நல்லாட்சி அரசு தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பப் பெருமளவு நிதியைச் செலவிட்டது. ஆனால் இனங்களிடையே நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தவில்லை. இருந்த நல்லிணக்கம் கூட இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. வாக்குகளைப் பெறுவதற்கான போலி வாக்குறுதிகளை நாம் வழங்க மாட்டோம் இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாறை கல்முனையில் நேற்று நடந்த பரப்புரைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நல்லாட்சி அரசில் தேசிய நல்லிணக்க அமைச்சு இருந்தது. ஆனால் இனங்களுக்கு இடையே நல்லிணக்கம் காணப்படவில்லை. கொழும்பில் உள்ள நட்சத்திர விடுதிகளில் பெருமளவு நிதி செலவிடப்பட்டு நல்லிணக்கம் தொடர்பான நிகழ்ச்சிகளை முன்னெடுத்து இனங்களுக்கு இடையே விரிசலை ஏற்படுத்தினார்கள்.

30 ஆண்டுகாலப் போர் கிழக்கு மாகாணத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் என்பன பல இளைஞர், யுவதிகளுக்கு கேள்விக்குறியாகியது. குறுகிய காலத்தில் போரை முடிவுக்குக் கொண்டுவந்து அனைத்து மக்களின் சுதந்திரம், பாதுகாப்பை உறுதிப்படுத்தினோம்.

நல்லாட்சி அரசில் நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படவில்லை. முஸ்லிம் சமூகத்தினரது வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தன. இனங்களுக்கிடையே முரண்பாடு ஏற்பட்டு பிரச்சினைகள் ஏற்பட்டன. நாங்கள் அனைத்துப் பிரச்சினைகளையும் சுமுகமாகக் கையாண்டோம் - என்றார். (எ)

# ராஜபக்ஷ போன்ற துரோகிகளுக்கு வாக்களிக்காதீர் என்கிறார் சம்பிக்க



கொழும்பு, ஜூலை 25

எதிரணியில் இருந்தாலும் பொது ஜன பெரமுனவில் பல ஆதரவாளர்கள் இருக்கின்றனர். விஜேதாச ராஜபக்ஷ போன்ற சந்தர்ப்பவாத தேசத்துரோகிகளுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மக்களிடம் வேண்டிக்கொள்கின்றேன் என்று ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

விஜேதாச ராஜபக்ஷ என்ற அரசியல்வாதி பற்றி பேசவும் விரும்பவில்லை. நானே நீதியமைச்சர், ராஜபக்ஷவினரை சிறையில் அடைக்க எனக்கு வாக்களியுங்கள் என்று 2015 ஆம் ஆண்டு கூறினார்.

தற்போது அந்தப் பக்கத்துக்குசென்று, நான்தான் ராஜபக்ஷவினரை காப்பாற்றினேன். நானே சட்டத்தை வளைத்தேன் என்று கூறி தனக்கு வாக்களிக்குமாறு கோருகிறார்.

விஜேதாச ராஜபக்ஷவுக்கு பட்டப்படிப்புக்கான சான்றிதழ் எங்கிருந்து கிடைத்தது என்று உதய கம்மன்பில கேட்ட கேள்விக்கு இதுவரை விஜேதாச பதிலளிக்கவில்லை.

தற்போது ராஜபக்ஷவினரை போற்றிப் புகழ்ந்துவரும் உதய கம்மன்பில ஜாதிக ஹெல உறுமயவில் இருக்கும் போது, கோத்தாபய நந்தசேன ராஜபக் ஷவை, "கொனா (மாடு) ராஜபக்ஷ" எனக் குறிப்பிட்டார் - என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (கு)

# தலைவர் பிரபாகரன் தமிழர்களின் கடவுள்

## ஒத்துக்கொண்டார் மொட்டு வேட்பாளர்

**முல்லைத்தீவு, ஜூலை 25**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை தமிழ் மக்களின் கடவுள் என்று விளித்துள்ளார் மொட்டுக் கட்சியின் வேட்பாளர். வன்னியில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளரான ச.கனகரத்தினம் முல்லைத்தீவில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போதே இவ்வாறு விளித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது;
முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்ட காலமாக ஒரு முஸ்லீம் இனத்தவர்தான் அபிவிருத்திக்கு முத்தலைவராக இருந்து வந்துள்ளார். அவர் இருக்கக் கூடாது என்பதற்காக அர சாங்கம் என்னைத் தேர்ந்தெடுத்து அபிவிருத்திக்குழுத் தலைவர் பதவியைத் தந்தது. இந்தமுறை தேர்தலில் போட்டியிடுவதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் என்னை தனி ஒருவனாக பொதுஜன பெரமுன நிறுத்தியுள்ளது.

இது அரசாங்கத்தின் விருப்பத்திற்கும் உண்மையான நோக்கத்திற்குமான திட்டம். எங்கள் மாவட்டத்தின் அபிவிருத்திதான் எமது முக்கிய நோக்கம். எங்கள் மாவட்டம் இறுதிப் போர் காரணமாக நொந்துபோயுள்ளது. இது போரினால் பாதிக்கப்பட்ட மாவட்டம் பல மக்களை இழந்த மாவட்டம். இன்றும் மக்கள் பல்வேறு கஷ்டங்களைச் சந்தித்து வருகின்றார்கள். இதனை மாற்றியமைக்க வேண்டும் என்றால் ஆழுகின்ற கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக வரவேண்டும். அரசாங்கத்துடன் இணைந்தால் மட்டுமே முல்லைத்தீவு மாவட்டத்தில் அபிவிருத்தியைச் செய்யமுடியும்.

அன்று தந்தை செல்வா தமிழ் இனத்தைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்றுசொன்னார். அதனை வேலுப்பிள்ளை பிரபாகரன் பாரம் எடுத்துத்தான் போராட்டத்தை நடத்தியுள்ளார். அன்று அந்தத் தலைமை கடவுள் பக்திஉள்ளதலைமை. அவர்கள் சொன்னதை பிரபாகரன் செய்து கொண்டிருந்தார். அவரும் ஒரு கடவுள்தான். தமிழ் இனத்தை ஒற்றுமையாக்கி இனத்தைப் பலப்படுத்தி ஒரு போராட்டத்தை நடத்தி உலகத்துக்கு தமிழனை அறியவைத்த பெருமை அவரையே சாரும்.

கடந்த பத்து ஆண்டுகள் தமிழர்களின் அரசியலை, அபிவிருத்தியை சம்பந்தனின் கையில் தமிழ்மக்கள் கொடுத்திருந்தார்கள். இந்த பத்து ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கு நல்லது கெட்டது ஏதாவது நடந்ததா என்று சிந்தித்துப் பாருங்கள். இப்போது எங்கள் மக்களுக்கும் மாவட்டத்துக்கும் தேவை அபிவிருத்தி. ஆழும் அரசுடன் இணைந்தால் தான் அபிவிருத்தியைச் செய்ய முடியும். அதிலும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம்தான் செய்யும் - என்றார். (ஐ-19)





2020 பாராளுமன்ற தேர்தல் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தெர்தல் மாவட்டம்


## எதிர்காலத்தை உறுதி செய்ய நிகழ்காலத்தில் கூட்டமைப்புக்கே வாக்களியுங்கள்

### கோருகின்றார் சாணக்கியன்

எமது எதிர்காலத்தை உறுதி செய்ய நிகழ்காலத்தில் நாமனைவரும் சிந்தித்து செயற்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். பலப்படுத்துவதன் ஊடாகவே எங்கள் எதிர்கால இருப்பை உறுதி செய்து கொள்ள முடியும்.

எமது மக்கள் கூட்டமைப்பையே ஆதரித்து ஏகோபித்த ஆதரவை வழங்கி வந்திருக்கின்றார்கள். நாட்டின் இன்றைய அரசியல் நிலைமைகளை அவதானிக்கின்ற போது நாம் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம். அரசியல் தீர்வை நோக்கிய பயணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியான பயணத்தை முன்னெடுப்பதற்கு மக்கள் மீண்டும் தமது ஆதரவை வழங்க வேண்டும். அதிகளவான உறுப்பினர்களின் பலத்துடன் கூட்டமைப்பு நாடாளுமன்றம் செல்கின்ற போதுதான் பேரம்பேச முடியும். எமதுநிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்த முடியும்.

தென்னிலங்கையில் கூட்டமைப்புக்கு எதிராகவே பரப்புரை மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்காக வடக்கு, கிழக்கில் அரசின் முகவர்களாக களமிறக்கப்பட்டிருப்பவர்களும் அதனையே மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கும் வாக்குகள் கூட்டமைப்பைப் பலப்படுத்தும். கூட்டமைப்பு பலம் பெற்றால் அதுவே தமிழர்களின் பலமாகவும் அமையும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக தமிழ் மக்கள் அளிக்கும் வாக்குகள் ஒவ்வொன்றும்எம்மை அழிப்பதற்கான ஆணையை நாமே வழங்குகின்ற ஒரு துர்ப்பாக்கிய செயற்பாடாக அமையும் என்பதனை மறந்துவிடாதீர்கள் - என்றார். (து)



## மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் நிறுவ ஆராய்வு

கொழும்பு, ஜூலை 25

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடமொன்றை நிறுவுவதற்கான திட்டமிடல்கள் வகுக்கப்பட்டு வருகின்றன என்றும் அதன் ஆய்வு நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

உத்தேச மருத்துவ பிரிவை களுத்துறை பொது மருத்[illegible]னையில் அமைக்க எதிர்பார்க்கப்படு[illegible]

சம்[illegible]பட்ட ஒத்துழைப்பு பயிற்சி நடவடிக்கைகளை ஹோமாகம ஆதார மருத்துவமனைக்கு வழங்க ஆலோசிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதன[illegible]டையில் களுத்துறை பொது மருத்துவமனை மற்றும் ஹோமாகம ஆதார மருத்துவமனைகளை போதனா மருத்துவமனை என்ற ரீதியில் தரமுயர்த்துவதற்காக சுகாதாரம் மற்றும் சுதேசிய வைத்திய சேவைகள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## தமிழர் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவோம்

### டக்ளஸ் தெரிவிப்பு

தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற நியாயமான அபிலாசைகளை ஈட்டு வதற்கு எதிராக எந்தவிதமான அழுத்தங்கள், தடைகள் ஏற்பட்டாலும் அவை நிறைவேற்றப்படும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாங்கள் முன்வைத்த நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகள், வேலைத்திட்டங்கள், அதன் வழிமுறைகள் சரியானவையென வரலாறு நிரூபித்து வருகின்றது. விரலுக்கு ஏற்ற வீக்கம் என்ற வகையில் தான் எமது செயற்பாடுகள் அமைந்திருந்தன. சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மக்கள் ஈ.பி.டி.பி. கட்சியின் கரங்களை பலப்படுத்துங்கள்-என்றார். (எ)

## ஜனநாயக வாதிகளையே தெரிவுசெய்ய வேண்டும்

### சங்கையா கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 25

தூய்மையான, நேர்மையான, உண்மையாகவே மக்களைப் பற்றி சிந்திக்கின்ற ஜனநாயகவாதிகளை இந்தத் தேர்தலிலாவது தமிழ் மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் இரா.சங்கையா தெரிவித்தார்.

கிளிநொச்சி விவேகானந்தா நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபை அதிகாரத்தை கையில் வைத்திருந்தவர்கள் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளிடமும், கொடையாளர்களிடமும் இருந்து உதவிகளைப் பெற்று எமது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியிருக்கலாம். அரசு எங்களுக்கு அனுமதிதரவில்லை என்று ஏற்றுக்கொள்ளமுடியாத காரணத்தைக் கூறுவது நகைப்புக்குரியது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இந்தியாவின் மாநிலங்களுக்கிடையே உள்ள அதிகாரத்தை ஒத்த தீர்வையே விடுதலைப் புலிகள் காலத்தில் இருந்து வலியுறுத்தி வந்துள்ளோம். இதுவே நடைமுறைச் சாத்தியமானது. இது சம்பந்தமாக பௌத்த மத பீடாதிபதிகள் உட்பட முன்னாள் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் ஆகியோருடன் பல மட்டங்களிலும் கலந்துரையாடியுள்ளோம். எமது கருத்துக்கு அவர்கள் மறுப்புத் தெரிவிக்கவில்லை - என்றார். (து)

# கட்சிகளின் ஆதரவாளர்களே வன்முறைக்குக் காரணம்

## கபே அமைப்பு சுட்டிக்காட்டு

வவுனியா, ஜூலை 25

**தேர்தல் வன்முறைகளில் கட்சிகளின் ஆதரவாளர்களே ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது. அரசியல்வாதிகள் இணைந்தே பயணிக்கின்றனர்.**

இவ்வாறு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (கபே) தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று வவுனியாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்த அமைப்பின் பிரதிநிதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

தேர்தல் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில், அமைதியான தேர்தலுக்காக ஒன்றுபடுவோம் என்ற நோக்கில் 'கிராமத்துக்கு கிராமம்' என்ற வேலைத்திட்டத்தை நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம்.

தேர்தல் பரப்புரைகள் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் கபே அமைப்புக்குக் கிடைத்துள்ளன. ஒரே கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எதிராக வெறுப்பூட்டத்தக்க பரப்புரைகள் அதிகரித்துள்ளன. பொய்யான பரப்புரைகளும் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. வெறுப்பூட்டத்தக்க பரப்புரைகள் அதிகரிக்கும்போது, வன்முறைகளும் அதிகரிக்கும் என்று தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தெளிவூட்டல்களை வழங்கியுள்ளோம்.

வன்முறைகள் அதிகமாக உள்ள சில பகுதிகளைப் பொலிஸ் திணைக்களத்துக்கு அடையாளப்படுத்தியுள்ளோம். வன்னி மாவட்டத்தில் வவுனியா தொகுதியில் முறைப்பாடுகள் மிகக் குறைவாக உள்ளமை பாராட்டத்தக்கது. மன்னார் மாவட்டத்தில் வெறுப்பூட்டத்தக்க பேச்சுக்கள், பொய்யான பரப்புரைகள் தொடர்பாக அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கட்சிகளின் ஆதரவாளர்களே அதிக அளவில் வன்முறைகளில் ஈடுபடுவதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. அரசியல்வாதிகள் ஒன்றாகவே பயணிக்கிறார்கள். அதுபோல ஆதரவாளர்களும் ஒன்றாக பயணிக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. வடக்கில் யாழ்ப்பாண மாவட்டம் வன்முறைகள் தொடர்பாக முன்னிலை வகிக்கிறது. வன்முறைகளில் ஈடுபடாமல் அமைதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அனைவரும் ஒன்றுபடுவோம் என்ற அழைப்பை விடுக்கின்றோம்.

முக்கியமாக வாக்களிப்புத் தினத்தில் அதன் விகிதாசாரம் அதிகரிக்குமா என்பது சவாலான விடயம். கொவிட்19 வைரஸ் தாக்கத்தின் இரண்டாம் அலையே இதற்கான முக்கிய காரணியாக இருக்கிறது. இந்த முறை தபால் மூல வாக்களிப்பானது என்றுமில்லாத வகையில் குறைவடைந்திருக்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரை அரசுகள் தமக்குத் தேவையான நேரங்களிலேயே தேர்தலை நடத்தும் நிலமைகள் ஏற்பட்டிருந்தன. கொரோனா வைரஸ் தாக்கம் குறைவடைவதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் தேவையாக இருக்கும் என்று உலக சுகாதார அமைப்பு எதிர்வு கூறுகின்றது. சட்டம் இயற்றும் நாடாளுமன்றம் இல்லாமல் மக்கள் பயணிக்கமுடியாது. அதனாலேயே அதிகமான நிதியைச் செலவழித்து வாக்காளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி இந்தத் தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு நடத்துகின்றது. சவால்களுக்கு மத்தியில் இந்தத் தேர்தலை எதிர்கொள்ளவேண்டிய நிலையில் நாட்டு மக்கள் இருக்கின்றார்கள் - என்றார். (எ-110)

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இதுவரை 200 பேர்வரை கைது



கொழும்பு, ஜூலை 25

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் பொலிஸாரால் இதுவரை 200பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன்பாகச் சாட்சியமளித்த பொலிஸ் அதிகாரியான அர்ஜுன மஹீன்கந்த தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் 2019 ஒக்ரோபர்மாதத்தில் தேசிய தௌஹீத் ஜமாத்தின் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைக்காக இணைக்கப்பட்டேன். கடுவாப்பிட்டிய தேவாலய குண்டுத்தாக்கு தல்தாரி யின் மனைவியான சாரா தொடர்பில் இம்மாதம் ஆறாம் திகதியன்று எமக்கு தகவல் ஒன்று கிடைத்தது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின் அவர் மட்டக்களப்பு மாங்காடு என்ற இடத்துக்கு தப்பிச்சென்றார் என்ற தகவல் கிடைத்தது. சாரா என்று நம்பப்படுபவரை 2019 செப்டம்பர் மாதத்தில் ஒருநாள் மாங்காடு பிரதான வீதியில் இரண்டு பேருடன் நடந்து சென்றதைத்தாம் கண்டதாக தகவல் வழங்கியவர் குறிப்பிட்டுள்ளார்.

சாராவின் வீட்டுக்கு அருகில் நீண்ட காலமாக வசித்து வந்தவர் என்ற அடிப்படையில் சாராவை தாம் அடையாளம் கண்டதாக தமக்கு தகவல் தந்தவர் தன்னிடம் கூறியதாக பொலிஸ் அதிகாரி சாட்சியம் அளித்துள்ளார்.

சாரா மன்னார் ஊடாக இந்தியாவுக்கு தப்பிச்சென்றதாகவும், அதற்கு சாராவின் கணவரும் மற்றும் ஒருவரும் உதவியதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதில் ஒருவர் தடுப்புக்காவலில் உள்ளார். சாராவை இந்தியாவுக்கு செல்ல உதவியவர் என்று சந்தேகிக்கப்படுகின்றவர் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டதாக தகவல் கிடைத்துள்ளது என்று அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். (எ)

# 68 வீத வாக்காளர் அட்டைகள் இதுவரை விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

இதுவரையில் 68வீதமான வாக்காளர் அட்டைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார். வாக்காளர் அட்டைகள் விநியோகப் பணிகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இதுவரை 1,10,26,558 வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க விசேட தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. வாக்காளர்கள் அன்றைய தினம் வீட்டில் தங்கியிருந்த தமக்கான வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்" எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் இதுவரை 65 வீதமான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் தமது தபாலகங்களில் 29ஆம் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பிறப்புச் சான்றிதழ்களில் இனத்தை நீக்க விடோம்!

## விமல் வீரவன்ச கூறுகிறார்



பிறப்புச் சான்றுப் பதிவின் போது இனம், பெற்றோரின் திருமண விவரம் ஆகியவற்றை நீக்குவதற்குப் பதிவாளர் திணைக்கள நாயகம் எடுத்துள்ள தீர்மானத்துக்கு ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம் என்று கைத்தொழில் அபிவிருத்தி வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கடுவலை பிரதேசத்தில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பாரம்பரிய உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது. தேசியம், இனத் தனித்துவம் ஆகியவற்றை முன்னிறுத்தியே அரசாங்கம் செயற்படும். இனத்துக்கும், நாட்டுக்கும் முக்கியவத்துவம் வழங்கியதன் காரணமாகவே மக்கள் தொடர்ந்து ராஜபக்ஷமாருக்கு ஆதரவு வழங்குகிறார்கள்.


2015ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் இடம்பெற்ற தவறு தொடர்ந்து திருத்திக் கொள்ளப்பட்டு வருகின்றது. ஜனாதிபதியின் கொள்கைத் திட்டங்களை மக்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். தேசியம், பாரம்பரிய மரபுரிமைகள் ஆகியவை எமது அடையாளங்கள். அரசியல் காரணங்களுக்காக தேசிய மரபுரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் மரபுரிமைகள் தொடர்பில் ஆராய விசேட ஜனாதிபதி செயலணியை நியமித்தார். பிறப்புச் சான்று பதிவின்போது இனம் தொடர்பான விடயங்களை நீக்குவதாக பதிவாளர் திணைக்கள பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளமை திருத்திக்கொள்ளப்பட வேண்டிய விடயம்.

எமது அரசாங்கம் தேசியத்தையும், நாட்டின் தனித்துவத்தையும் முன்னிறுத்தி செயற்படும் என்பதால் குறிப்பிட்ட தீர்மானத்துக்கு ஒருபோதும் ஆதரவு வழங்கவும் முடியாது. அதை நிறைவேற்றவும் இடமளிக்க முடியாது. இது விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்குக்கு தெரியப்படுத்தியுள்ளேன் - என்றார். (எ)

# பௌத்த மரபுரிமை உணர்வுகள் சிங்கள பௌத்தர்களுக்கே இருக்கும்

## தயாசிறி ஜயசேகர கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 25

சிங்கள பௌத்த மரபுரிமைகள் தொடர்பான உணர்வுகள் சிங்கள பௌத்தர்களுக்கே இருக்கும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருணாகலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரண்டாவது புவனேகபாகு மன்னனின் அரச மண்டபம் அழிக்கப்பட்டமை குறித்து தயாசிறி ஜயசேகரவும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட முதன்மை வேட்பாளரான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் பகிரங்கமாக விமர்சனங் களை முன்வைத்து வருகின்றனர்.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ)

# கார் அனுமதிப்பத்திரத்துக்காக அரசிடம் கெஞ்சியவரே விக்கி

## போட்டுடைக்கின்றார் சத்தியலிங்கம்

வவுனியா,ஜூலை 25

மாகாணசபையில் தனக்குக் கிடைத்த கார் அனுமதிப் பத்திரத்தை அமைச்சர்களுக்கான அனுமதிப்பத்திரமாகத் தரக்கோரி அரசாங்கத்திடம் கெஞ்சியவர், இன்று சம்பந்தனின் காரைப்பற்றி பேசுகின்றார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் தொகுதி வேட்பாளரும் மருத்துவருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது;
வன்னித் தேர்தல் தொகுதியில் இனப் பரம்பலையும், இன விகிதாசாரத்தையும் மாற்றி இந்த பிரதேசத்தில் ஆண்டாண்டு காலமாக ஆண்டு வருகின்ற தமிழர்களை சிறுபான்மையினராக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தத் தேர்தலை நாங்கள் மிகவும் முக்கியமான தேர்தலாகப் பார்க்க வேண்டும். இன்று எங்களுக்கு தெரியாத பல கட்சிகள் களமிறங்கியுள்ளன. ஏன் அவர்கள் வந்தார்கள். அவர்களுக்கு இந்த மண்ணோடு எந்த சம்பந்தமும் இல்லை. மண்ணுக்காக உழைக்கவுமில்லை. அவ்வாறு இருக்கும்போது அவர்களுக்குள்ள அக்கறை என்ன?
கூட்டமைப்பு பெரும் விருட்சம். தமிழ் மக்களின் ஏக பிரதிநிதித்துவம். ஆகவே கூட்டமைப்பை ஒழிப்பதனூடாக தமிழ் மக்களை ஒழித்து விடலாம் என எண்ணுகின்றனர். இன்று எங்களுடைய பிரதேசத்தில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த சக வேட்பாளர்கள் தங்களுடைய பரப்புரைக் கூட்டங்களில் பேசும் பேச்சைப் பார்க்கும்போது அருவருப்பாக இருக்கின்றது. வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் மிகவும் இழிவான பேச்சைப் பேசியிருக்கின்றார். கூட்டமைப்பின் தலைவரை, அவரை இந்த அரசியல் அரங்குக்குக் கூட்டி வந்தவரை ஆதாரங்கள் இல்லாமல் குழந்தைகளைப் போல் சிறு சிறு விடயமாக மிகவும் இழிவாகப் பேசியுள்ளார். அவரின் காரையும் வீட்டையும் பற்றிப் பேசுகின்றார். இன்று தமிழ் மக்களின் பிரச்சினை இதுதானா? தமிழர்கள் தங்களுடைய நிலங்களை இழந்து கொண்டு போகின்றனர். பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இன அழிப்பு நடைபெறுகின்றது. இங்கு பல போர்க்குற்றங்கள் புரியப்பட்டுள்ளன. . அவற்றைப்பற்றி பேச வேண்டிய தலைவர்கள் சம்பந்தனின் வீட்டையும் காரையும் செருப்பையும் பற்றிப் பேசுகின்றனர். இன்று காரைப்பற்றி பேசுகின்ற முன்னாள் முதலமைச்சர் தனக்கு கிடைத்த கார் அனுமதிப்பத்திரத்தை அமைச்சருக்குரிய கார் அனுமதிப்பத்திரமாக மாற்றித்தாருங்கள் எனக் கோரி கடைசி மட்டும் அரசாங்கத்திடம் கெஞ்சி மன்றாடி கடைசியில் அந்த அனுமதிப்பத்திரமும் இல்லாமல் போனார்.
மற்றவர்களைப் பற்றிப் பேசும்போது, தான் யார் என்பதை யோசிக்கவேண்டும். வடக்குமாகாண சபையின் நிதியில் எத்தனையோ தடவைகள் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் விமானத்தில் பயணம் செய்தவர். வடக்கு மாகாண மக்களுக்கு வந்த நிதியில் தன்னால் வீதியால் செல்ல முடியாது என விமானத்தில் பயணம் செய்திருந்தார். மக்களின் நிதியில் யாழ்ப்பாணத்தில் ஆடம்பர வீட்டில் வாழ்ந்தார். இவற்றையெல்லாம் மறந்து விட்டு இன்று பேசுகின்றார் - என்றார். (ஐ

## உரிமையை விட்டுக்கொடுக்காதவர் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர்

### பாராட்டினார் முபீன்

கிழக்கு சிறுபான்மை மக்களின் உரிமையையும் மாகாண சபையின் அதிகாரத்தையும் பேரினவாதத்துக்கு விட்டுக் கொடுக்காத தலைவனாக முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமதை நான் பார்க்கிறேன் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யு.எல்.எம். என்.முபீன் தெரிவித்தார்.
ஏறாவூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஒரு சமூகத் தலைவன் எல்லா வகையிலும் மக்களுக்கு முன்னுதாரணமாய்த் திகழ வேண்டும். அந்த வகையில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளருமான நஸீர் பல்துறை சார் நிபுணர், இவை அனைத்துக்கும் மேலாக இன மத பேதமில்லாது மக்களை நேசிக்கும் ஒரு தலைவனாக இருக்கின்றார். கிழக்கு மாகாண சபையின் அதிகாரம் எனும் ஒட்டு மொத்த சிறுபான்மை இனங்களின் அந்தஸ்தை ஒரு சில அதிகாரிகளும், ஆளுநரும், மத்திய பேரினவாத அரசும் தட்டிப் பறிக்க முயற்சித்தபோது நெஞ்சுறுதிகொண்டு அதனை எதிர்த்து சிறுபான்மை மக்களின் தன்மானத்தைக் காத்த தலைவன். அவர் தலைமையிலான கிழக்கு மாகாண சபை ஆட்சியிலே இதுநடந்தது. இப்பொழுது அவரால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்றுறை சார்ந்த முயற்சிகளில் இன பேதம் பார்க்காது ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பை வழங்கியதன் மூலம் சுமார் 2000 ஆயிரம் தமிழ் சமூக குடும்பங்கள் வாழ்வாதாரத்தைப் பெற்று வளம் கொழிக்க வாழக் கிடைத்திருக்கிறது - என்றார். (ஐ-46)

# மாற்றம் இல்லாததால் அரசியலில் குழப்பமாம்

## கூறுகிறார் த.தே.ம.முவின் வன்னி வேட்பாளர் தவபாலன்

முல்லைத்தீவு, ஜூலை 25
பத்து ஆண்டுகளாக எங்கள் மக்களின் அடிமட்டத்தில் மாற்றம் வராத காரணத்தால்தான் இந்த அரசியல் குழம்பிப் போய் இருக்கின்றது. அரசியல் வெற்றிடமாக இருக்கின்றது. அரசியல் தலைமைத்துவம் தேவைப்படுகின்ற தேவை எழுகின்றபோது அதனைப் பயன்படுத்தி மக்களின் வாக்குகளை எடுத்துவிடலாம் என்று சிந்திக்கின்றார்கள். இந்த நிலைக்கு தமிழ் மக்களால் வளர்த்து விட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்புத்தான் காரணம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் எஸ்.தவபாலன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
பத்து ஆண்டுகளாக மக்கள் ஆதரித்த தமிழ்த் தலைமைகள் அரசாங்கத்துடன் சேர்ந்து மக்களை அடைவு வைத்துள்ளார்கள். அரசியலை சரியாகக் கொண்டு சென்றிருந்தால் வன்னி மண்ணில் 45 கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் வந்திருக்காது. ஐக்கிய நாடுகள் சபையில் இந்த அரசாங்கத்துக்கு நான்கரை ஆண்டுகள் காலஅவகாசம் கொடுத்து காணாமல் போய் தங்கள் பிள்ளைகளைத் தேடிவந்த 65 பெற்றோர்களை நாங்கள் இழந்துள்ளோம். இந்தத் தேர்தலில் மக்கள் மாறவேண்டும். மாற்றத்தின் ஊடாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு வாக்களிக்க வேண்டும் - என்றார்.



(ஐ-19)



# தமிழர் தமிழருக்கே வாக்களியுங்கள்! காரணமும் கூறுகின்றார் உதயராசா



வவுனியா, ஜூலை 25

**தமிழ் மக்களே! முதலில் தமிழருக்கு வாக்களிக்கின்ற மனநிலையை உருவாக்கிக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தீர்மானியுங்கள் என்று தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் முதன்மை வேட்பாளரும், சிறீரெலோ கட்சியின் செயலாளர் நாயகமுமான ப. உதயராசா தெரிவித்துள்ளார்.**

மகாறம்பைக்குளம் ஶ்ரீராமபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் மாற்று இனத்தவர்கள் வாக்களிக்க மாட்டார்கள். இன்று முஸ்லிம்களுக்காக நீங்கள் வீடுவீடாகச் சென்று வாக்குக் கேட்கின்றீர்கள். அவர்கள் யாராவது இஸ்லாமிய உடையணிந்து கொண்டு வீடு வீடாக வாக்கு கேட்க வருகின்றார்களா? இல்லையே! எல்லாவற்றுக்கும் தமிழ் இளையோரைப் பயன்படுத்துகின்றார்கள். இந்தநிலைமை மாற வேண்டியது காலத்தின் கட்டாயம்.

நாங்கள் மாற்று இனத்தவருக்கு வாக்களித்தால், அவர்கள் இங்கு மாற்றுக் குடியேற்றங்களை மேற்கொண்டு வடக்கு, கிழக்கில் பெரும்பான்மை இல்லாமல் சிறுபான்மை இனத்தவர்களாகும் ஆபத்தான நிலையை நாங்கள் சென்றடைவோம். ஆபத்தான நிலை ஏற்பட்டால் அவர்களுக்காக வாக்குக் கேட்க வந்தவர்கள் நினைத்தாலும் அதனை மாற்ற முடியாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

15ஆண்டுகளாக வன்னிப் பெருநிலப்பரப்பில் 90வீதமான தமிழர்கள் வசிக்கின்றனர். ஆனால் அபிவிருத்திக்குழுவின் தலைவராகவும் அமைச்சராகவும் ரிஷாத் பதியுதீன் தான் இருந்திருக்கின்றார். அதன் விளைவால்தான் அவருக்கு பெருமளவு வாக்குகளைப் பெற்றுக்கொடுத்த படித்த தமிழ் இளையோர், இன்று ஆடைத் தொழிற்சாலைக்கும், கூலிவேலைக்கும், கச்சான் பிடுங்குவதற்கும் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

எங்களின் பிள்ளைகளைவிட குறைந்த மதிப்பெண் பெற்றவர்களுக்கு குறைந்த தகைமை உடையவர்களுக்கும் இன்று அரச வேலைவாய்ப்பு வழங்கியுள்ளனர். அவர்களை எங்களுடைய பிரதேசத்தில் சமுர்த்தி அலுவலர்களாகவும், கிராம அலுவலர்களாகவும் நியமித்துள்ளனர். தங்களுக்குரிய மண்வீதிகளை தார் வீதிகளாக மாற்றி இங்கு இருக்கக்கூடிய காடுகளை அழித்து பெறுமதியான இடங்களில் வீடுகள் அமைத்துக் கொடுத்து குடியேற்றங்களை விரிவுபடுத்துகின் றார்கள்.

நாங்கள் எங்களுடைய வீட்டுத் தேவைக்கு ஒரு தடி வெட்டினால் கூட எங்களைக் கைது செய்கிறார்கள். அங்கே பல்லாயிரம் ஏக்கரை வெட்டி குடியேற்றம் செய்திருக்கின்றார்கள். அவர்களுக்கு கிடைக்கும் வீட்டுத்திட்டத்தில் காட்டை அழித்து வீட்டைக் கட்டுகின்றார்கள், மின்சாரத்தை வழங்குகின்றனர். வீதியை அமைக்கின்றார்கள். அதற்குப் பிறகு அவர்கள் அங்கு குடியேறுகின்றார்கள்.

எங்களுக்கு ஐந்து இலட்சத்துக்கு வருகின்ற வீட்டுத்திட்டம் முதற் கட்டமாக 50 ஆயிரம் வழங்கப்படும். ஐந்தடியில் அத்திபாரம் வெட்ட வேண்டும். அந்த வேலைகளுடன் காது மூக்கில் இருக்கின்ற அனைத்தும் போய்விடும்.

சிறந்த மேசனைப்பிடித்து வீடு கட்டுவதற்கு பணம்போதாது. இவ்வாறு ஐந்து இலட்சம் வீட்டுத்திட்டம் என்று எங்கள் மக்களை வதைக்கின்றனர் - என்றார்.

(த-110)

# பணமின்றி மக்கள் அவதிப்படுகின்றனர் மஹிந்தவிடம் கேட்டால் சளாப்புகிறார்

## கடுமையாகச் சாடுகின்றார் சஜித்



பதுளை, ஜூலை 25

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மக்களிடம் பணம் இல்லை, பிள்ளைகளுக்கு உணவு பெற்றுக் கொடுப்பதற்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகள் பற்றி மக்கள் கேள்வி எழுப்பினால் பிரதமர் மஹிந்த வேறு சிந்தனையில் இருக்கின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பதுளைப் பசறை பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்டதுறை மக்களின் முன்னேற்றத்துக்காக பல்வேறு செயற்றிட்டங்களை தங்கள் ஆட்சியில் முன்னெடுத்தோம் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, அவர்களது நன்றிக் கடனைத் தீர்க்கும் வகையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸை பெருந்தோட்டத்துறை அமைச்சராக நியமிப்பதாகவும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தி சாதாரண மக்களின் நலனைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடு முழுவதும்சென்று தேவையற்ற பிரச்சினைகளைப் பேசி வருகின்றார். மக்கள் தங்கள் பிரச்சினைகள் தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பினால் அவர், வேறு சிந்தனையில் இருக்கின்றார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தருவதாக தெரிவித்த ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை இந்த அரசு கொடுத்துள்ளதா? நாங்கள் ஆயிரத்து 500 ரூபா பெற்றுத் தருவதாகத் தெரிவித்தோம். அதனைக் கட்டாயம் செய்வோம்.

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களை தொடர்ந்தும் தொழிலாளர்களாக வைத்திருக்க நாங்கள் விரும்பவில்லை. உங்களை முன்னேற்றுவதே எமது நோக்கம். ஒரு வருடத்துக்கு எரிபொருள் விலையை மாற்றுவதில்லை என்று அரசு முடிவெடுத்துள்ளது. நாங்கள் ஆட்சிக்கு வந்து 24 மணித்தியாலங்களில் எரிப்பொருள் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுப்போம். -என்றார்.

(த)




# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும்

## வலியுறுத்துகின்றார் ஆனல்ட்



யாழ்ப்பாணம், ஜூலை 25

தமிழ் மக்கள் தமது வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரமே வழங்கவேண்டும். அதுவே தமிழ் இனத்தின் விடிவுக்கு வழிவகுக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் இம்மானுவல் ஆனல்ட் தெரிவித்தார்.

புத்தூர் ஆவரங்காலில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது பல்வேறு விமர்சனங்கள் இருக்கலாம். அது தொடர்பில் ஆராய்ந்து நிவர்த்திசெய்து தமிழ்த் தேசியத்தின் விடிவுக்கான பயணத்தில் தொடர்ச்சியாகப் பயணிக்க வேண்டுமே தவிர இடையிலே நின்று ஒவ்வொன்றுக்கும் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

எம் இனத்தை கூறுபோடுவதற்காக சிங்களக் கட்சிகளின் ஊடாக பல்வேறு முகவர்கள்; அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்ற மாயையை காட்டிக் கொண்டு வாக்குக்கேட்கின்றனர். சிங்களக் கட்சிகளில் வாக்குக் கேட்கும் எவருக்கும் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்க முடியாது. தமிழ் மக்கள் சிங்களக் கட்சிகளுக்கு எமது பகுதிகளில் துளியும் இடம் இல்லை என்பதை தமது வாக்குகளால் காண்பிக்க வேண்டும். சிங்களக் கட்சிகளை மக்கள் இந்த முறை முற்றாக நிராகரிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்று வாக்குக் கேட்போரும் மறைமுகமாக சிங்கள அரசின் எதிர்பார்ப்பை நிறைவுசெய்பவர்களாகவே செயற்படுகின்றனர். கூட்டமைப்பைச் சிதைப்பதே இவர்களின் எண்ணம்.

கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற எந்தக் கட்சியினாலும் அதிக ஆசனங்களைப் பெற முடியாது. உதிரிக் கட்சிகள் ஓர் ஆசனத்தை பெறுவதற்காகவே தீவிரமாகச் செயற்படுகின்றன. ஓர் ஆசனத்தைப் பெற்றால் எதனையும் சாதிக்க முடியாது - என்றார். (த)

# கூட்டமைப்பு எந்தக் காலத்திலும் தமிழருக்குத் துரோகம் செய்யாது

## பரப்புரையில் புவனேஸ்வரன் தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஜூலை 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தக் காலத்திலும் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்யாது என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி வேட்பாளர்கள் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வினோநோகராதலிங்கம் ஆகியோரை ஆதரித்து முல்லைத்தீவு மாவட்டத்தில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் முதலமைச்சர் கூட்டமைப்பைப் பற்றி விமர்சனம் செய்கின்றார். அவர் மாகாண சபையில் முதலமைச்சராக இருக்கும் காலம் வரைக்கும் கூட்டமைப்பில் ஒட்டிக்கொண்டிருந்தார். பதவிக்காலம் முடிந்தவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவருக்கு பிழையாகத் தெரிந்தது. அதனைப்போன்றுதான் அதற்கு முன்பு இருந்து விலகிச் சென்றவர்கள் எல்லோரும். இருக்கும் வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அவர்களுக்கு பதவி தேவைப்பட்டது. பதவி முடிகின்ற காலம் வரும்போது கூட்டமைப்பு பிழையாகத் தெரிகின்றது.

கூட்டமைப்பை உடைக்கின்ற செயற்பாடுகளில் வன்னியில்தான் அதிகமாக நடமாடிக்கொண்டிருக்கின்றார்கள். பெரமுன கட்சியினர் சுயேச்சையாக உலாவுகின்றனர். உதயராசா, பிரபா கணேசன் மற்றும் ரட்ண சிறி போன்றவர்கள் கூட்டமைப்பைச் சிதைக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே மக்கள் தெளிவாக முடிவெடுக்க வேண்டும் - என்றார்.

(த-19)

## குழந்தைகள் இல்லாததால் மஹிந்தவைவிட மோடி தகுதி குறைந்த நபரா?

*மங்கள செருப்படி!*

கொழும்பு, ஜூலை 25

குழந்தைகள் இல்லாமையின் காரணமாக நரேந்திரமோடி மஹிந்த ராஜபக்சவை விடவும் தகுதி குறைந்த தலைவரா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் நிதி அமைச்சரான மங்கள சமரவீர.


பொதுத்தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, ஜலனி பிரேமதாஸவின் மகப்பேற்றுச் சுதந்திரத்தை இழிவுபடுத்தும் வகையில் கீழ்த்தரமான கருத்து வெளியிட்டமை தொடர்பில் நாட்டில் கடும் எதிர்ப்பலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை மஹிந்த ராஜபக்சவின் கருத்தைக் கண்டிக்கும் விதமாக சர்வதேச ரீதியில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்புபவர்களை ஊக்குவிக்கும் 'சேன்ஜ்' என்ற பிரபல சிவில் அமைப்பின் ஊடாக சிவில் சமூக செயற்பாட்டாளரொருவர் ஐக்கிய நாடுகளுக்கு அனுப்பிவைப்பதற்காக 'பெண்களின் மகப்பேற்றுச் சுதந்திரம் என்பது அரசியலுக்கான ஓர் ஆயுதம் அல்ல என்பதைப் பிரதமருக்குச் சொல்லுங்கள்' என்ற தலைப்பில் மனுவொன்றை வெளியிட்டிருப்பதுடன், அதில் சுமார் 500 பேர் வரையில் கையெழுத்திட்டுள்ளனர். அதுமாத்திரமன்றி தனிநபரொருவரின் மகப்பேற்றுச் சுதந்திரத்தை அரசியல் பிரசார மேடைகளில் பேசுபொருளாக்குவதைக் கண்டித்து பிரதமர் அலுவலகத்திற்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டமொன்றும் மேற்கொள்ளப்பட்டது. இத்தகையதொரு பின்னணியிலேயே மங்கள சமரவீரவும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கருத்தைக் கண்டனம் செய்யும் வகையில் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர், 'குழந்தைகள் இல்லாமையின் காரணமாக நரேந்திரமோடி மஹிந்த ராஜபக்சவை விடவும் தகுதி குறைந்த தலைவரா? அண்மைக்காலத்தில் எமது நாட்டின் அரசியல் வாரிசுகளின் தரத்தையும் தகுதியையும் பார்க்கும் போது, குழந்தை இல்லாதவராக இருப்பதென்பது எதிர்காலத்தில் சிறந்த அரசியல் தலைவர்களின் உருவாக்கத்திற்கு உதவக்கூடிய முக்கிய நேர்மறைவிடயமாக அல்லவா கருதப்பட வேண்டும்?' என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

# கொரோனா கால மின்கட்டணங்கள் எனது ஆட்சியில் மீளவழங்கப்படும்

*சஜித் அதிரடி அறிவிப்பு*



**கொழும்பு, ஜூலை 25**

**எனது தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மார்ச், ஏப்ரல் மாத மின் கட்டணங்களைச் செலுத்தியவர்களுக்கு அந்தத் தொகை திரும்ப வழங்கப்படும் என்று தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேதாச.**

கண்டியில் நேற்று இடம்பெற்ற பரப்புரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் நாட்டு மக்களை ஏமாற்றிவரும் இந்த அரசாங்கத்தை விரட்டியடித்து, ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஆட்சியை மலரச் செய்வதற்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்குவர்ர்கள் என நம்புகின்றோம்.

பெருந்தொட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படும் என ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் உறுதியளித்திருந்தது. அந்தத் தொகை கிடைத்துவிட்டதா?. இல்லை. இவ்வாறுதான் இந்த அரசாங்கம் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது. எமது ஆட்சியின்கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. அந்த உறுதிமொழியை நிச்சயம் நிறைவேற்றுவோம். அதேபோல் மக்களுக்கு 20 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கான பொருளாதாரத் திட்டமும் எம்மிடம் உள்ளது. ஆட்சிக்கு வந்து 24 மணிநேரத்துக்குள் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படும். உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் குறைந்தும் இந்த அரசாங்கம் அதன் நன்மையை நாட்டு மக்களுக்கு வழங்கவில்லை. சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவிலும் கைவைத்துள்ள இந்த அரசாங்கம், மின்கட்டணம் தொடர்பிலும் போலியான அறிவிப்புகளை விடுத்து வருகின்றது.

மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான மின் கட்டணம் இல்லாது செய்யப்படும் என கூறப்பட்டது. ஆனால், அறவிடப்பட்டுள்ளது. மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மின்கட்டணத்தை செலுத்தியவர்களுக்கு எமது ஆட்சியின்கீழ் அந்தக் கொடுப்பனவு மீள வழங்கப்படும் என்பதை கூறிவைக்க விரும்புகின்றேன். நாட்டு மக்களை பலவழிகளிலும் ஏமாற்றிவரும் இந்த அரசாங்கம் அடுத்துவரும் நாட்களில் அரச ஊழியர்களின் சம்பளத்தைக்கூட குறைக்கலாம். மேலும் சிலரை வீட்டுக்கு அனுப்பலாம். இவை தடுக்கப்படவேண்டும். அப்படியானால் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஆட்சி மலர வேண்டும் - என்றார். (ம)

# சஜித் தம்பதியினர் மீதான அநாகரிகமான விமர்சனம்

*மஹிந்தவுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்!*

கொழும்பு, ஜூலை 25

சஜித் தம்பதியினருக்கு குழந்தை இல்லாதமை தொடர்பாக அநாகரிகமான விமர்சனத்தை முன்வைத்த மஹிந்த ராஜபக்ஷவைக் கண்டித்து அலரி மாளிகைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அண்மையில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையொன்றில் கருத்துத் தெரிவித்த மஹிந்த ராஜபக்ஷ, சஜித் தம்பதியினருக்கு குழந்தைகள் இல்லாதமையை தனது தேர்தல் பரப்புரையின்போது விரும்பத் தகாத முறையில் குறிப்பிட்டிருந்தார். இதற்கு இலங்கையெங்கும் பரவலாக எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் மகளிர் அமைப்புக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களால் அலரி மாளிகைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதமரின் கருத்தைக் கண்டித்து பிரதமர் அலுவலகத்தில் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. (ம)

## சஜித் வெற்றிபெற்றால் கௌரவமாக வாழலாம்

*நம்பிக்கையூட்டுகிறார் ரிசாத்*



வவுனியா, ஜூலை 25

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்றால், சிறுபான்மையினர் இந்த நாட்டில் கௌரவமாகவும், மத நல்லிணக்கத்தோடும், உரிமைகளோடும் வாழமுடியும் என்று முன்னாள் கைத்தொழில் வணிக அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னி மாவட்டத்தில் ஆறுபேர்தான் வெற்றி பெற முடியும். ஏனையவர்கள் தேர்தல் முடிந்ததும் மறைந்துவிடுவார்கள். அவர்களில் யார் மக்களுக்கு சேவையாற்றினார்கள். எதிர்காலத்தில் சேவை செய்யக்கூடியவர்கள் யார்?. என்பதை சிந்தித்து செயற்படுவீர்களாக இருந்தால். உங்களுடைய நலன், உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம், கிராமத்தின் தேவைகள் என்பன தீர்க்கப்படும். சஜித் பிரதமரானால் சிறு பான்மையினர் இந்த நாட்டில் கௌரவமாக வாழலாம் - என்றார். (ம-110)

## நூல் வெளியீடு

கொடிகாமம், ஜூலை 25

கே.ரி.பிறவுன்சனின் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழ்மை பிற்பகல் 12.30 மணிக்கு சுன்னாகம் கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள கஜா விருந்தினர் விடுதியில் வடமாகாண உளசமூக வளநிலைய உதவி முகாமையாளர் உதயகலா சிவபாதசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலய ஆசிரியர் வி.ம்திசங்கர் வரவேற்புரையினையும் தென்மராட்சி ஆசிரிய மத்திய நிலைய தொழில் வழிகாட்டல் அதிகாரி க.ஈஸ்வரன் நயப்புரையினையும் நூலாசிரியர் ஏற்புரையினையும் நன்றியுரையினையும் ஆற்றவுள்ளனர். (ம-159)

பாராளுமன்றத் தேர்தல் 2020



யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களே...!

மாற்றுத்திறனாளிகளின் தேவைகள் பலவற்றை நிறைவு செய்த, மன உணர்வுகளை புரிந்து கொண்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர்

வேதநாயகம் தபேந்திரன்
(B.Com (Jaf), PGD.PDS (Jaf), M.A (Jaf))

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழ் அரசு கட்சி
X

1 2 3 4 5 6 7 8 9 10

சார்பில் வேட்பாளராக நிற்கின்றார்.
அரச பொது நிர்வாகத்தில் 23 வருடங்கள் திறம்படச் சேவைகள் செய்த சேவையாளனை வெற்றிபெறச் செய்வோம்.

மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளின் ஆர்வலர்கள்

# கொரோனா நோயாளி தப்பிப்பு: சிலமணிநேரத்தில் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 25
அங்கொடை ஐ.டி.எச் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கொரோனா நோயாளி ஒருவர் நேற்றுக் காலை அங்கிருந்து தப்பியோடியதால் நாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இருப்பினும் பின்னர் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில்வைத்துக் கண்டுபிடிக்கப்பட்டார்.

போதைக்கு அடிமையாகிய நிலையில் அங்கொடை ஐ.டி.எச் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த முகமட் ஹசிம் முகமட் நசீம் என்ற நபர் கொரோனாத் தொற்றுக்கும் உட்பட்டிருந்தார். அவர் நேற்றுக் காலை மருத்துவமனையில் இருந்து தப்பிச் சென்றார். இந்த நிலையில் குறித்த சந்தேக நபரைக் கண்டுப்பிடிப்பதற்காக பொதுமக்களின் உதவியை பொலிஸார் கோரியிருந்தனர்.

அத்தோடு தப்பிச் சென்ற கொரோனாத் தொற்றாளரைக் கண்டுபிடிப்பதற்கு புலனாய்வுப் பிரிவினர் மற்றும் இராணுவக் குழுக்கள் நியமிக்கப்பட்டு தேடுதல் வேட்டையும் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே குறித்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டார். அதனையடுத்து அவர் கந்தகாடு மறுவாழ்வு முகாமுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார். (அ)

# இராணுவ அதிகாரிதான் வடக்கின் புதிய ஆளுநர்?

கொழும்பு, ஜூலை 25
ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் பொனிபேஸ் பெரேரா வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்படலாமெனக் கூறப்படுகின்றது.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலினைத் தொடர்ந்து, வடக்கு மாகாண ஆளுநராகப் புதியவர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. இந்த நிலையில், வன்னி ஆயுதப்படைகளின் கட்டளைத் தளபதியாகவும், புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான அதிகாரியாகவும் கடமையாற்றிய இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் பொனிபேஸ் பெரேரா வடக்கின் புதிய ஆளுநராகப் பொறுப்பேற்கவுள்ளார் என ஜனாதிபதிக்கு நெருங்கி தரப்புகள் தெரிவித்துள்ளன. (அ)

# பாவம் சாரதி!

கொழும்பு, ஜூலை 25
நேற்றுக் காலை அங்கொடை மருத்துவமனையில் இருந்து தப்பிச் சென்ற கொரோனா நோயாளி பயணித்த முச்சக்கர வண்டி சாரதியையும் கந்தகாடு தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் இருந்து தப்பித்த கொரோனா நோயாளி, கோட்டை, பிரதான வீதியில் இருந்து முச்சக்கரவண்டி ஒன்றின் மூலமே கொழும்பு தேசிய மருத்துவமனை நோக்கிப் பயணித்துள்ளார். அப்படிப் பயணித்த முச்சக்கரவண்டியின் சாரதியும் இனங்காணப்பட்டு அவரும் கந்தகாடு தனிமைப்படுத்தல் மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (அ)

# கொரோனா பரவலுக்கான வாய்ப்பு தேர்தலின்போது ஏற்பட மாட்டாது

## *உறுதியளிக்கின்றார் மஹிந்த தேசப்பிரிய*



கொழும்பு, ஜூலை 25
பொதுத்தேர்தலின்போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கொரோனா வைரஸ் பரவலுக்கான வாய்ப்பு ஏற்படாது என்று மக்களுக்கு உறுதியளிக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய. இதற்காக சுகாதாரத்துறையினரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் சுகாதாரத் துறையினருடன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே இவ்வாறு தெரிவித்தார் அவர். மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்ததாவது:

வாக்கெடுப்பு நிலையங்களில் கிருமி நீக்கம்செய்யும் செயற்பாடுகள் மாகாண தேர்தல் ஆணையாளர்களின் கண்காணிப்பில் உரிய அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும். சில விடயங்கள் தொடர்பில் வாதப் பிரதிவாதங்களின் பின்னர் இணக்கப்பாடுகளை எட்ட முடிந்தது. நாட்டில் ஒவ்வொரு மாகாணங்களும் மாவட்டங்களும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவையாகும். போதியளவு அதிகாரிகள் உள்ள மாவட்டங்களில் நெருக்கடிகள் குறைவு. ஆனால் அதிகாரிகள் குறைவாகக் காணப்படுகின்ற பகுதிகளில் எவ்வாறு செயற்படுவது என்பதுபற்றி ஆராயப்பட்டுள்ளது என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் லக்ஷ்மன் கமிலத், கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதால் இதன்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை சுகாதார அமைச்சு ஏற்கனவே வெளியிட்டுள்ளது. சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள இந்த சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்கள் முறையாக பின்பற்றப்படுமானால் தேர்தலின்போது எந்தத் சந்தர்ப்பத்திலும் கொரோனாத் தொற்று ஏற்படாமல் தடுக்க முடியும்.

இவற்றை பின்பற்றச் செய்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் அதன்போது ஏற்படக்கூடிய சிக்கல்கள்பற்றி தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது விரிவாக ஆராயப்பட்டது. மாகாண சுகாதார பணிப்பாளர்கள் மற்றும் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்களின் கண்காணிப்பின் கீழ் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் தலையீட்டில் நிர்வாகத்துறை பொது சுகாதார பரிசோதகர்கள், தாதியர்கள் மற்றும் குடும்ப சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட 5 சுகாதார சேவையாளர்களின் ஒத்துழைப்புடன் தேர்தலுக்கான சுகாதார பாதுகாப்பு வழிமுறைகள் நடைமுறைப் படுத்தப்படும். இதன் மூலம் தேர்தல் நடவடிக்கைகளின்போது , ஏதேனுமொரு இடத்தில் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டாலும் அது பரவலடையாமல் தடுக்க முடியும் - என்றார். (ம)




# அனுமதியின்றி மணல் அகழ்வு சந்தேகநபர்கள் நால்வர் கைது

கிளிநொச்சி, ஜூலை 25
தருமபுரப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் சட்டவிரோத [illegible] மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவரும், அரச காட்டுக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் இருவரும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மணல் அகழ்வில் ஈடுபட்ட [illegible] சாரதி ஒருவரும், டிப்பர் சாரதி ஒருவரும் கைது செய்யப்பட்டனர். அத்துடன் அரச காட்டுக்குள் அத்துமீறி நுழைந்தமைக்காக டிரக்டர் சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ம-113.6)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எது இனவாதம்?

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அரசால் அறிமுகப்படுத்தப்படும் என்று கருதப்படும் பிறப்புச்சான்றிதழ் விவகாரம் இலங்கையில் தற்போது பேசுபொருளாக ஆகியுள்ளது. இந்த நாட்டில் ஒரு விடயம் பேசுபொருளாக மாறுகின்றது என்றால் அதில் இரண்டு விடயங்கள் இருக்கும். ஒன்று, சிங்கள பௌத்த பேரினவாதம். இரண்டாவது, ஊழல். அந்த வகையில் இந்தப் புதிய பிறப்புச் சான்றிதழுக்குள் மிகப்பெரும் இனவாதக் கருத்தும் அதன்பாலான தொனிப்பும் ஆழ ஊடுருவிச் செல்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

புதிதாக அறிமுகப்படுத்தப்படும் பிறப்புச்சான்றிதழில் சில மாற்றங்கள் செய்யப்படும் என்று ஏலவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி, தாய் தந்தையரின் திருமண விடயங்கள் அதில் சேர்க்கப்படாது என்றும், இன ரீதியான விடயங்கள் சேர்க்கப்படாது என்றும் சொல்லப்பட்டிருந்தது. இதற்கு சிங்களப் பேரினவாதிகள் வெளிப்படுத்திய எதிர்ப்பைத் தொடர்ந்து இன ரீதியான விடயங்கள் மாற்றப்படாது என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இன ரீதியான விடயங்கள் சேர்க்கப்படாது என்ற அறிவிப்புக்கு உண்மையில் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டியவர்கள் தமிழர்களும் முஸ்லிம்களுமே. இலங்கை ஒரு சிங்கள நாடு என்று இங்குள்ள பௌத்த பீடங்களும் பல அதிகார முனையங்களும் எக்காளமிட்டுக்கொண்டிருக்கின்றன. இத்தகையவர்களால் வலிந்து உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் 'இலங்கை ஒரு பௌத்த நாடு' என்ற பிம்பத்தின் மூலமும், பிறப்புச்சான்றிதழில் தாம் சார்ந்த தகவல்களை இருட்டடிப்புச் செய்வதன் மூலமும் சிறுபான்மை மக்களின் இருப்பு இங்கு கேள்விக்கு உட்படும் என்ற அடிப்படையில் இந்தப் புதிய திட்டத்துக்கு எதிர்ப்பைப் பதிவுசெய்யக்கூடிய தகுதி உடையவர்களாக தமிழர்களும், முஸ்லிம்களும் இருக்கின்றனர். ஆனால் ஆச்சரியப்படும் வகையில் விமல் வீரவன்ஸ போன்ற சிங்கள இனவாதிகளும் மஹிந்த தரப்பினரும் இதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதனால் இனம் என்ற பிரிவுக்குள், இலங்கையர் என்ற பொதுவான அடையாளம் இல்லாமல், வழக்கம்போல இலங்கைத் தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற பிரிப்புகளோடே பிறப்புச்சான்றிதழ்கள் இருக்கப்போகின்றன.

'ஒரு நாடு: ஒரு தேசம்' என்பது மஹிந்த தரப்பினரின் அறைகூவல். அத்தகைய அறைகூவலின்பாலான ஒரு நடவடிக்கையே இந்த புதிய பிறப்புச் சான்றிதழ் விவகாரம். எனினும், புதிய பிறப்புச் சான்றிதழில்; மேற்கொள்ளப்படும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள மஹிந்த தரப்பினர் தயாராக இல்லை. அவ்வாறெனின் ஒரு நாடு ஒரு தேசம் என்று அவர்கள் குறிப்பிடுவதன் அர்த்தம் என்ன?.அவர்கள் தமிழர்களையும், முஸ்லிம்களையும் இலங்கையர் என்ற பொதுவான அடையாளத்துக்குள் கொண்டுவர விரும்பவில்லை. இலங்கையர் என்றாலே அது சிங்களவர்களாகத்தான் இருக்கவேண்டுமெனவே பேரினவாதிகள் விரும்புகின்றனர். அதனாலேயே தமது தரப்புக் கொண்டுவந்த மாற்றத்தையே உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றனர். இப்படி இலங்கை தனியே சிங்களவர்களுக்கு மட்டுமே என்ற எண்ணத்தோடு இருப்பவர்களிடம் எப்படி எமக்கான தீர்வைக் கேட்கமுடியும்?

பிறப்புச் சான்றிதழ் விவகாரத்தில் மட்டுமல்ல இன்னும் பல விடயங்களிலும் இந்த அரசும் அதற்கு முண்டு கொடுப்பவர்களும் சொல்வதொன்று செய்வதொன்றாகவே செயற்பட்டு வருகின்றனர். மரங்கள் அமைதியை விரும்பினாலும், காற்றுவிடுவதில்லை. நாங்கள் ஒன்றித்த நாட்டுக்குள், சமஷ்டித் தீர்வைப் பெற்று இணக்கமாக வாழவே விரும்புகிறோம். ஆனால் பேரினவாதிகள் அப்படி இருக்கவிடமாட்டார்கள் போலும். அவர்களின் நெருக்குதல்கள் மீண்டும் தனிநாடே தீர்வு என்ற நிலைக்கே சிறுபான்மையினரை இட்டுச்செல்லும் அந்த நாள் வெகுதொலைவில் இல்லை.



# ஏ.ரி.எம்மில் கைவிட்ட பணத்தை மீட்டு ஒப்படைத்த நபர்

## பொலிஸ் அலுவலகரது மனிதநேயம், சுன்னாகத்தில் நேற்றுச் சம்பவம்

**யாழ்ப்பாணம், ஜூலை 25**

**வங்கியிலுள்ள தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரத்தின் ஊடாக ஒருவர் பணம் அனுப்பும்போது அதை ஒழுங்கான முறையில் அனுப்பத் தவறியமையால் அல்லது ஏதோ தவறால் பணம் வங்கிக் கணக்கு இலக்கத்துக்கு அனுப்பப்படாது அந்த இயந்திரத்தினுள்ளேயே சிக்கியிருந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.**



அந்த இயந்திரத்தின் ஊடாகத் தமது பணத்தை வைப்பிடச் சென்ற நுவரெலியாவைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் அலுவலர் அவதானித்து அந்தப் பணத்தை எடுத்து வங்கி முகாமையாளரிடம் ஒப்படைத்தார்.

இந்தச் சம்பவம் சுன்னாகத்திலுள்ள வங்கி ஒன்றில் நேற்று இடம்பெற்றுள்ளது.

அந்த வங்கியிலுள்ள தன்னியக்க பரிமாற்று இயந்திரத்தினூடாக வேறொருவரது வங்கிக் கணக்கிலக்கத்துக்குப் பணம் அனுப்ப குறித்த தமிழ் பொலிஸ் அலுவலர் வங்கிக்குச் சென்றுள்ளார். அவர் தமது பணத்தை வைப்பிட முற்பட்டபோது இயந்திரம் செயலிழந்த நிலையில் (லொக்) காணப்பட்டது. ஆனாலும் சுமார் 5 ஆயிரம் ரூபா வரையான பணம் இயந்திரத்தில் சிக்கிய நிலையில் இருந்துள்ளது. அந்தப் பணத்தை எடுத்து வங்கி முகாமையாளரிடம் கொடுத்து விடயத்தையும் கூறி, தான் வைப்பிட வந்த பணத்தை வங்கிப் புத்தகம் ஊடாக அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் வைப்பிட்டுச் சென்றுள்ளார். அந்த இயந்திரத்தில் பணம் வைப்பிலிடும்போது உத்தியோகத்தர் உரிய முறையில் அறிவுறுத்தல்களை பின்பற்றி செயற்படுவதோடு, பணம் உரியகணக்குக்குச் சென்றடைந்துவிட்டதா என்பது பற்றியும் உறுதிப்படுத்துவது சிறப்பானதாக இருக்கும். (து)

# மீண்டும் அத்துமீறும் நுண்நிதி நிறுவனங்கள்.

## *தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை*

நுண்நிதி நிறுவனங்களின் கடன் வசூலிக்கும் செயற்பாடுகள் வவுனியாவில் மீண்டும் தீவிரம் அடைந்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா சாந்தசோலைப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் மாலை சென்ற நுண்நிதி நிறுவனப் பணியாளரொருவர், பெண்ஒருவரை அச்சுறுத்திய செயற்பாடு இடம்பெற்றுள்ளது என்று பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் நுண்நிதி கடன் வசூலிப்புக்களின்போது பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களையும் அழுத்தங்களையும், மன உளைச்சல்களையும் எதிர்நோக்கி வருகின்றதையடுத்து நுண்நிதி நிறுவனச் செயற்பாடுகளை மட்டுப்படுத்தும் விதமான செயற்பாடுகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், மாலை 5 மணிக்குப் பின்னர் வீடுகளுக்குச் சென்று கடன் வசூலிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது இந்நடவடிக்கைகள் வவுனியாவில் பல பகுதிகளில் மீண்டும் இடம்பெற்று வருவதாகவும் இதனால் மீண்டும் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் நெருக்கடி நிலைக்குச் சென்றுள்ளதால் இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்துமாறு நுண்நிதி நிறுவனங்களில் கடன் பெற்றுக்கொண்ட பயனாளர்கள் கோரி வருகின்றனர். நேற்றுமுன்தினம் மாலை 5.20மணியளவில் வவுனியாவைச் சேர்ந்த நிதி நிறுவனப் பணியாளர் ஒருவர் கடன் பணத்தை அறவிடுவதற்காக சாந்தசோலை பகுதியிலுள்ள வீடொன்றுக்குச் சென்றுள்ளார். இதன்போது கடன் பணத்தைச் செலுத்துவதற்கு தற்போது தம்மிடம் பணம் இல்லை என்று தெரிவித்த குடும்பப் பெண் ஒருவரை அவர் அச்சுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. நுண்நிதி நிறுவனப்பணியாளர்கள் குடும்பப்பெண்களை அச்சுறுத்தும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தி, பெற்றுக்கொண்ட கடன் தொகையை அந்த நிறுவனங்களுக்கே சென்று செலுத்தவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ-110)



# இராஜாங்கனையில் மூன்றாம் அலை!

கொழும்பு, ஜூலை 25

இராஜாங்கனை பகுதியில் கொரோனாவின் மூன்றாவது அலை பதிவாகியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்று குழு உறுப்பினர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஹரித அலுத்கே மேலும் கூறியுள்ளதாவது, 'கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் தோன்றிய, கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலை உருவாக்க இருந்த ஆபத்து வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

எனினும் இராஜாங்கனை பகுதியில் மூன்றாவது அலை பதிவாகியுள்ளதாக தற்போது தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆனால் கொரோனாத் தொற்றாளர்களாக இதுவரை அங்கு எவரும் அடையாளம் காணப்படவில்லை' என அவர் குறிப்பிட்டுள்ளார். இராஜாங்கனை பகுதியில் இதுவரை சுமார் 8 ஆயிரத்து 500 பேர் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# கொடியேறுகிறது நல்லையம்பதியானுக்கு!



நயினை நா.க.குமாரசூரியர் J.P

சிறப்புக்கள் பலபெற்ற முருகப்பெருமான் ஈழமணித் திருநாட்டின் பல்வேறு இடங்களில் கோவில் கொண்டெழுந்தருளி அருள் மழை பொழிந்து வருகின்றார். முருகப் பெருமான் ஆலயங்களுள் முதன்மைபெற்றுத் திகழும் நல்லைக் கந்தன் ஆலயம் அமைந்திருக்கும் நல்லையம்பதி, வரலாற்றுச் சிறப்பும், ஆன்மீகச் சிறப்பும் உடையது.

நல்லையம்பதி என்னும் அழகிய திருப்பதியிலே அருட் கோல நாயகனாக வீற்றிருந்து அகிமெல்லாம் அருள் சுரந்து கொண்டிருப்பவர் நல்லைக் கந்தன். அலங்காரக் கந்தன் என அனைவராலும் அழைக்கப்படும் அழகுக் கோலம் நல்லூர்க் கந்தனின் சிறப்பாகும். முத்தமிழால் வையகத்தாரையும் வாழவைக்கின்ற முருகப்பெருமான் அருட்சக்திகளான தெய்வயானையம்மையையும், வள்ளியம்மையையும் அருகே வீற்றிருக்க சண்முகப் பெருமானாக வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றார். அழகன் முருகன் அலங்காரக் கந்தனாக வீற்றிருக்கும் அற்புதத் திருத்தலம் நல்லூர். முருகன் என்றால் அழகு என்று பொருள்படும்.

முருகப் பெருமான் என்றும் இளமையுடன் திகழ்வதால் குமரன் என்றும், அழகுடன் திகழ்வதால் கந்தன் என்றும் அழைக்கப்படுகின்றான். அழகன் முருகன் நல்லையம்பதியில் வீற்றிருந்து எல்லோரையும் வாழவைக்கின்றான். உலகமெல்லாம் பரந்து வாழ்கின்ற சைவநன்மக்களெல்லாம் கரம் குவித்து, வரம் வேண்டி நிற்கும் அற்புதமான தெய்வம் நல்லூர்க் கந்தப்பெருமானே. கருணைக் கடலாக வீற்றிருந்து அருள்மழைபொழியும் நல்லூர்க் கந்தனை வழிபடும் அடியார்களுடைய துன்ப துயரங்கள், இன்னல்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனி போல விலகுகின்றது என்பது அடியார்களுடைய நம்பிக்கையாகும் உதயசூரியனின் வெண்பொற் கதிர்கள் முருகப்பெருமானின் அழகிய கோபுரங்களின் மீது படர்ந்து 'பளிச்' என ஒளிவீசமணிக் கோபுரத்தின் மணியோசை ஆலயத்தின் நாலா பக்கங்களிலும் ஒலிக்க அடியார்களைத் தன்வசப்படுத்தி அருளாட்சி செய்கின்றார் கந்தப்பெருமான். "முருகா" என்ற அருட்கோபுரம் அடியார்களை ஓங்கி உயர்ந்துநின்று வரவேற்கின்றது. ஆறுமுகப்பெருமான் அடியார்கள் வருந்தியழைக்கும் போதெல்லாம் வேலோடும் மயிலோடும் தோன்றி அருள் புரிவான். "சுற்றி நில்லாதே பகையே, துள்ளி வருகுது வேல்" என்ற கருத்துக்கு இன்றும் தனிப்பெரும் தெய்வமாக நிற்கின்றான் முருகப்பெருமான் நல்லூரிலிருந்து ஒலிக்கும் மணியோசை இந்து மக்கள் எல்லோருக்கும் குறிப்பாக யாழ்.குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் எந்நேரமும் நற்சிந்தனையைத் தோற்றுவிக்கின்றது.

'அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாகி
கருணை கூர்முகணர்கள் ஆறும் கரணர்கள்
பன்னிரண்டும் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாணர்கு உதித்தனன் உலகமுய்ய"

நல்லூர் கந்தனுடைய இவ்வருட மகோற்சவம் வெகு சிறப்பாக இன்று 25 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகின்றது. ஆடிமாதம் பிறந்துவிட்டால் அகிலமெல்லாம் முருகனின் பேரொளி வீசத் தொடங்கிவிடும் கொடியேற்றம், மஞ்சம், கார்த்திகைத் திருவிழா, தங்கரதத் திருவிழா, கைலாசவாகனத் திருவிழா, மாம்பழத் திருவிழா, சப்பரத்திருவிழா, தேர்த்திரவிழா, தீர்த்தத் திருவிழா, பூங்காவனம் போன்ற உற்சவங்கள் சிறப்பானவை. இந்த உற்சவங்கள் அடியார்களின் மனதைப் பரவசப்படுத்தி முருகப்பெருமானின் சிறப்புக்களை அடியார்கள் உணர்ந்து கொள்ளக் கூடியதாக அமைகின்றன. திருவிழா நாட்கள் தோறும் விடியற்காலை யிலிருந்தே நான்கு திசைகளிலிருந்தும் பக்தர்கள் நல்லூர்க் கந்தன் ஆலயத்தை நோக்கி வந்து சேருவார்கள். அடியார்கள் பலர் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் பொருட்டு விடியற்காலையிலேயே வெளிவீதி எங்கும் அங்கப்பிரதட்சணம் செய்து முருகனை வழிபடுவார்கள். நல்லை நகர் வீதிகள் எல்லாம் விழாக்கோலம் பூண்டு புனிதநகராகக் காட்சியளிக்கும். ஆடி அமாவாசை வந்து , ஆறாம் நாள் நல்லைக் கந்தனின் ஆண்டு மகோற்சவம் ஆரம்பமாகி இருபத்தைந்து நாட்கள் நடைபெறுகின்றது. முருகப்பெருமானை தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகள் முதலியோர் வழிபட்டு இவ்வாலய வீதிகளில் உலாவி வந்திருப்பது இவ்வாலயத்துக்கும், இங்குள்ள சைவ நன்மக்களுக்கும் பெருமை சேர்க்கின்றது. நல்லூர்க் கந்தனை பக்தர்கள், சித்தர்கள், அருளாளர்கள் எனப் பலரும் வழிபட்டனர். நல்ல வாழ்வும் பெற்றனர். அடியார்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் நல்லூர்க் கந்தனை மனதில் நிறுத்தி வழிபட்டு வருகின்றார்கள்.

"நல்ல மலரேடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் நல்ல மயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி"



# அலங்காரம் குறைத்து கொடியேறுகிறது கந்தனுக்கு!

தியாக. மயூரகிரிக்குருக்கள்
(ஆசிரியர், இந்துசாதனம்)

சுகாதார நடைமுறைகளால், வழக்கமான சுற்றுப்புற அலங்காரங்களின்றி, கோயிலைச் சுற்றி நீளும் பல அடுக்கு கடைகளின்றி, இந்த ஆண்டுக்கான நல்லூர் பெருவிழா தொடங்க இருக்கிறது. பெருவிழா காலத்தில், இறைவனின் திருவுலாவில் நடனங்களும், பல்லிய முழக்கமும், வேத கோஷமும், இசை சமர்ப்பணமும் நிகழ்த்துதல் ஆகம வழி மரபே. அதை விட கச்சான் கடையும், சிறிய வியாபாரங்களும் நம்மவரின் ,பொருளாதார முயற்சிகளாக உயரும்.

குழந்தைகளின் கோயில் நோக்கிய ஈர்ப்புக்கு இவையும் தூண்டலாகின்றன. இந்த ஈர்ப்பு குழந்தைகளுக்கு மட்டுமல்ல என்பதையும் சொல்லத்தான் வேண்டும். நல்லூர் மணலில் கூடியிருக்கிற போது கிடைக்கிற மகிழ்ச்சியிருக்கிறதே! ஆஹா...

ஆனால், இவை வளர்ந்து சில சமயங்களில் முதன்மையான வழிபாட்டைப் பின்தள்ளி விடுகின்றன. கடவுள் நம்பிக்கையற்றவர்களும் பல்வேறு சமயிகளும் இப்பேராலயத்துக்கு விழாக் காலத்தில் திரள்வதால், சமய ஆகம சாஸ்திரங்கள் சொல்லும் ஆசார மரபுகள் கவனிக்கப்படாமற் போய் விடும் அபாயமும் உண்டாகிறது. இதனால், கோயில் அறங்காவலர்களும் யாழ். மாநகர சபையினரும் திருக்கோயிற் சூழலில் புனிதத்தைப் பேண பல்வேறு சட்டங்களையும் உத்திகளையும் கையாளுவதும் அவதானிப்பிற்குரியது. ஆனால், இந்த 2020 ஆம் ஆண்டுக்கான பெருவிழா இந்த கவனக்கலைப்பான்கள் ஏதுமற்ற திருவிழாவாகத் தொடங்க இருக்கிறது. முருகனுக்கான பெருவிழா மரபுகளையும் விதிகளையும் அறிவிக்கும் குமாரதந்திரம் என்ற ஆகம சாஸ்திர நூல், முறைப்படி நடக்கும் திருவிழாவின் பலனாக, "எல்லா உலகுக்கும் சுகமும், எப்போதும் வெற்றியும், எல்லா சித்தியும், எல்லாவற்றையும் வசியப்படுத்தும் ஆற்றலும், பூரண அமைதியும், எதிரிகளிலிருந்து விடுதலையும், விரும்பிய பலனும் கிட்டும்" என அறிவிக்கிறது.

இந்த ஆண்டுக்கான பெருவிழா இவ்வாறு ஆகம நூல் விதிகளுக்கமைய எளிமையாக மந்திரம் கிரியை பக்தி இவைகளில் குறைவின்றிச் செய்ய இக்காலம் வாய்ப்பளிக்கக் கூடும் என நம்பலாம். ஆகவே, அடியவர்கள் ஆயிரக்கணக்கில், கோவிலில் [illegible] வாய்ப்பு இல்லாத [illegible] போதும், அது [illegible] பூர்வமாக [illegible] மையாகச் செய்ய இன்னொரு [illegible] மாக அமையும் எனவும் கருதலாம்.

எவ்வாறாயினும், ஞான தவ வேலன் சேரும் நல்லையூரில் நாளும் அருள் கூடும் பெருமானின் [illegible] விழா இலங்கை வாழ் தமிழ் இந்துக்களின் [illegible] நிமிர்வையும், எழுச்சியையும் உண்டாக்கட்டும் என பிரார்த்திப்போம்.



# பெண் பிரதிநிதித்துவம் தக்கவைக்கப்படுமா?

இரா.துரைரத்தினம்

இலங்கையில் பெண்கள் அரசியலில் ஈடுபட வேண்டும் என்றும் பெண்களுக்கு அரசியல் கட்சிகள் போதிய இடம் கொடுக்கவேண்டும் என்றும் பெண்களின் உரிமைகளுக்காக பேசிவரும் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் பெண்களின் அரசியல் ஈடுபாடு, அல்லது பெண்களுக்கு தமது கட்சிகளில் போதிய இடம் கொடுப்பதும் மிக குறைவாக காணப்படுகிறது.

இலங்கையின் சனத்தொகையிலும் சரி, வாக்காளர் எண்ணிக்கையிலும் சரி, பெண்களின் விகிதம் அதிகமாக இருக்கின்றபோதிலும் அரசியலில் 5 வீதமான பெண்களே ஈடுபடுகிறார்கள்.

பெண்கள் அரசியலில் ஈடுபட முன்வராததற்கு பிரதான காரணமாக நாகரீகமான அரசியல் ஒன்று இல்லை, அடிதடி அரசியலும் ஒருவரை ஒருவர் சேறு பூசும் அரசியலுமே முதன்மையாக இருப்பதால் அதற்குள் பெண்கள் வர அச்சம் அடைகிறார்கள் என பெண்களின் உரிமைக்காக போராடும் அமைப்பு ஒன்றைச்சேர்ந்த பல்கலைக்கழக பெண் விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

தொகுதி ரீதியான தேர்தல் நடைபெற்ற காலத்தில் யாழ். மாவட்டத்தில் பிரதான கட்சிகளில் பெண்கள் போட்டியிட்டதாகத் தகவல்கள் இல்லை. மாவட்ட ரீதியான தேர்தல் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் கூட 2004ஆம் ஆண்டுக்கு பின்னர்தான் வேட்பாளர் பட்டியலில் ஒருவர் அல்லது இருவரை இணைத்துக்கொள்ளும் போக்கு காணப்படுகிறது. சில கட்சிகள் பெண்களை தமது வேட்பாளர்களாக நிறுத்திய போதிலும் அவர்களை வெற்றிபெற வைக்கும் அளவுக்கு முன்னிலைப்படுத்தி வெற்றி பெற வைப்பதற்கு முயற்சிப்பதில்லை. தமது கட்சிக்கு வாக்குச் சேர்க்கும் கருவியாகவே சில கட்சிகள் பெண் வேட்பாளர்களைப் பயன்படுத்துகின்றன.

சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் பெண்களுக்கான வாக்குரிமையை வழங்குவதற்கு முதலே இலங்கையில் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. இருப்பினும் இலங்கை அரசியல் என்பது நாகரீகமான ஒன்றல்ல என்ற நியாயமான அச்சம் பெண்களிடம் காணப்படுகிறது. இதனால் அவர்கள் அரசியலுக்கு வரத் தயக்கம் காட்டுகின்றனர்.

சுவிட்சர்லாந்தில் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டு சிறிது காலத்திலேயே பெண்கள் அரசியலில் ஈடுபடும் போக்கு அதிகரித்து வந்திருக்கிறது. இன்று நாடாளுமன்றத்திலும் சரி அமைச்சரவையிலும் சரி சுவிட்சர்லாந்தில் பெண்களின் வீதமே அதிகமாகும். ஜனாதிபதி ,நீதி அமைச்சு போன்ற உயர் பதவிகளில் பெண்களே உள்ளனர்.

ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் அரசியலில் ஈடுபடும் பெண்களின் வீதம் 5 வீதத்தை தாண்டவில்லை. தென்னிலங்கையில் அரசியலில் ஈடுபடும் பெண்களின் வீதம் அதிகரித்து வருகின்ற போதிலும் வடக்கு ,கிழக்கில் இந்த வீதம் குறைவாகவே காணப்படுகிறது. நூறு வீதம் தமிழர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகக் கூடியதாக இருக்கும் யாழ். மாவட்டத்தில் பெண் வேட்பாளர்களின் நிலை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எனது தேடலின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் முதன் முதலாக 2004ஆம் ஆண்டுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் திருமதி பத்மினி சிதம்பரநாதன் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனின் மறைவுக்குப் பின்னர் 2010 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசியக்கட்சியில் போட்டியிட்ட விஜயகலா மகேஸ்வரன் யாழ். மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்.



இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பாலான பெண்களின் அரசியல் பிரவேசம் என்பது தமது துணைவர்களின் மறைவுக்கு பின்னராகத்தான் இருக்கிறது. இலங்கையின் முதற்பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா, முதல் பெண் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா முதல் இம்முறை யாழ். மாவட்டத்தில் தமிழரசுக்கட்சியில் போட்டியிடும் திருமதி சசிகலா ரவிராஜ் வரை கணவரின் மறைவுக்கு பின்னரான பெண்களின் அரசியல் பிரவேசத்தைக் காணலாம்.

2004ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக பெண்களைத் தமது பிரதிநிதியாக நாடாளு மன்றத்துக்கு அனுப்பிய யாழ்ப்பாண மாவட்டம் இம்முறையும் பெண் ஒருவரை தமது பிரதிநிதியாக நாடாளுமன்றம் அனுப்புமா? இம்முறை தேர்தலில் போட்டியிடும் பெண்களில் யாருக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது என்பதை பார்ப்போம்.

யாழ். மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காக 19 அரசியல் கட்சிகள் 14 சுயேச்சைக்குழுக்களிலிருந்து 330 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஆசனங்களை பெறலாம் என நம்பப்படும் பிரதான கட்சிகளும் இம்முறை பெண் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கின்றன. இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ.பி.டி.பி ,ஐக்கிய தேசியக்கட்சி ஆகிய கட்சிகள் பெண் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கின்ற போதிலும் இந்த பெண்களில் எத்தனை பேர் வெற்றி வாய்ப்பைப் பெறுவார்கள் என்றால் ஒருவர் அல்லது இருவரைத்தான் சொல்ல முடியும்.

முக்கிய அரசியல் கட்சிகளில் போட்டியிடும் பெண் வேட்பாளர்களின் விபரம்

1. திருமதி சசிகலா - ரவிராஜ் தமிழரசுக்கட்சி.
2. விஜயகலா மகேஸ்வரன் - ஐக்கிய தேசியக்கட்சி.
3. அனந்தி சசிதரன் - தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி
4. மீரா அருள்நேசன் - தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி.
5. வாசுகி சுதா- அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
6. ஞான குணேஸ்வரி-அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
7. பவதாரணி இராஜசிங்கம் -சிறிலங்கா சுதந்திரக்கட்சி.
8. ஸ்ரீதாரணி - ஈ.பி.டி.பி.
9. உமா சந்திரா பிரகாஷ் - ஐக்கிய மக்கள் சக்தி

இது தவிர சுயேச்சைக்குழுக்களிலும் சில பெண்கள் போட்டியிடுகின்றனர்.

சில அரசியல் கட்சிகள் பெண் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கின்ற போதிலும் அவர்கள் வெற்றிபெறக் கூடிய வாக்கு வங்கி உள்ளவர்களா என்பது கேள்விக்குறியாகும். யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆசனங்களை பெறப்போகும் தமிழரசுக்கட்சியைத் தவிர ஏனைய கட்சிகள் ஒரு ஆசனம் அல்லது இரு ஆசனங்களை மட்டும் தான் பெறுவார்கள். அதில் விருப்பு வாக்கில் பெண் வேட்பாளர்கள் வெற்றி பெறுவது இயலாத ஒன்றாகவே காணப்படுகிறது.

விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் போட்டியிடும் அனந்தி சசிதரன், மீரா அருள்நேசன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் போட்டியிடும் வாசுகி சுதா, ஞான குணேஸ்வரி, சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் போட்டியிடும் பவதாரணி, ஈ.பி.டி.பியில் போட்டியிடும் ஸ்ரீதாரணி ஆகியோருக்கு வெற்றி வாய்ப்பு என்பது இலகுவானதல்ல. பெரும்பாலும் இந்தப் பெண் வேட்பாளர்கள் தமது கட்சிகளுக்கு வாக்கு சேர்க்கும் கருவிகளாகத்தான் இருப்பார்கள்.

ஐக்கிய தேசியக்கட்சி இம்முறை ஒரு ஆசனத்தைக் கூட பெறுவது சாத்தியமில்லை என பரவலாகச் சொல்லப்படுகிறது. அப்படி வெற்றி பெற்றால் அக்கட்சியிலிருந்து விஜயகலா மகேஸ்வரனே வெற்றி பெறுவார்.

இம்முறையும் தமிழரசுக்கட்சி தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பே அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெறக் கூடிய ஆசனங்களை பெறும் என நம்பபடுகிறது. கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வாக்கை விட சற்று குறைவான வாக்குகளைப் பெற்றாலும் யாழ். மாவட்டத்தில் அதிக ஆசனங்களை பெறப்போகும் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே உள்ளது என கூறப்படுகிறது.

யாழ். மாவட்டத்திலிருந்து இம்முறை தமிழரசுக்கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட இருப்பவர்களில் ஒருவராக திருமதி சசிகலா ரவிராஜ் வெற்றிபெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி சசிகலா ரவிராஜுக்கு பலமான அரசியல் பின்புலம் ஒன்று உண்டு. தென்மராட்சியில் அவரின் கணவர் மதிப்புமிக்க அரசியல் தலைவராக திகழ்ந்திருந்தார். தமிழரசுக்கட்சியில் உள்ள ஏனைய வேட்பாளர்கள் பெண் வேட்பாளரான சசிகலா ரவிராஜுக்கும் ஒரு வாக்கை வழங்குமாறு கோரியிருப்பது போன்ற சாதக நிலைகள் அவருக்கான வெற்றி வாய்ப்புக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட நடராசா ரவிராஜுக்கு சாவகச்சேரி தொகுதியில் கணிசமான ஆதரவு உண்டு. இவையெல்லாம் திருமதி சசிகலா ரவிராஜுக்கு சாதகமான விடயங்கள்.

யாழ். மாவட்டத்தில் பெண் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருக்கும் பெண்கள் அமைப்புக்கள் வெற்றி பெறப்போகும் கட்சியில் உள்ள பெண் வேட்பாளருக்கு வாக்களித்து வெற்றி பெற வைப்பதன் மூலமே பெண் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்ள முடியும். வெற்றி பெற முடியாத கட்சிக்கு அல்லது பெண் வேட்பாளர் அந்தக் கட்சியின் மூலம் வெற்றி பெறவே மாட்டார் எனத் தெரிந்து கொண்டு அவர்களுக்கு வாக்களிப்பது பிரயோசனமற்ற வாக்காகவே அது மாறும்.

எனவே யாழ் மாவட்டத்தில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். 2004ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 16 ஆண்டுகளாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த யாரேனும் ஒரு பெண் பிரதிநிதி( பத்மினி, விஜயகலா) நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டே வருகின்றனர்.

அந்தவகையில் இம்முறையும் யாழ் மாவட்டத்திலிருந்து ஆளுமை மிக்க பெண் ஒருவர் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட வேண்டும். இது யாழ் மாவட்டத்தில் உள்ள பெண்களின் கைகளில் தான் தங்கியுள்ளது.

# கார் விபத்தில் பெற்றோர் சாவு


## பிள்ளைகள் காயத்துடன் பரிதவிப்பு

**கொழும்பு, ஜூலை 25**

**யக்கல, கிரிந்திவெல வீதியில் கார் மின்கம்பத்தில் மோதிய சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.**

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11.30 அளவில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் வாகனத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மின்கம்பத்தில் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பதுளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தபோது விபத்து இடம்பெற்றுள்ளது. தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரே விபத்தில் உயிரிழந்துள்ளனர். இரண்டு பிள்ளைகள் காயமடைந்துள்ளனர். காயமடைந்த இருவரும் கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து)



## தலதா மாளிகையும் சஹ்ரான் குழுவின் இலக்கு!

கொழும்பு, ஜூலை 25

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் பெரஹரவை இலக்கு வைத்து இரண்டாவது தாக்குதல் நடத்துவதற்கு பயங்கரவாதிகள் திட்டம் தீட்டியிருந்தனர் என்று அரச புலனாய்வுச் சேவை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் சாய்ந்தமருது பகுதியிலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது. இந்த விசாரணைகளுக்கு அமைய கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றிய அரச புலனாய்வுச் சேவை அதிகாரியிடம் நேற்றுமுன்தினம் இரண்டாவது நாளாகவும் வாக்குமூலம் பெறப்பட்டது. இதன்போதே அந்த அதிகாரி இந்த அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார். முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரான சிப்லி பாறுக், சஹ்ரான் ஹாசிம் தலைமையிலான தேசிய தௌஹித் ஜமாத் அமைப்புக்குப் பெரியளவில் அரசியல் ரீதியான ஒத்துழைப்புகளை வழங்கினார் என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் இரண்டாவது தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் காணப்பட்டதாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தெரியவந்ததாகக் குறிப்பிட்ட அதிகாரி, தாக்குதலின் பின்னர் கைதுசெய்யப்பட்ட நவ்பர் மௌலவி வழங்கிய வாக்குமூலத்திற்கு அமைய இந்த விடயம் தெரியவந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (எ)

## சிறுமிக்குக் கசிப்பு பருக்கிய சந்தேகநபர் தலைமறைவு

பதுளை, ஜூலை 25

ஹல்தும்முல்ல நீட்வூட் தோட்டத்தில் சிறுமியொருவருக்கு பலவந்தமாக கசிப்பு பருக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட 8 வயது சிறுமி ஹல்தும்முல்ல மாவட்ட மருத்துவமனையில் நேற்று சேர்க்கப்பட்டுள்ளார்.

அதனைத்தொடர்ந்து அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்று ஹல்தும்முல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹல்தும்முல்ல நீட்வூட் தோட்டத்தைச் சேர்ந்த இந்தப் பிள்ளையின் தாய் வெளிநாட்டில் வசிக்கின்றார். தந்தை போதைக்கு அடிமையானவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பிள்ளையின் மாமா உறவு முறையான ஒருவரைக் கைதுசெய்வதற்காக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துறைமுக ஊழியர் போராட்டம் மூடப்பட்டது லோட்டஸ் வீதி

கொழும்பு, ஜூலை 25

கொழும்பு கோட்டை லோட்டஸ் சுற்று வட்ட வீதியை தற்காலிகமாக மூட பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

துறைமுக ஊழியர்கள் மேற்கொண்டுவரும் எதிர்ப்புப் போராட்டம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

லோட்டஸ் சுற்று வட்ட வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதால், அங்கு கடும் வாகனப் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தனியார்மயப்படுத்தப்படுவதை நிறுத்துமாறு கோரி, துறைமுக ஊழியர்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்தியாவின் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட உள்ளதாக கூறப்படும் நிலையில் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (து)

## சாரதி அனுமதிப்பத்திரத்தை தக்கவைக்க மேலதிக தண்டம்

### இருவருக்கு விதித்தது நீதிமன்று

சாவகச்சேரி, ஜூலை 25

மதுபோதையில் வாகனம் செலுத்துவோருக்கு தண்டப்பணத்துடன் சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு மாதத்துக்கு நீதிமன்றில் தடுத்து வைக்கப்படுவது வழமை. இருவர் தமது தொழிலுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் அவசியம் தேவை என்று சட்டத்தரணி மூலம் நீதிமன்றில் கோரியமையால் நீதிமன்ற பதில் நீதிவான் 25 ஆயிரம் ரூபா தண்டத்துடன் மேலதிகமாக 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தினர் என்ற குற்றச்சாட்டில் 8 பேருக்கு எதிராகப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்குகள் நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

எட்டுப் பேருக்கும் தலா25 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டதோடு, அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரங்களை ஒரு மாதத்துக்கு நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

அந்தவேளையில் இருவர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி சம்பந்தப்பட்ட இருவரும் தொழில் செய்வதற்காக தினமும் தூர இடத்துக்குப் பயணிப்பவர்கள். அவர்களுக்கு சாரதிய அனுமதிப்பத்திரம் மிகஅவசியம் என்பதால் சாரதி அனுமதிப் பத்திரங்களை விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதனைப் பரிசீலித்த பதில் நீதிவான் 25 ஆயிரம் ரூபா தண்டத்துக்கும் மேலதிகமாக 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (த-9)

# மனித உரிமைக்கு மதிப்பளிக்கும் சமூகத்தை தோற்றுவிக்கும் பொறுப்பு ஊடகங்களிடம்!

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 25

பொதுத்தேர்தலின் போது ஊடகங்கள் பிற்போக்கின்றிய ஊடக செயற்பாட்டின் மூலம் தமது பெரும் பொறுப்பை நிறைவேற்றுவார்கள் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மிக உயர்ந்த எதிர்பார்ப்பொன்றை இலங்கையின் ஊடகத்துறை மீது கொண்டுள்ளது. இது தொடர்பில் தமது முனைப்பானதும் நடுநிலையானதுமான தலையீட்டை, முன்னேறிய ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சமூகமொன்றைத் தோற்றுவிப்பதற்காக ஊடகங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் பற்றி சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள வழிகாட்டல்களை ஊடகங்கள் நிச்சயம் பின்பற்ற வேண்டும் என மேற்படி ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடகமவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

அனைத்து ஊடக நிறுவனங்களும் சமூகத்தில் அல்லது அரசியல் செயற்பாட்டாளர்களிடையே வெறுப்பூட்டும் அரசியலை ஊக்குவிக்கும் வகையிலான செயற்பாடுகளைத் தவிர்த்தல் வேண்டும். இதனடிப்படையில் இலங்கையில் காணப்படும் மத நம்பிக்கைகள், சமய பின்பற்றுதல்கள், பேச்சு, மொழி, இனம், பழக்கவழக்கங்கள், குலம், கோத்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களை அடிப்படையாகக்கொண்டு நாட்டு மக்களிடையே வெறுப்பூட்டும் மற்றும் பொறுமையிழக்கச் செய்யும் வகையிலான பிரசாரங்களை ஒலி அல்லது ஒளிபரப்புதல், பிரசுரித்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் உயிரோட்டத்தைப் பாதுகாப்பதற்காக எவரும் விடுபடாத தேர்தலொன்றை நடத்துதல் அத்தியாவசியமானதாகும். பொதுமக்களிடத்தில் அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களின் கருத்துக்களை எடுத்துச்செல்லும் போது பிரதான ஊடகமாக வெகுசன ஊடகங்களுக்கு பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மக்களுக்கு தமது கருத்துக்களை எடுத்துச் சென்றாலும் வாக்காளருக்கு தேர்தலில் தமது அரசியல் கருத்தை வாக்குச்சீட்டின் ஊடாக சுதந்திரமாகவும் நீதியாகவும் அழுத்தங்களின்றி வெளியிடும் வாய்ப்புக்கு வெகுசன ஊடகங்கள் இடையூறு விளைவிக்கக்கூடாது.

இங்கு நாட்டில் நிலவும் பன்முகத்தன்மைக்கு தீங்கு ஏற்படும் வகையில் சமூகத்தில் பிளவை ஏற்படுத்தும் செய்திகளை வெளியிடுவதைத் தவிர்ந்து நடத்துதல் தொடர்பாக வெகுசன ஊடகங்களுக்கு மிகப் பெரிய பொறுப்பு உண்டு - என்றுள்ளது. (ரி3)





நுணாவில் மேற்கு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய கொட்டகைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது. (ஐ159)

# மன்னார் கல்மடு கிராமத்துக்கு பேருந்து வசதியை ஏற்படுத்துக


## பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

மன்னார், ஜூலை 25

மன்னார் மாவட்ட மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கல்மடு 2 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு பேருந்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

சுமார் 170 குடும்பங்கள் வசிக்கின்ற கல்மடு 2 இக் கிராமத்தில் தற்போது தரம் 5 மட்டும் கல்வி கற்கின்ற பாடசாலை ஒன்றே இயங்கி வருகிறது. அதற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்மடு மற்றும் புதுக்குளம் சென்றே கல்வியைத் தொடர வேண்டிய நிலை உள்ளது. கொவிட் 19 வைரஸ் தொற்றுப் பரவலுக்கு முன்னர் காலை 7.45 மணிக்கு ஒரு பேருந்து எமது கிராமத்தி லிருந்து சென்று அதே பேருந்து மதியம் 12.45 மணிக்கு திரும்பி வரும். அதற்குப் பின்னர். எவ்வித பேருந்தும் இல்லை. பாடசாலை முடிந்தவுடன் பிரதான சந்தியில் இருந்து 1 கிலோ மீற்றர் தூரம் மாணவர்கள் நடந்தே வீடு வர வேண்டிய துர்பார்க்கிய நிலை காணப்படுகிறது. ஏற்கனவே இவ்விடயம் தொடர்பாக பிரதேச செயலரிடம் கிராம அமைப்புக்களூடாகத் தெரிவித்திருந்தோம். அதன் பின்பு



ஓரிரு மாதங்கள் பேருந்து வசதி ஏற்படுத்தப்பட்டது. எனினும் தற்போது அவை இடைநிறுத்தப்பட்டுள்ளன. தேர்தல் காலங்களில் மட்டும் எமது கிரா மத்துக்கு எத்தனையோ அரசியல் வாதிகள் வந்து செல்கின்றனர். நாங்கள் படும் கஸ்ரங்களை எவரும் புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை. முச்சக்கரவண்டி பயன்பாடும் மிகவும் குறைவாகவே உள்ளது. அதற்கும் 120 ரூபா கொடுத்துச் செல்ல வேண்டும். மிகவும் வறிய குடும்பங்களாக இருக்கின்ற காரணத்தால், முச்சக்கர வண்டிகளையும் வாடகைக்கு அமர்த்துவதில் கஸ்டப்படுகிறோம். எனவே எமக்குத் தேவையான பேருந்து வசதியை ஏற்படுத்தித்தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கிறோம் என்றனர். (ஐ

## எப்படியாவது வெல்லவேண்டுமென்று எதிரணிகள் போலிக் குற்றச்சாட்டுகள்

### பேரினவாத கட்சிகளுக்கு உதயகுமார் பதிலடி

மட்டக்களப்பு, ஜூலை 25

தேர்தலில் தாங்கள் எப்படியாவது வெல்ல வேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அதன் கீழ் போட்டியிடுகின்ற எனக்கும் எதிராக பல போலியான குற்றச்சாட்டுகளை எதிரணியினர் தேர்தல் பரப்புரையின்போது கூறிவருகின்றனர். அவ்வாறு கூறுவதனை விடுத்து தங்களிடம் ஆதாரங்கள் இருந்தால் அவற்றை பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடலாம் அல்லது எனக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கலாம். அதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் மா.உதயகுமார் தெரிவித்தார்.

களுதாவளையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரையின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுவாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்படுகின்ற சிங்கள பேரினவாத அரசின் அல்லது கட்சியின் அடிவருடிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவே கருத்துக்களை வெளியிடுவது வழமை. தேர்தல் காலம் வந்தால் இன்னுமொரு படி மேல் சென்று கூட்டமைப்பின் கீழ் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு எதிராகவும் போலியான குற்றச்சாட்டுகளைக் கூறுவது வழமையான விடயம்தான். நான் மாவட்டச் செயலாளராகக் கடமையாற்றியபோது தமிழ் மக்களுக்கு எதிராகச் செயல்பட்டு பல அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தி பணத்தைத் திருப்பினேன் என்று போலியான பல குற்றச்சாட்டுகளை தேர்தல் பரப்புரைகளின்போது கூறி வருகின்றார்கள்.

எனவே அன்பான தமிழ் மக்களே! பேரினவாதக் கட்சிகளின் போலியான பரப்புரைகளை நம்பி ஏமாறாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து கூட்டமைப்பை ஆமோக வெற்றிபெறச் செய்வது உங்கள் ஒவ்வொருவரினதும் கடமை. என்று மேலும் தெரிவித்தார். (து)

## தேசியக் கொடியை மாற்றியமைக்க வேண்டும்

### சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 25

இலங்கையின் தேசியக் கொடியை மாற்றியமைக்க வேண்டும் என்று சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு வலியுறுத்தியுள்ளார்.

இந்த நாட்டு மக்களை பேதங்கள் மூலம் பிரிப்ப தற்காகவே தற்போதைய தேசிய கொடி நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் கொடி அவர் மேலும் சு ட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையின் தேசியக்கொடியில் காணப்படும் சிவப்பு, பச்சை நிறங்கள் ஜாதிகளை எடுத்துக்காட்டுகின்றது. அதேபோன்று நான்கு அரச இலைகளும் பௌத்த மதத்தை குறிப்பிடுகின்றன. அவை அனைத்தையும் நீக்கிவிட வேண்டும். சிங்கமும் அதன் கையில் உள்ள வாளும் வீரத்தை குறி ப்பிடுகின்றன. இது இராஜசிங்க மன்னனின் கொடியாகும். இராஜசிங்க மன்னன் ஒரு தமிழ் மன்னன். அவர் சிங்கக்கொடியை மாத்திரமே தேசிய சின்னமாக எடுத்து கொண்டார் எனக் குறி ப்பிட்டுள்ளார். (ரி2)

## பெரும்பான்மை கிடைக்காது பேச்சை நிறுத்திய அரசாங்கம்



கொழும்பு, ஜூலை 25


ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை பெற்றுக் கொண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து பேசிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தற்போது அது பற்றி பேசுவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை அல்ல நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தையும் பெற்றுக்கொள்ள முடியாத சிக்கலை பொதுஜன பெரமுன எதிர்நோக்கி வருகிறது.

சாதாரண பெரும்பான்மையை எப்படிப் பெறுவது என்ற சவாலை பொதுஜன பெரமுன எதிர்நோக்கியுள்ளது. சாதாரண பெரும்பான்மை கிடைக்காது போனால், ரணில் விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்கும் எதிர்பார்ப்பும் பொதுஜன பெரமுனவுக்கு உள்ளது.

இதனால், பொதுஜன பெரமுனவின் தேர்தல் ஆட்டம் களையிழந்துள்ளதுடன், ஓகஸ்ட் 5 ஆம் திகதி அவர்களின் தேசிய அரசாங்கம் என்ற கனவும் கலைந்து போகும் என்றார். (ஐ)





நீர்வேலி வாய்காற்தரவை மூத்த விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் கொடியேற்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. (ஐ)

# எம்.சி.சி. உடன்படிக்கையில் இணக்கம் இன்னுமில்லை

*அமைச்சரவை பேச்சாளர் கூறுகிறார்*



கொழும்பு, ஜூலை 25

அமெரிக்காவுடன் எம்.சி.சி. உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவது குறித்து அரசு எந்தவித இணக்கமும் எட்டவில்லை. அரசு ஆரம்பத்தில் கூறிய நிலைப்பாட்டிலேயே இப்போதும் உள்ளது என்றும் ஆனால் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயங்களில் பொய்யுரைக்கின்றார் என்றும் அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசின் இறுதி அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எம்.சி.சி. உடன்படிக்கையைக் கைச்சாத்திட அரசு இணங்கியுள்ளது. "எம்.சி.சி. உடன்படிக்கையை நாடாளுமன்ற அனுமதியின்றி செய்ய அரசு செயற்பட்டு வருகின்றது" என்று முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் கூறியிருந்தார்.

அதுபற்றி செய்தியாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பிய போது பந்துல குணவர்தன மேலும் தெரிவித்ததாவது:

அது பொய். அவ்வாறு எந்தவித உடன்படிக்கையும் செய்துகொள்ளவில்லை. நாட்டின் இறைமைக்கும் நாட்டின் சட்டத்துக்கும் முரணான விதத்தில் செயற்படும் எந்த நடவடிக்கைகளையும் அரசு முன்னெடுக்காது. வெள்ளை வானில் கடத்தியவர்களை முதலைகளுக்கு உணவாகப் போட ஜனாதிபதி பணித்தார் என்று கூறியவர்கள்தானே இவர்கள். இப்போது தேர்தல் காலத்தில் ஒவ்வொரு பொய்களைக் கூறிக்கொண்டு அரசை வீழ்த்த முயற்சிக்கின்றனர். இதில் உண்மைத்தன்மை எதுவும் இல்லை- என்றார். (த)

# சுகாதார கழிவுகளுடன் கொள்கலன்களை அனுப்பியவர் லண்டனில் விசாரணையில்

*மேன்முறையீட்டு நீதிமன்றில் சட்டமா அதிபர்*

கொழும்பு, ஜூலை 25

தமது நாட்டின் சுற்றாடல் மற்றும் சுகாதார சட்டங்களை மீறி இலங்கைக்கு கழிவுகள் அடங்கிய கொள்கலன்களை ஏற்றுமதி செய்த இங்கிலாந்து நிறுவனத்திடம் அந்த நாட்டு அரசு விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நேற்று அறிவித்துள்ளார்.

குறித்த நிறுவனத்தின் உரிமையாளர் வெங்கடீ உதுராமனிடம் இங்கிலாந்து சுற்றாடல் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

உரிமையாளரின் சகோதரரால் கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று சட்டமா அதிபர் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் முற்பட்ட அரச சிரேஷ்ட சட்டத்தரணி சாருக ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இங்கிலாந்திலிருந்து நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட குப்பை கொள்கலன்களை மீள் ஏற்றுமதி செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

குப்பை இறக்குமதிக்கு எதிராக சுற்றாடல் நீதிக்கான மையம் மற்றும் அதன் நிறைவேற்று பணிப்பாளர் ஹேமந்த விதானகே ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு தொடர்பில் அரச சிரேஷ்ட சட்டத்தரணி மன்றில் தமது தரப்பு வாதங்களை முன்வைத்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், நீதிபதி எம்.டி. நவாஸ் மற்றும் நீதிபதி சோபித்த ராஜகருணா ஆகியோர் முன்னிலையில் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு மீதான அடுத்த கட்ட விசாரணை ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த)

# விழுமியங்களைக் கொண்டிராத கல்வியால் பயனேதுமில்லை

*சுட்டிக்காட்டுகின்றார் குமார் சங்கக்கார*



**கொழும்பு, ஜூலை 25**

**இனவெறிக்கு எதிராக கடுமையான கருத்துகளை வெளியிட்டுள்ள குமார் சங்கக்கார, விழுமியங்களை அடிப்படையாகக் கொள்ளாத கல்வி பாரபட்சத்தை தடுத்து நிறுத்தாது என்று தெரிவித்துள்ளார்.**

உண்மையான வரலாறை கற்பிப்பதன் மூலம் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று குறிப்பிட்டுள்ள சங்கக்கார, சுத்தம் செய்யப்பட்ட வரலாறைக் கற்பிப்பதால் பயனில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஜோர்ஜ்புளொயிட்டின் கொலைக்கு பின்னர் தீவிரமடைந்துள்ள 'பிளக் லைவ் மட்டர்ஸ்' குறித்து கருத்து வெளியிடும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீங்கள் கல்வி கற்றவரா இல்லையா என்பது முக்கியமல்ல. மிகச்சிறப்பாகக் கல்வி கற்றவர்கள் மிகமோசமான செயல்களில் ஈடுபடுகின்றமையை நான் பார்த்திருக்கின்றேன். விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டதாக உங்கள் கல்வி அமைந்திருக்காவிட்டால் நீங்கள் பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள்.

நல்லவர்கள், கெட்டவர்கள், மோசமானவர்கள் என அனைவர் மீதும் கவனத்தைச் செலுத்தவேண்டும். உண்மையான வரலாறு என்ன என்பதை அறிந்துகொண்டபின்னர் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படும்.

மாற்றங்கள் ஒரேநாளில் ஏற்படாது. அது நீங்கள் ஒரு மாதம் ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு பின்னர் மறந்து போகின்ற விடயமல்ல. அது உலகில் அனைவரையும் உள்ளடக்கிய மெதுவான உறுதியான நடவடிக்கை- என்றார். (த)

# குருபரன் மீதான தடையை உடன் நீக்கி பேரவை கௌரவம் பேணப்பட வேண்டும்

*தமிழ் சிவில் சமூக அமையம் அறிக்கை*

யாழ்ப்பாணம், ஜூலை 25

தனக்குரிய சுயாதீனத்தை துணிவோடு பயன்படுத்தி குருபரனுக்குரிய உரிமையை உரிய முறையில் நிலைநாட்டுவதன் மூலம் தனது கௌரவத்தைப் பேணிக்கொள்ள முன்வர வேண்டுமென்று யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவையை பற்றுரிமையோடு கோருகின்றோம். இந்தத் தடையை உடனடியாக நீக்குமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவையும் கோருகிறோம்.

இவ்வாறு தமிழ் சிவில் சமூக அமையம் அறிக்கை ஒன்றின் ஊடாகக் கோரியுள்ளது.

இது பற்றி அந்த அமையத்தின் தலைவர் அ. கஜேந்திரன் பேச்சாளர் வி. யோகேஸ்வரன் ஆகியோர் இணைந்து கையெழுத்திட்டு அனுப்பிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறை முதுநிலை விரிவுரையாளர், கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகி வாதாடுவதற்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தடைவிதித்துள்ளது. அதை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பேரவையும் ஏற்று தடை விதித்துள்ளது. அதனால் குருபரன் சட்டத்துறை விரிவுரையாளர் பதவியைத் துறந்துள்ளார்.

பல்கலைக் கழகங்களுக்கான தாபனக் கோவையின், எட்டாவது பிரிவின் கீழ், நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகி வாதாடுவதற்கான அனுமதியை முறையாகப் பெற்று, 2011ஆம் ஆண்டு முதல் கலாநிதி குருபரன் பல்வேறு பொது நல வழக்குகளில் வாதாடி, நீதி நிலை நிறுத்தப்படுவதற்குத் துணையாக இருந்து வந்துள்ளார். இந்தநிலையில், நீதி நிலைநிறுத்தப்படுவதற்கான முறைமையின் மீதும், நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையின் மீதும் மேற்கொள்ளப்பட்டுள்ள மிக மோசமானதும், கீழ்த்தரமானதுமான தாக்குதலாகவே இந்தத் தடையை நாம் நோக்குகிறோம்.

பல்கலைக்கழகங்களில் நடப்பிலுள்ள தாபன விதிக்கோவையின் விதிமுறைகளுக்கமைவாக முறையான அனுமதிபெற்ற பின்னரே குருபரன் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகி வாதாடி வருகின்றார். எனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கமைவாக வழங்கப்பட்ட அனுமதியை, இந்தத் தடை எதேச்சாதிகாரமான முறையில் மறுதலிக்கிறது. இது அநீதியானது.

பிரயோகம் சார்ந்த, தொழில் வாண்மைக் கற்கை நெறிகளில், கற்பிப்பவர்கள் நேரடியான பிரயோக அனுபவத்தைத் தொடர்ச்சியாகப் பெறுவதை உறுதிப்படுத்தி, அதனூடாகக் கற்பித்தல் தரத்தை மேலும் செழுமையடையச் செய்யலாம் என்ற அடிப்படையில் உலகளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்கள் இவ்வாறான நடைமுறையை ஊக்குவித்து வருகின்றன. இந்தவகையில், மருத்துவத்துறை, பொறியியற்துறை, சட்டத்துறை போன்ற இன்னோரன்ன துறைகளில், கற்பிப்பதற்கு மேலாக தத்தம் துறைகளில் பிரயோக நிலைத் தொழிற்பாடுகளில் ஈடுபடுவது அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையாகவே இருந்து வருகிறது. இவ்வாறான நடைமுறையின் மீதான தடை வழமைக்கு மாறானதொன்று.

சட்ட உதவியைத் தடுப்பதனூடாக நீதி வழங்கலைத் தடுப்பதையும், அதன் வழி குற்றம் புரிந்தோரைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டே இந்தத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமது குற்றமற்ற தன்மையை நிரூபிக்கத் தேவையான உச்சக்கட்ட சட்ட நிபுணத்துவம் சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக இலங்கை இராணுவத்துக்கு கிடைத்து வருகிறது. அதன் வழி தமது நியாயத் தன்மைகளை நிரூபிப்பதை விடுத்து, சாதாரண குடிமக்களுக்குக் கிடைக்கக் கூடிய சட்ட உதவிகளைத் தடுப்பதனூடாக தமது நலன்களைப் பாதுகாக்க விழையும் கயமைத்தனமான செயற்பாட்டை இலங்கை இராணுவம் முன்னெடுத்து வருகிறது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இந்த நடவடிக்கைக்கு ஒத்திசைவாக நடந்துகொண்டிருப்பதன் மூலம், சிங்கள பௌத்தப் பேரினவாத மனநிலை கொண்ட பல்வேறு பொது நிறுவனங்களில் தமதும் ஒன்று என்பதை நிரூபித்துள்ளது.

மீள நிகழாமை மற்றும் பொறுப்புக் கூறலுக்கான பொறிமுறை உள்ளகப் பொறிமுறையாக இருக்க முடியாது என்பதற்கான நிதர்சனமான உதாரணமாகவும் இந்தத் தடை முயற்சி விளங்குகிறது. அதியுயர் கல்விசார் விழுமியங்களைப் பேண வேண்டிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உட்பட, சகல நிறுவனங்களும் இனத்துவச் சார்பு நிலை கொண்டுள்ளமையையும், நீதி வழுவா நெறிமுறை இங்கு இல்லை என்பதையும் இந்தச் சம்பவம் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது- என்றுள்ளது.

(த)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 . 07 . 1924 | 24 . 07 . 2020 |

# கந்தையா சிவசம்பு

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவசம்பு நேற்று (24.07.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ் சென்றவர்களான கதிரேசு - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான துரைராசா, சிவஞானம் மற்றும் ராசமணி, செல்வராணி, சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தசாமி, சாந்தம், பஞ்சாட்சரம் ஆகியோரின் மைத்துன ரும், காலஞ்சென்ற கணேசன் மற்றும் நடேசன், மகேசன், திலகவதி, விமலாவதி, சிவனேசன், பத்மாவதி, புஸ்பவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், றோஸ்மலர் காலஞ்சென்ற பராசக்தி மற்றும் அமுதகௌரி காலஞ்சென்ற விநாயகலிங்கம் மற்றும் பாலசுப்பிரமணியம், சிவகௌரி, தர்மேஸ்வரன், தயாபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜயநிர்மலா, விஜயலலிதா, காலஞ்சென்ற விஜயசிறி, மற்றும் விஜயகாந்தன், விஜயரூபன், விஜயராஜ், மௌலீசன், சுகாசினி, கௌசிகன், காலஞ்சென்ற அஜந்தன் மற்றும் மயூசன், சுவேகா, வினோஜன், மதிபாலன், சுபாஜினி, சிவபாலன், சுகாஜினி, சிந்துஜன், மயூரன், அஜந்தா, பிறிஸிலா, பியூலா, கிதியோன், யோன்கீனாத், சங்கீதா, கீர்த்திகா, சஞ்சீவ், கஜி, டயானா, கபில் ஆகியோரின் பேரனும் துஷ்யா, கார்த்திகன், தர்சன், சிந்துஜன், அரவிந்த், பிரவின், சஞ்சிதா, நிறோசன், வர்ஷா, வமிலா, விஸ்வா, நிலா, சாருஜா, சுபேதனன், நிக்ஷிகா, நிருஜன், நிலாஜன், கிவோசன், டானி, சிற்கேனு, செமாயா, சேரா, அர்வனா, நிம்ஷியா, அபிஷாக், கெத்சியா, கவிப்பிரியா, மதியழகன், சாரு, சுஜனி, யதுர்சன், அபிகா. ஜஷாக், கிருத்திகன், நவீசன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2020) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்று பிற்பகல் 01.30 மணியளவில் குச்சப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 6548 459 (மகன்) தகவல்:- குடும்பத்தினர்

# பெண்ணை வீடியோ எடுக்க முயன்றதால் பரபரப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச்சந்தை வாசலில் பெண் ஒருவரை நபரொருவர் கையடக்கத் தொலைபேசியில் வீடியோ எடுக்க முற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

குறித்த பெண் முகக்கவசம் அணியவில்லை என்று சுகாதார அதிகாரி அந்த பெண்ணிடம் உரையாடிக் கொண்டிருக்கும் போது, பிரதேச சபை ஊழியரொருவர் அந்தப் பெண்ணை வீடியோ எடுக்க முற்பட்டுள்ளார். இந்தச் செயலைக் கண்டித்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணி தலைவி வாசுகி சுதாகர், குறித்த பெண்ணை வீடியோ எடுக்க முற்பட்டமை அவரின் தனியுரிமையை மீறும் செயலாகும்' - என்று தெரிவித்துள்ளார். (ம)

## லண்டனுடன் இருதரப்பு வர்த்தகம்

ஐக்கிய இராச்சியத்துடனான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை முடுக்கி விடுவது குறித்து வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் ஆகியோர் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச வர்த்தக அமைச்சர் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:


இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை முடுக்கிவிடுதல் மற்றும் ஒத்துழைப்புப் பகுதிகளை விரிவாக்குதல் குறித்து அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் அமைச்சர் ரணில் ஜெயவர்தன ஆகியோர் தொலைபேசி வாயிலான மாநாடொன்றின் மூலமாக நேற்று கலந்துரையாடினர். இரண்டு அமைச்சர்களுக்கு மிடையிலான முதலாவது உத்தியோகபூர்வ தொடர்பாடல் இதுவாகும்- என்றுள்ளது. (ம)

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

**வைத்திலிங்கம் சுப்பிரமணியம்**



பிறப்பு 20.07.1939 — இறப்பு 25.06.2020


கடந்த (25.06.2020) வியாழக் கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் வைத்திலிங்கம் - சுப்பிரமணியம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.07.2020) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

68/2, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 • 03 • 1934

மறைவு 05 • 08 • 2019

அமரர்

**கணபதிப்பிள்ளை குலநாயகம்**

திதி : ஆடிப்பூர்வபட்ச பஞ்சமி

ஆண்டொன்று போனாலும்
ஆறவில்லை எம் துயர்
உங்கள் நினைவால் தினமும்
விழிநீர் சொரிகின்றோம்
ஆத்மா இறையடியில் சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.

பயித்தோலை,
அச்சுவேலி தெற்கு

குடும்பத்தினர்.

---

### மரண அறிவித்தல்



**மேரி பிலோமினா பயஸ் நோபேட்**

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி பிலோமினா பயஸ் நோபேட் 23.07.2020 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை பேதுருப்பிள்ளை - அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கரம்பொன்னைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை முத்தையா - விக்ரோரியா தம்பதி யரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பயஸ் நோபேட் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வென்செஸ்லாஸ் யோசப், மரியநாயகம் மற்றும் றீற்றா பேர்ணடேற் (ஓய்வு நிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வீனஸ் (UK), காலஞ்சென்றவர்களான பீற்றர், தாசன், மரியதாஸ் மற்றும் அன்ரன் அருள்நாயகம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், நோயல் சுரேஸ்குமாரின் (உரிமையாளர் - மிஸ்பா கிறிஸ்தவ புத்தக நிலையம் - யாழ்ப்பாணம்) அன்புப் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.07.2020) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக யாழ். புனித கொஞ்செஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

67, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
A.N.சுரேஸ்குமார்

077 673 6820

(cs 32620) (13-17)

---

### தேவை

சாவகச்சேரி தேவாலய வீதியில் உள்ள ஸ்ரீ விக்னேஸ்வரா மொத்த விற்பனை நிலைய வாகனத்தில் பொருள்கள் விநியோகம் செய்வதற்கு பணியாளர் தேவை.

021 227 0355

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 • 04 • 1960

மறைவு 05 • 08 • 2019

திதி: 25.07.2020

மருதங்கேணி தெற்கு, தாழையடியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி தவமணி தங்கராசா**

*எமக்கு ஆணிவேராக நின்று நிழல் தந்து நிமிர்ந்து வாழ வழிவகுத்த அன்புத் தாயே!*
*எதையும் திடமாக எதிர்கொள் என துணிந்து நின்ற தைரியத்தின் மறு உருவமே!*
*அனைத்தும் அன்பே என அறிவுறுத்தி அன்புறவாய் நின்ற அன்னையே!*
*இன்று வருடம் ஒன்றாயினும் உங்கள் பிரிவு ஈடுகட்ட முடியாது!*
*என்றும் உங்கள் நினைவுகள் எமக்கு கல்லில் பொறித்த எழுத்துக்களே அம்மா!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

கணவர் , சகோதரி , சகோதரன் ,
மகன்மார் , மகள்மார் , மருமக்கள் ,
பேரப்பிள்ளைகள் ,

---

### வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் 37 வது ஆண்டு நினைவேந்தல்

**(ஜூலை 25,27)**

**தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் - ஜூலை 25**



தலைவர் தங்கத்துரை — தளபதி குட்டிமணி — முன்னணி வீரர் ஜெகன்

இலங்கையில் 1983 ம் ஆண்டு நடைபெற்ற இனப்படுகொலையின் கோரத் தாண்டவத்தின் ஒரு படலமாக கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம் பெற்ற படுகொலைகளில் கொல்லப்பட்ட

**தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி, ஜெகன்,**

தேவன், நடேசுதாசா சிவபாதம் மாஸ்ரர், டாக்டர் இராஜசுந்தரம் , குமார், சிறீ குமார், மரியாம்பிள்ளை , குமாரசிங்கம் உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் தமிழ் இன விடுதலைப் போராட்டத்தில் கொல்லப்பட்ட

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொது மக்களுக்கும் மாவீரர்களுக்கும், வீர மறவர்களுக்கும் எமது வீர வணக்கம், கண்ணீர் அஞ்சலி.

விளம்பர அனுசரணை : எம்.கே.சிவாஜிலிங்கம், செயலாளர் நாயகம்,
தமிழ்த் தேசியக் கட்சி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.

தொலைபேசி - 077 772 9020

**தமிழ்த் தேசியக் கட்சி (TNP)**

# எலிக் காய்ச்சல் பாதிப்பு; எண்ணிக்கை அதிகரிப்பு

## விவசாயிகளுக்கு ஆலோசனைகள்

கொழும்பு, ஜூலை 25
இலங்கையில் இந்த ஆண்டு எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

எதிர்பாராத வானிலை, பருவமழை தொடர்பான மாற்றங்கள் மற்றும் கைவிடப்பட்ட வயல்களில் வேலை செய்வது போன்ற காரணங்களினாலேயே எலிக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் ஆலோசகர், தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் மஞ்சுளா காரியவாசம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜூன் நடுப்பகுதியில், இந்த நோய் குறித்த சந்தேகத்துக்கிடமானவர்களின் எண்ணிக்கை 3,500 ஆக இருந்தது. இரத்தினபுரி 25.3 சதவீத நோய்த்தொற்றுகள் அதிகம் உள்ள இடமாக மாறியுள்ளது. அத்துடன், களுத்துறை, கேகாலை, காலி, பதுளை, கொழும்பு, அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் விவசாயிகள் சம்பந்தப்பட்ட 40% தொற்று நோய்களை அவர் பட்டியலிட்டுள்ளார்.

விவசாய நடவடிக்கைகள் இல்லாமல் 10 ஆண்டுகளுக்கு மேலாக பொதுமக்கள் தங்களது கைவிடப்பட்ட நிலங்களில் அண்மையில் பயிரிடத் தொடங்கியுள்ளனர். இதனால் பொதுமக்கள் பாக்டீரியாவால் எளிதில் பாதிக்கப்படுகின்றனர். இந்தநிலையில், விவசாயிகள், இரத்தின சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் வடிகால்களில் பணிபுரியும் நபர்கள் அருகிலுள்ள சுகாதார அலுவலரிடமிருந்து முன் சிகிச்சையைப் பெறுவது மிக முக்கியமானதாகும். இந்த சிகிச்சை வாரத்திற்கு ஒருமுறை எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார். சிகிச்சைகள் பெறுவதில் தாமதம் ஏற்படும் போது கடுமையான விளைவுகளுக்கு வழிவகுக்கும் அல்லது முக்கிய உள் உறுப்புகளுக்கு ஏற்படும் சேதத்தால் மரணம் ஏற்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ரி2)

## கித்துள் கள் வடித்தலுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 25
கித்துள் மரத்தில் கள் வடிப்பவர்களைக் கைதுசெய்யவோ, அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவோ வேண்டாம் என்று பொலிஸ்மா அதிபர் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அனுமதிப்பத்திரமின்றி சட்டத்துக்கு அமைவாக கித்துள் கள் வடித்தல் மற்றும் அதனூடாக கள் தயாரித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டாம் எனவும் பொலிஸ்மா அதிபர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ரி2)

## கர்ப்பிணித் தாய்மாருக்கு பழுதடைந்த போசாக்குணவு

### முகாமையாளருக்கு மன்று எச்சரிக்கை

மல்லாவி, ஜூலை 25
கர்ப்பிணிகளுக்கு பழுதடைந்த போசாக்கு உணவுப்பொருள்களை வழங்கிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளர் ஒருவரை முல்லைத்தீவு நீதிமன்று எச்சரித்துள்ளது.

வழங்கிய கடலையை மீளப்பெற்று நல்ல கடலையை வழங்குவதற்கு உத்தரவிட்ட நீதிவான் வழக்கை ஓகஸ்ட் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ரி1-9)

## ஊன்றுகோல் வழங்கல்

கிளிநொச்சி, ஜூலை 25
யுத்தத்தில் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகள் 32 பேருக்கு கரைச்சி பிரதேச மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் செயலாளர் மு.நெல்சனால் ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டன.

இதற்கான நிதியுதவி மருத்துவர் ஆருணி வேலழகன் மற்றும் திருமதி பிரார்த்தனா சுமன் ஆகியோரால் வழங்கப்பட்டது. (ரி1-222)



## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை ஞாயிறு காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **கிளிநொச்சி மாவட்டத்தில்,**
பெரியபரந்தன், முட்கொம்பன், நல்லூர், பூநகரி, பள்ளிக்குடா, கௌதாரிமுனை, 66வது பிரிவு இராணுவ முகாம், Mechinity Infinity படைப்பிரிவு, பயிற்சி முகாம், பிரதேச செயலகம் புநகரி ஆகிய இடங்களிலும்,
**வவுனியா மாவட்டத்தில்**, ஜோசப் முகாம், SFHQ Vanni இராணுவ முகாம், விமானப்படை இராணுவ முகாம், விமானப்படை முகாம் றேடார் ஆகிய இடங்களிலும் **மன்னார் மாவட்டத்தில்** , காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னாரிலிருந்து தலைமன்னரர் வரை, தலைமன்னார் கடற்படை முகாம், தலைமன்னார் Palmyra house, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, கடலேரி, சாந்திபுரம், தரவன்கோட்டை, Southbar, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## இன்றைய நாள்

**மேடம்:** கணவன், மனைவி இடையே ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். புதியவர்களின் நட்பை பெறுவீர்கள். குடும்பத் தேவையை பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் இருக்கும்.

**இடபம்:** கலைஞர்களுக்கு சிறிய சாதனை காரணமாக தன்னம்பிக்கை கூடும். வியாபாரத்தில் எதிர்பார்த்த நல்ல மாற்றத்தை காண்பீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் சாதுர்யமாக பேசி லாபத்தை அதிகப்படுத்துவீர்கள். அலுவலகத்தில் உள்ள நிலுவைப் பணிகளை முடிப்பதற்கு மேலதிகாரி ஆதரவாக இருப்பார்.

**கடகம்:** சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்து கொள்வீர்கள். உறவினரிடமிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். பெண்கள் பணத்தின் அருமையை உணர்ந்து சேமிப்பை அதிகப்படுத்துவர்.

**சிம்மம்:** தொழில் ரீதியான பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சில முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். புதிய முயற்சிகள் உற்சாகம் அளிக்கும்.

**கன்னி:** நெருங்கிய ஒருவரின் சந்திப்பால் கடந்த கால இனிய அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். பணியாளர்களுக்கு பொறுப்பு அதிகரிக்கும். வியாபார விஷயமாக திடீர் பயணத்தை மேற்கொள்வீர்கள்.

**துலாம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். வீடு வாங்குவது சம்பந்தமான முயற்சிகளில் உதவி கிடைக்கும். வியாபாரிகள் எடுத்த செயல்களை செய்து முடிப்பதில் சிறிய அளவில் தாமதம் ஏற்படும்.

**விருச்சிகம்:** பணவசதி எதிர்பார்த்த அளவில் இருக்கும். வியாபார வளர்ச்சிக்கு கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**தனுசு:** பழைய கசப்பான சம்பவங்களால் நிம்மதி குறையலாம். அலுவலகத்தில் மற்றவர்களை நம்பி முக்கியப் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம்.

**மகரம்:** தாயாரின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு பின் சரியாகும். வியாபாரத்தில் கொடுக்கல், வாங்கலில் கவனம்தேவை. எடுத்த முயற்சிகளை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும்.

**கும்பம்:** பிள்ளைகளின் மூலம் பெருமை கிடைக்கும். எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் வளரும். உத்தியோகத்தில் சிறு சிக்கல்கள் வந்து நீங்கும்.

**மீனம்:** உங்களுக்கு பிரச்சினை தந்தவர்கள் அடங்கி விடுவார்கள். பணவரவு நல்லபடியாக இருக்கும். எதிர்பாலினத்தவரின் நட்பால் மகிழ்ச்சி உண்டாகும்.

# இனவெறிக் கலாசாரம் கட்டியெழுப்பப்படுகின்றது

## தேசிய மக்கள் சக்தியின் அநுர தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 25
நாட்டில் மக்களிடையே என்றும் இல்லாத இனவெறியை ஆட்சியாளர்கள் கட்டியெழுப்பியுள்ளனர் என்று தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் அதிகளவான மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. நாடே இரத்த வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தது. இவ்வாறு 30 வருடகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நாட்டை, மோதல்கள் இல்லாமல் பராமரிக்க நாட்டின் ஆட்சியாளர்களால் இன்னும் முடியவில்லை. என்றுமே இல்லாத இனவெறிக் கலாசாரத்தை ஆட்சியளார்கள் தற்போது உருவாக்கி வருகின்றனர்.

கருணா அம்மான் கிழக்கிற்கு சென்று, இராணுவத்தினரைக் கொன்றதாக கூறி தமிழர்களின் வாக்குகளை பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றார். பின்னர் தெற்கிற்கு வந்து புலிகள் அமைப்பைத் தோல்வியடையச் செய்தமைக்கு தாங்கள் தான் காரணமென கூறி சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற முயற்சிப்பார். இத்தகையவர்கள் அரசியலில் தங்களின் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்கு ஏற்ற வகையிலேயே அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். தற்போது நாட்டில் காணப்படுவது இனவாத அரசியலாகும்' - என்றார். (ம)



# கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை நகரங்களை அழகாக்க அரசு திட்டம்



**கொழும்பு, ஜூலை 25**
**கொழும்பு மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை நகரங்களை அழகுபடுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அத்துடன் இயற்கைக்காட்சி வனப்புடைய சூழ்நிலை மேம்பாட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவலை அமைச்சர் பந்துல தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபை இதனை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இதுதவிர, 1952 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட லும்பினி கலையரங்கில் தற்பொழுது உள்ள வசதி போதுமானவையல்ல. காலத்துக்கு பொருத்தமான வகையில் அதனை நவீனமயப்படுத்தல் மற்றும் சீரமைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தேசிய அடிப்படை ஆய்வுகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின் கீழ் உயிருள்ள நுண்ணுயிரிகளைக் கொண்ட மண் ஊட்ட உரப் பாவனையை அறிமுகப்படுத்தி, அடுத்த வருடத்தில் அந்த உரத்தைப் பயன்படுத்தி நெல் உற்பத்தி செய்யப்படும் நிலப்பரப்பை ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் வரையில் அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தித் திட்டத்தில் பிரதான சுரங்கத்தில் ஏற்பட்ட தண்ணீர் ஒழுக்குக் காரணமாக பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மொரகொல்ல நீர் மின் உற்பத்தித் திட்டத்தின் பணிகளைப் பூர்த்தி செய்யும் கால எல்லையை நீடித்தல் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் சம்பந்தப்பட்ட கால எல்லை நிறைவடையும் தினத்தை நீடிக்கவும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவித்தார். (த)

## 43 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூலை 25
கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் ஒரு தொகுதி இலங்கையர்கள் நேற்று நாட்டை வந்தடைந்தனர்.

டோஹா, கட்டாரில் இருந்து 13 பேரும் ,சென்னையில் இருந்து 30 பேருமே இவ்வாறு நாட்டை வந்தடைந்ததாக கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

*ஐ.டி.எச்.சிலிருந்து தப்பியோடிய*

## கொரோனா நோயாளியை துரத்திப் பிடித்தோருக்கு பரிசு

கொழும்பு, ஜூலை 25
ஐ.டி.எச். மருத்துவமனையிலிருந்து தப்பிச் சென்ற கொரோனாத் தொற்றாளரைக் கண்டுபிடிக்க உதவிய கொழும்பு தேசிய மருத்துவமனையின் ஊழியர்களுக்கு பொலிஸ்மா அதிபரால் சிறப்பு பரிசுத் தொகையொன்று வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு உடனுதவிய அனைத்து ஊழியர்களுக்கும் இது வழங்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று அதிகாலை மருத்துவனையிலிருந்து தப்பிச் சென்ற தொற்றாளர் முற்பகல் 10 மணியளவில் கொழும்பு தேசிய மருத்துவமனை வளாகத்தில் கண்டறியப்பட்டார்.

குறித்த தொற்றாளரைக் கண்டுபிடிக்க உதவிய இராணுவத்தினர் உள்ளிட்ட அனைத்து ஊடக நிறுவனங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொலிஸார் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர். (த)

# ஆயிரம் ரூபாவுக்கான அழுத்தத்தைத் தொடருவோம்

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

நுவரெலியா, ஜூலை 25
தமிழ் முற்போக்கு கூட்டணி யின் சேவைகளை விமர்சிப்ப தற்கு சில அரசியல் கட்சிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. குறுகிய காலப் பகுதிக்குள் பல திட்டங்களைச் செய்து முடித்துள்ளோம். ஆயிரம் ரூபாவை பெறுவதற்கான எமது அழுத்தங்களும் தொடரும். இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான முன்னாள் அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் எமக்கு அமோக ஆதரவைத் தந்தீர்கள். நானும், திகாம்பரமும், திலகரும் நாடாளுமன்றம் சென்றோம். மூவரும் சிறப்பாகச் செயற்பட்டுள்ளோம். திலகர் நாடாளுமன்றத்தில் சிறப்பாகச் செயற்படக்கூடியவர். எனவே, அவரை தேசியப்பட்டியலில் உள்ளே கொண்டுபோக வேண்டும். அது எமது கடமை.

கல்வி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னரும் எனது பணிகள் தொடர்ந்தன. கணித, விஞ்ஞான பாடசாலைகள் மலையகப் பகுதிகளில் திறக்கப்பட்டன. நுவரெலியா மாவட்டத்துக்கு மாத்திரம் அல்ல, எல்லா மாவட்டத்துக்கும் சேவை செய்துள்ளேன்.

முழு மலையகத்துக்கும் எமது சேவை தொடரவேண்டுமானால் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யவேண்டிய பொறுப்பு நுவரெலியா மாவட்ட மக்களுக்கே இருக்கின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளப் பிரச்சினையை ஜனாதிபதி மற்றும் பிரதமரால் தீர்த்து வைக்கமுடியாது. கம்பனிகள்தான் அதனைச் செய்யவேண்டும். ஆயிரம் ரூபாவுக் கும் மேல் தற்போது தேவை. எனவே, குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாவை வழங்குவதற்காவது கம்பனிகள் முன்வர வேண்டும். அதற்கான எமது அழுத்தங்கள் தொடரும்- என்றார். (ஐ)

## தேர்தல் பரப்புரை பிரசுரங்களுடன் இருவர் கைது

மட்டக்களப்பு, ஜூலை 25
மட்டக்களப்பில், தேர்தல் பரப்புரை துண்டுப் பிரசுரங்களுடன், இரண்டு வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பிறைந்துறைச்சேனை பிரதேசத்தில் தேர்தல் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களான ஹாபிஸ் நசீர் அஹமட் மற்றும் சட்டத்தரணி ஹபீப் றிபான் ஆகிய இருவரின் ஆதரவாளர்களுக்கிடையில் கைக்கலப்பு ஏற்பட்டது. சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்றனர். பொலிஸாரைக் கண்டதும் அங்கிருந்தவர்கள் தப்பி ஓடியுள்ளனர். இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஹாபிஸ் நசீர் அஹமட்டின் ஆதரவாளர்களின் இரண்டு வாகனங்களும் மற்றும் வாகனத்தில் இருந்த அவரது தேர்தல் பரப்புரை துண்டுப் பிரசுரங்களும் கைப்பற்றப்பட்டன. வாகனங்களின் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

## கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 17 பேர் குணமடைவு

கொழும்பு, ஜூலை 25
கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 17 பேர் முழுமையாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.



இதற்கமைய இலங்கையில் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2,094 பேராக உயர்வடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் ஒரு லட்சத்து 50ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் இதுவரை 2,753 பேர் பாதிக்கப்பட்டதுடன் 11 பேர் உயிரிழந்துள்ளனர். (ஐ)

# ஒரு கோடி ரூபா வங்கிகளில் கொள்ளை

## தெற்கு ஊடகம் தகவல்

இலங்கையில் பிரதான அரச வங்கி மற்றும் தனியார் வங்கி ஆகியவற்றில் ஒரு கோடி ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடன் அட்டைகள் மூலம் கொள்ளையடிக்கும் இந்தக் கும்பலலைத் தேடிக் குற்ற விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சர்வதேச ஹெக்கர்கள் மற்றும் இலங்கை குழுவொன்றும் இணைந்து மேற்கொண்டதாகச் சந்தேகிக்கப்படுகின்ற இந்த நடவடிக்கையில் இரண்டு வங்கிகளிலும் பல வருடங்களாக பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. இரண்டு வங்கிகளும் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கமைய குற்ற விசாரணைத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

வெளிநாடுகளுக்குச் சென்ற இலங்கையர்களுக்கு குறித்த வங்கிகளில் வழங்கப்படும் கடன் அட்டை மூலம் பொருள்கள் பெற்றுக் கொண்டு இந்த மோசடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெளிநாட்டு வேலை வாய்ப்பைத் தேடி ஜப்பான் சென்ற குழுவொன்று இந்த மோசடியில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

கணக்குகளில் பணம் குறையும் மோசடிகளைப் புரிந்து கொண்ட போதிலும், அதனை வங்கிகளினால் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது. இரகசிய எண்களின் தவறினால் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். (ஐ)

# சுற்றறிக்கைக்கு ஏற்ப செயற்படுவதற்கு சுகாதாரப் பரிசோதகர்கள் இணக்கம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

**தனிமைப்படுத்தல் சட்டத்தின் விளைவு மற்றும் சில துறைசார் அதிகாரங்களைத் தகுதிவாய்ந்த அதிகாரத்தின் கீழ் மேற்பார்வை மற்றும் அவர்களது உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டு, தற்போதுள்ள தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தின் விதிகளைத் திருத்தாமல் திணைக்களச் சுற்றறிக்கைக்கு ஏற்ப பகிர்ந்து கடைப்பிடிக்க பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இணங்கியுள்ளனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

எனவே சுகாதார அமைச்சு இந்த விடயம் தொடர்பில் விரைவாக செயற்பட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை வெளியிடும் படி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோருவதாக அதன் மத்திய மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் விசேட வைத்தியர் வாசன் இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; புதன்கிழமை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் ஆகியவற்றுக்கு இடையே விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

தற்போதுள்ள தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் வெளிவரவுள்ள தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்புக்கு ஏற்ப மேற்குறிப்பிட்ட முறையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் கொவிட்19 தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளைச் செயற்படுத்த பொது சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, சுகாதார அமைச்சு இந்த விடயம் தொடர்பில் விரைவாக செயற்பட்டு மேலே குறிப்பிடப் பட்டுள்ள சுற்றறிக்கையை வெளியிடும்படி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோருகின்றது.

கொரோனா நோயைக் கட்டுப்படுத்தி சரியான மட்டத்தில் பேணுவதற்காக சகல தரப்பினரும் உச்ச ஆதரவை நல்குவது தேசிய பொறுப்பாகும் - என்றார். (ரி2)

# கமநல அமைப்புக்கு புதிய உரக் களஞ்சியம்

## மறவன்புலவில் நேற்று அடிக்கல் நடுகை

சாவகச்சேரி, ஜூலை 25

தென்மராட்சி தெற்கு காற்றாலை நிறுவனத்தினரால் மறவன்புலவு கமநல அமைப்புக்கு உரக்களஞ்சியம் அமைத்து வழங்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு, மறவன்புலவு கமநல அமைப்பு வளாகத்தில் நேற்று காலை இடம்பெற்றது. இந் நிகழ்வானது, மறவன்புலவு கமநல அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் காற்றாலை நிறுவனப் பிரதிநிதிகள், கைதடிப் பிரதேச கமநல சேவைகள் நிலையப் பெரும்போக உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர். உரக் களஞ்சியம் அமைக்கப்பட்டதும் எதிர்காலத்தில் களஞ்சியத்தில் வைத்து விவசாயிகளுக்கு உரவகைகள் விநியோகிக்கப்படும் என்று மறவன்புலவு கமநல தலைவர் தெரிவித்தார். (ரி2-9)

# தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில்!

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த மூவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளன.

கிளாலியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 25 வயது இளைஞரும், நுணாவில் மேற்கில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 64 வயது முதியவரும், மீசாலை வடக்கில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 20 வயது இளைஞரும் காயமடைந்துள்ளனர். (ரி1-9)

# உணவகங்களில் மஞ்சளுக்கு பதிலாக நிறச்சாயம்

கொழும்பு, ஜூலை 25

இலங்கையில் மஞ்சள் தூளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் உணவகங்களில் மஞ்சள் தூளுக்குப் பதிலாக நிறச் சாயத்தைப் பயன்படுத்தி உணவுகள் தயாரிக்கப்படும் மோசடி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தெரிவித்துள்ளார். அவ்வாறு மஞ்சள் தூளுக்கு பதிலாக நிறச்சாயம் பயன்படுத்துவதற்கான ஆதாரங்கள் தன்னிடம் உள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை, மக்கள் பயன்படுத்தும் தேயிலை தூள் மற்றும் மசாலா தூளின் தரம் தொடர்பிலும் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான மோசடிகள் குறித்து பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ரி2)



# திருநெல்வேலி சந்தையில் 100 கண்காணிப்புக் கமராக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

திருநெல்வேலி சந்தையில் 100க்கும் மேற்பட்ட கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. நல்லூர் பிரதேச சபை இவற்றைப் பொருத்தியுள்ளது என்று சபையின் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

சந்தை வளாகம் மற்றும் கட்டடம் அடங்கலாக அதிகளவிலான கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. சந்தையில் இடம்பெறும் திருட்டு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன என்று பிரதேச சபை தெரிவித்தது. சந்தைக்கு கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்தி வைக்குமாறு ஏற்கனவே சந்தை வியாபாரிகள் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். சந்தையில் வைக்கப்படும் மரக்கறி வகைகள் மற்றும் ஏனைய பொருள்கள் திருடப்படுகின்றமை தொடர்பிலான சம்பவங்கள் அதிகரித்துள்ளமையால் கமராக்கள் பொருத்தப்படவேண்டும் என்று சந்தை வியாபாரிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். (து-17)

# சாவகச்சேரியில் மஞ்சள் 5,000/=

சாவகச்சேரி ஜூலை 25

மஞ்சள் ஒரு கிலோ 5 ஆயிரம் ரூபாவாக சாவகச்சேரியில் விற்பனை செய்யப்படுகிறது. கொரோனா காலத்தில் மஞ்சளுக்கு ஏற்பட்ட கிராக்கியாலும் மஞ்சள் இறக்குமதி இல்லாததாலும் விலை அதிகரித்துள்ளது என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (ரி-19)

# சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு புள்ளிகள்; மீண்டும் அமுல்

கொழும்பு, ஜூலை 25

இலங்கையில் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்குப் புள்ளிகள் வழங்கும்முறை மீண்டும் அமுல்படுத்தப்படவுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வாகன மற்றும் வீதி விபத்துக்களின் போது சாரதிகளுக்கு அபராதம் மற்றும் தண்டனை வழங்கப்படுவது தற்போது நடைமுறையில் உள்ளது. இந்த விதிமுறைகளுடன் சாரதி அனுமதிப்பத்திரத்துக்குப் புள்ளிகள் வழங்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தவுள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றுக்குள் 24 புள்ளிகள் வழங்கப்படும். சாரதிகளால் வீதி விதிமுறைகள் மீறப்படுகின்ற போதும், விபத்துக்களை ஏற்படுத்துகின்ற போதும் இப் புள்ளிகள் குறைக்கப்படும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ரி3)



# நானாட்டானில் புதிய சோதனைச்சாவடி

மன்னார், ஜூலை 25

மன்னார் நானாட்டான் சந்தியிலிருந்து முத்தரிப்புத்துறை செல்லும் வீதியில் கடந்த சில நாள்களாக இராணுவ, பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு போக்குவரத்து வாகனங்கள் சோதனைசெய்யப் பட்டு வருகின்றன. (ரி1-213)

# ஐரோப்பிய நாடுகளுக்குள் மீண்டும் இலங்கையர்கள் செல்லத் தடை

கொழும்பு, ஜூலை 25


ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள், இலங்கையர்கள் நுழைவதற்கு இரண்டாவது தடவையாகவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்



குள் நுழைய கூடிய நாடுகளின் பட்டியல் ஒன்று, இரண்டாவது முறையாகவும் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் அந்த நாடுகளின் பட்டியலில் இம் முறையும் இலங்கை இணைத்துக் கொள்ளப்படவில்லை.

கடந்த 30ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட முதலாவது பட்டியலிலும் இலங்கை இணைத்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ரி2)






# கௌரவம்

வொஷிங்டன், ஜூலை 25
அமெரிக்காவில் நோய்த்தொற்றால் உயிரிழந்த தாதிகளுக்கு வித்தியாசமான முறையில் அஞ்சலி செலுத்தியுள்ளனர் சக தாதிகள்.
கபிடொல் என்றழைக்கப்படும் அமெரிக்க நாடாளுமன்றக் கட்டத்தின் முன்கூடிய தாதிகள் கட்டடத்திற்கு முன்புறம் இருக்கும் திடலில் உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் குளோக் எனப்படும் தாதியர் அணியும் ரப்பர் சப்பாத்தை வரிசையாக அடுக்கிவைத்து அமைதியான முறையில் அஞ்சலி செலுத்தினர். 160க்கும் மேற்பட்ட ஜோடிக் காலணிகள் அங்கு வைக்கப்பட்டன. நோய்த்தொற்றினால் 164 தாதிகள் இறந்துள்ளார்கள் என தேசிய ஐக்கிய தாதிகள் தொழிற்சங்கம் தெரிவித்தது. (ரி1)

தூதரகத்தை மூடும் நடவடிக்கை

# அமெரிக்கா, சீனா ஏட்டிக்குப் போட்டி

**பீஜிங், ஜூலை 25**
**சீனாவின் செங்டு நகரில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்தை மூடுமாறு, பெய்ஜிங் உத்தரவிட்டுள்ளது. அந்தத் தூதரகம் செயற்படுவதற்கான உரிமத்தைச் சீனா இரத்துச் செய்துள்ளது.**



அமெரிக்காவின் ஹியூஸ்ட்டன் நகரில் உள்ள சீனத் துணைத் தூதரகத்தை மூடுமாறு, வொஷிங்டன் உத்தரவிட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பில் சீன வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் அமெரிக்கா எடுத்த நியாயமற்ற நடவடிக்கைக்கு, சட்டரீதியான இந்த பதில் நடவடிக்கை தேவையான நியாயமான ஒன்று எனக் குறிப்பிட்டுள்ளது.
தனது முடிவு குறித்து, சீனாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குத் தகவல் அளிக்கப்பட்டதாகவும் செங்டு நகரில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்தின் செயற்பாட்டையும் நடவடிக்கைகளையும் நிறுத்துவதற்குத் தேவையான குறிப்பிட்ட விதிமுறைகள், அதனிடம் தெரிவிக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# சிலுவைகளை அகற்ற உத்தரவிட்டதா சீனா?

பீஜிங், ஜூலை 25
சீனாவின் சில பகுதிகளில் கிறிஸ்தவ தேவாலயங்களில் உள்ள சிலுவைகளை அகற்றவும், வீட்டில் உள்ள இயேசுவின் படங்களை நீக்கவும் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
சீனாவில் கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். இந்த நிலையில், சில இடங்களில் கிறிஸ்தவர்களின் வீடுகளில் உள்ள இயேசுவின் புகைப்படங்களை அகற்றிவிட்டு, சீன கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களின் படங்களை வைக்குமாறு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
சீனாவின் அன்ஹூய் ஜியான்ங்சு, ஹேபேய் மற்றும் ஸீஜியாங் ஆகிய மாகாணங்களில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. மற்றொரு மாகாணமான ஷாங்ஹியில், இயேசுவின் புகைப்படங்களை அகற்றிவிட்டு கம்யூனிஸ்ட் தலைவர்களின் படங்களை வைக்க அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



# படப்பிடிப்புகளுக்கு உரிமம் கட்டாயம்

*மலேசிய அரசு அறிவிப்பு*

கோலாலம்பூர், ஜூலை 25
மலேசியாவில் நடைபெறும் அனைத்துப் படப்பிடிப்புகளுக்கும் இனி உரிமம் தேவை என்று அந்நாட்டின் தொடர்பு, பல்லூடக அமைச்சர் சைஃபுடின் அப்துல்லா தெரிவித்துள்ளார்.
தொலைக்காட்சி, சமூக ஊடகம் உள்ளிட்ட அனைத்துவகையான படப்பிடிப்புகளுக்கும் அது பொருந்தும்.
படப்பிடிப்பு தொடங்குவதற்கு 7 நாள்களுக்கு முன்னர் தயாரிப்பாளர்கள் தேசியத் திரைப்பட மேம்பாட்டுக் கழகத்திடம் விண்ணப்பம் செய்யவேண்டும்.
உரிமம் பெறாமல் படத் தயாரிப்பில் யாரும் பங்கேற்கவோ படத்தை விநியோகம் செய்யவோ முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)






# இஸ்ரேலிய பிரதமருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 55 பேர் கைது!

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக மத்திய ஜெருசலேமில் ஆயிரக்கணக்கானோர் போராட்டங்களை முன்னெடுத்தனர். போராட்டத்தைத் தொடர்ந்து மோதல்களும், வன்முறைச் சம்பவங்களும் வெடித்தமையால் இஸ்ரேலிய பொலிஸார், போராட்டக்காரர்களை கலைக்க தண்ணீர் பீரங்கி தாக்குதல்களை பயன்படுத்தியுள்ளனர். 55 பேரைக் கைதுசெய்தும் உள்ளனர். பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டு விசாரணை, கொரோனாத் தொற்றுக்கு எதிரான அரசின் மோசமான கையாளுதல் என்பவற்றைச் சுட்டிக்காட்டி நெதன்யாகுவை பதவியலிருந்து ராஜினாமாச் செய்யுமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. (ரி1)

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமஉரிமையுடன் நிறைவான அபிவிருத்தியை நோக்கி...

அ.கிருபாகரன்
கிருபா லேணர்ஸ் அதிபர்
X 2
ஐக்கிய மக்கள் சக்தி

# தொல்பொருள் சட்டத்தை திருத்த மகாசங்கத்தினரைக் கொண்டகுழு

## கவனம் செலுத்துகின்றாராம் கோத்தாபய!

**கொழும்பு, ஜூலை 25**

**தொல்பொருள்களைப் பாதுகாத்து தேசிய மரபுரிமைகளை உறுதி செய்வதற்கு தொல்பொருள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவது குறித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கவனம் செலுத்தியுள்ளார். சட்டம் எவ்வாறு திருத்தப்பட வேண்டுமென்பது குறித்து ஆராய்வதற்கு மகாசங்கத்தினர் துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என்று அவரின் ஊடகப்பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தொல்பொருள்களைப் பாதுகாத்து தேசிய மரபுரிமைகளை உறுதி செய்வதற்கு தொல்பொருள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவது குறித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளார். சட்டம் எவ்வாறு திருத்தப்பட வேண்டுமென்பது குறித்து ஆராய்வதற்கு மகாசங்கத்தினர் துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

நீண்டகாலமாக இடம்பெற்று வரும் தொல்பொருள் அழிவுகளை நிறுத்தி நாட்டின் மரபுரிமைகளை எதிர்கால தலைமுறைக்கு வழங்குவதில் நடைமுறையில் எழும் பிரச்சினைகளை தீர்ப்பது இச்சட்டத்தை திருத்தவதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று (நேற்று) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி பௌத்த ஆலோசனை சபையின் 4ஆவது கூட்டத்தின் போது ஜனாதிபதியினால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

எந்தவொரு புண்ணியஸ்தளத்தினதும் வரலாற்று மரபுரிமைகளுக்கு அல்லது தொல்பொருள் பெறுமானங்களுக்கு பாதிப்பு ஏற்பட ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டது என்பதுடன், அத்தகைய அனைத்து இடங்களும் தேசிய மரபுரிமைகளாக கருதப்பட்டு பாதுகாக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார். தொல்பொருள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் குறித்து மகாசங்கத்தினர் முன்வைத்த முன்மொழிவுகளை விசேட செயலணியின் கவனத்திற்கு கொண்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்தார். தொல்பொருள் திணைக்களத்திற்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுகளை அதிகரிக்கவும் ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் தொல்பொருள்களை பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு சிவில் பாதுகாப்பு படையணியின் உதவியை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தொல்பொருள்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்குமாறு மகா சங்கத்தினர் முன்வைத்த கோரிக்கைகளுக்கு உடனடியாக பதிலளிக்குமாறு ஜனாதிபதி தொல்பொருள் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்தார் என்றுள்ளது. (ம)

வடக்கு - கிழக்கில் உள்ள

# தொல்பொருள் வழக்குகளைக் கொழும்புக்கு மாற்றவேண்டும்!

கொழும்பு, ஜூலை 25

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொடர்பில் இருந்துவரும் வழக்குகளை கொழும்பு நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு மகாசங்கத்தினர் ஜனாதிபதி கோத்தாபயவிடம் கோரிக்கை விடுத்தனர்.

நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி பௌத்த ஆலோசனை சபையின் 4ஆவது கூட்டத்திலேயே மகா சங்கத்தினரால் மேற்படி கோரிக்கை ஜனாதிபதியிடம் விடுக்கப்பட்டுள்ளது. (ம)

# சுயநிர்ணய உரிமையை தரவேண்டியது கடப்பாடு

## மஹிந்தவுக்கு விக்கி பதிலடி

யாழ்ப்பாணம், ஜூலை 25

வடகிழக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் தம்மைத் தாமே ஆள்வதென்பது அவர்களுக்குத் தரப்பட்டிருக்கும் ஒரு சட்ட உரித்து. சர்வதேசச் சட்டப் படி வடகிழக்கு மக்கள் சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள். அதைக் கொடுக்க வேண்டியது மகிந்தரின் கடப்பாடு. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரபாகரன் தனி நாடு கோரியதைப் பற்றியும் நாங்கள் சமஷ்டி கோருவது பற்றியும் அறியாமலா மகிந்த அரசியலில் 50 வருடங்கள் கழித்துள்ளாரா? சட்டக் கல்லூரியில் பிரிவினை பற்றியும் சமஷ்டி பற்றியும் எவரும் உங்களுக்கு எடுத்துச் சொல்லவில்லையா?

இரண்டாவதாக மகிந்தர் ஒரு விடயத்தை மனதில் வைத்திருக்க வேண்டும். வடகிழக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் தம்மை தாமே ஆள்வதென்பது அவர்களுக்குத் தரப்பட்டிருக்கும் ஒரு சட்ட உரித்து. சர்வதேச சட்டப் படி வடகிழக்கு மக்கள் சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள். அதைக் கொடுக்க வேண்டியது மகிந்தரின் கடப்பாடு. தமிழ் மக்களின் உரிமைகளை நாம் தரமாட்டோம் என்று அவர் கூறுவது ஒரு வித போக்கிரித்தனமான கூற்று. அப்படிக் கூறினால்த்தான் சிங்கள மக்கள் வாக்களிப்பார்கள் என்றால் பதவிக்கு வந்தபின் உங்கள் கூற்றுக்களை மாற்றிக் கொள்வீர்களா என்று அவரிடம் கேட்க விரும்புகின்றேன்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வைக் காண்பதற்கு நாம் முன்வைக்கும் யோசனைகள் சர்வதேச சட்டங்களுக்கு அமைவானதாகவும் முரண்பாட்டு கோட்பாடுகளுக்கு அமைவானதாகவுமே இருக்கின்றன. இவை பல்வேறு சந்தர்ப்பங்களில் வெற்றிகரமாக பிரயோகிக்கப்பட்ட நடைமுறையில் இருக்கும் வழிமுறைகளே. தமிழ் மக்களின் அடையாளத்தையும் இருப்பையும் அழிப்பதையே குறியாகக்கொண்டு செயற்படும் இலங்கை அரசு ஒருபோதும் தமிழ் மக்களுக்கு தீர்வு எதனையும் வழங்கப்போவதில்லை என்பதையும் சர்வதேச உத்தரவாதம் இன்றிய எந்த உடன்படிக்கையையும் இலங்கை அரசு மதிக்கப்போவதில்லை என்பதையும் போருக்கு முந்திய வரலாறும், போர்க் கால வரலாறும், போருக்குப் பிந்திய வரலாறும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகின்றன.

ஆகவே தான் ஒரு நிரந்தர தீர்வை ஏற்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு சர்வதேச சமுகத்தை நாம் கோருகின்றோம். அதேபோல, இறுதிப் போரில் என்ன நடந்தது? ஏன் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வு அவசியம் என்பவற்றை சிங்கள மக்கள் விளங்கிக்கொண்டு நிரந்தர தீர்வு ஏற்படுவதற்கு அவர்களும் ஒத்துழைக்கவேண்டும் என்பதற்காகவே சர்வதேச விசாரணையை நாம் கோருகின்றோம், என்றார். (ஒ.5)

நெஞ்சை விட்டகலாத பத்தொன்பதாவது ஆண்டு நினைவுகள்



வைரமுத்து வரப்பிரசிங்கம்

(ஓய்வு பெற்ற தபாலக ஊழியர்)
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை

திதி-பூர்வபக்க ஷஷ்டி (25.07.2020)

மலர்வு 07.09.1940
உதிர்வு 26.07.2001

எமது குடும்ப தீபமாகச் சுடர் பரப்பி எங்களை
அன்பாலும், பண்பாலும் அரவணைத்து இன்னமுதூட்டி
வளர்த்தெடுத்து எங்கள் வாழ்விற்கு வழிகாட்டி
பரிதவிக்கவிட்டு பத்தொன்பதாண்டுகள் கடந்து
விட்டனவே தந்தையே உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவன் அருள் புரிவாராக

நிரந்தர முகவரி
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

பிரிவால் துயருறும்:- மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

### விக்கியிடம்...

யில் அமைந்துள்ள முன்னாள் முதலமைச்சரின் இல்லத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை காலை சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் தலைமையிலான சி.ஐ.டியினரே இந்த விசாரணையை முன்னெடுத்தனர்.

கடந்த டிசெம்பர் மாதம் முதலமைச்சரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று தொடர்பாகவே இதன்போது அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. உடனடியாகவே இது தொடர்பான ஆவணத்தை கையளித்த விக்னேஸ்வரன், அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக தான் உறுதியாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் விக்னேஸ்வரன் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் மேலிடத்துக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்த பொலிஸ் அதிகாரி, தேவை ஏற்பட்டால் தேர்தலுக்குப் பின்னர் மீண்டும் விசாரணைக்கு வருவதாகவும் தெரிவித்துச் சென்றுள்ளார் என்று கூறப்படுகிறது. (அ,106)

### மாதிரி...

டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர். அவர்களிடமிருந்து 450 ஸ்ரிக்கர்கள் மற்றும் மாதிரி வாக்குசீட்டுக்கள் என்பன கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பல்கலைக்கழக மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ,25,26)

### கூட்டமைப்பின்...

கூட்டத்தில் நேற்று இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சுழிபுரம் கல்விளான் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தின் மீது இனந்தெரியாதோர் போத்தல்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (ஒ.5)

### அலங்கார...

பெருவிழா இடம்பெறும். (ஒ.5)

## சமஷ்டியை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்ததையடுத்து தென்னிலங்கையில் ராஜபக்ச அரசும், தேரர்களும் அதற்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இந்த நிலையிலேயே சந்திரிகா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்களவர்களைப் போல் தமிழர்களும் சகல உரிமைகளுடனும் இந்த நாட்டில் வாழ வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை தெரியவேண்டும். ஒருமித்த நாட்டுக்குள் நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். இதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி நிற்கின்றது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் கூட்டமைப்பினர் உள்ளனர். அதனால் அம் மக்களின் எதிர்பார்ப்புகளை அம்மக்களின் ஆணையுடன் நிறைவேற்றும் வகையில் தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கூட்டமைப்பினர் முன்வைத்துள்ளனர்.

தேர்தல் விஞ்ஞாபனத்தைப் புறக்கணிக்கும் ராஜபக்ச அரச தரப்பினர், தேர்தலின் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எப்படித் தீர்க்கப் போகின்றார்கள்?

ஒருமித்த நாடு, சமஷ்டி, அதிகாரப் பரவலாக்கல் போன்ற கோரிக்கைகள் நாட்டுக்கு ஆபத்தானவை அல்ல. அதைக் கோருவதற்குத் தமிழர்களுக்கு உரிமை உண்டு.

கடந்த ஆட்சியில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சிலவற்றுக்குத் தீர்வுகள் காணப்பட்டன. ஆனால், இந்த ஆட்சியில் சகல இன மக்களினதும் பாதுகாப்புக்கூட கேள்விக்குறியாகவுள்ளது. இந்த நிலையில், இந்த அரசே மீண்டும் ஆட்சியமைத்தால் நாட்டின் நிலைமை மேலும் மோசமாகும். எனவே, நாட்டு மக்கள் தான் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும், என்றார். (ஒ,5,22)

## நல்லூரானை...

வரலாற்றுப் பெருமை மிக்க நல்லூர் ஆலய உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ள நிலையில், உற்சவத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

திருவிழாவில் பங்கேற்க ஆலயத்துக்கு வரும் அடியவர்கள் அனைவரும் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட சோதனைச் சாவடியில், அடையாள அட்டையைக் காண்பித்த பின்னரே ஆலயத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அத்தோடு வெளிநாட்டிலிருந்து வந்தவர்களாக இருந்தால் அவர் தனிமைப்படுத்தலுக்குட்பட்டவர் என்ற சான்றிதழைக் காண்பித்த பின்னரே ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

அடியவர்கள் அனைவரும் 'மாஸ்க்' அணிந்தே ஆலயத்துக்கு வருகை தர வேண்டும். சுகாதார நடைமுறையைப் பின்பற்றும் முகமாக கைகளை நன்றாகக் கழுவி, வெப்பநிலை உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அடையாள அட்டை மற்றும் அவர்களது முகம் கமராவில் பதிவு செய்யப்பட்ட பின்னரே ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். (அ,20)

## சுவரொட்டி...

டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரான அ.கிருபாகரனின் சுவரொட்டியை ஒட்டிய நால்வரே கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வாகனம் ஒன்றும் ஒரு தொகை சுவரொட்டிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ஒ,5,27)

## மாநகர...

அத்தியாயம் 252 பிரிவு 19இன் படியும், 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதிய வடக்கு மாகாண சபையின் 2011/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கும் அமைவாக கூட்டம் நடைபெறாத காரணத்தால் அந்தக் கூட்டத்தையும் அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் வடக்கு மாகாண ஆளுநர் இரத்துச் செய்துள்ளார்.

கூட்டம் இரத்துச் செய்யப்பட்டமையால் எதிர்வரும் 31ஆம் திகதி மீண்டும் கூட்டம் இடம்பெறவுள்ளதாக செயலர் உறுப்பினர்களுக்கு அறிவித்தல் அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை, கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் பங்கேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்கள் கூட்டம், போதுமான காலப் பகுதியில் முன்னறிவித்தல் வழங்கி கூட்டப்படவில்லை என்று சபையில் தெரிவித்து விட்டு வெளியேறியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## நான்கு...

பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளது. 'முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் குறிப்பாக மருத்துவ விடுதியில் ஏற்பட்டுள்ள மருத்துவர் பற்றாக்குறையை அடுத்து மருத்துவ விடுதியில் அனுமதிக்கப்படும் நோயாளிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கும் மற்றும் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். சுகாதார அமைச்சு யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் உள்ளக பயிற்சி முடிந்து முதல் நியமனம் பெற காத்திருக்கும் 4 அணிகள் கொண்ட மருத்துவக் குழாமில் இருந்து 3பேரை மட்டுமே விடுவிக்கக் கோரி பல தடவைகள் கூறியும் இன்னும் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை நிர்வாகம் அசண்டையீனமாக உள்ளது. விரைவில் தீர்வு எட்டப்படாத நிலையில் தொழில் சங்க போராட்டத்தை முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் மேற்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடும்' என்று எச்சரித்து, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலரால் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

இதனையடுத்து சுகாதார அமைச்சு மேற்படி கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது. (ஒ,5,7)

## மூன்றிலிரண்டு...

ளார். நாடாளுமன்றத் தேர்தல் கள நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத்தேர்தலில் சிறிலங்கா பொதுஜன முன்னணி 150 ஆசனங்களைப் பெற்று மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் என்பது தற்போதைய நிலைமையில் கடினம்தான். எனினும், அதுவே எமது இலக்கு என்ற நோக்குடன் எமது பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தேர்தலில் நாம் வெற்றி பெறுவது உறுதி. ஆனால், மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெறுவதுதான் கேள்விக்குறி. தேர்தலில் இந்த இலக்கை நாம் அடையாவிட்டாலும் தேர்தல் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றம் வரும் எதிரணி உறுப்பினர்களில் எம்முடன் சேர விரும்புவர்களை இணைத்தாவது மூன்றிலிரண்டு பெரும்பான்மையை சபையில் நிரூபித்துக் காட்டுவோம்.

எதிரணியில் இருக்கும் அடிப்படைவாதிகள் எவரையும் அரசுடன் இணைக்கவே மாட்டோம். தூய்மையான பெரும்பான்மைப் பலத்துடனான அரசையே நாம் விரும்புகின்றோம். அதுவே ஜனாதிபதியினதும் விருப்பம், என்றார். (ஒ,5,22)

## காலை...

மணிக்கு ஆரம்பிக்கும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அத்தோடு பாடசாலை காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை இடம்பெறும் என்றும் கல்வி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது. (ஒ,5)

## குதிரை...

ளின் வரிப்பணத்தில் அமைக்கப்பட்டவை என்றும் அவற்றை எந்தவொரு அரசியல் கட்சியுடனோ அல்லது அரசியல்வாதியுடனோ பிணைப்பை ஏற்படுத்திப் பார்க்கத் தேவையில்லை என்று அந்தப் பதாகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் சப்ரிகம திட்டத்தில் அமைக்கப்பட்ட பல வீதிகள் வேட்பாளரால் திறந்து வைக்கப்பட்டது. வீதித் திறப்பு விழாக்கள் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேர்தல்கள் முறைப்பாட்டுப் பிரிவுக்கு பல முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. வீதிகள் திறப்பதற்கு முன்னதாக முறைப்பாடு செய்யப்பட்டாலும், வீதித் திறப்பு விழாக்களை முறைப்பாட்டுப் பிரிவால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவும், வீதித் திறப்புக்கள் தொடர்பில் மாவட்ட அதிகாரிகளை கடுமையாகச் சாடியிருந்தார். அதன் பின்னரும் வீதித் திறப்புக்கள் இடம்பெற்றமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைமையகத்துக்கும் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, வேட்பாளரால் திறக்கப்பட்டதாகக் கூறப்படும் வீதிகளில் மேற்படி பதாகைகளை ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இந்த வீதிகள் மக்களின் வரிப்பணத்தில் அமைக்கப்பட்டன என்றும், இது தொடர்பில் எந்தவொரு அரசியல் கட்சியுடனோ அல்லது வேட்பாளருடனோ மக்கள் விசேட பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஒ,5)

## கறுப்பு...

நினைவு கூருவதுடன் பாதிக்கப்பட்டவர்களின் நினைவுகளை கௌரவிக்கின்றோம்.

பலவருடமாக அதிகரித்து வந்த பதட்டம் மற்றும் அமைதியின்மைக்கு பின்னர் 1983ஆம் ஆண்டு ஜூலையில் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் கொழும்பின் பல பகுதிகளில் மூண்டது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் எண்ணிலடங்காதவர்கள் இடம்பெயர்ந்தனர்.

இந்தக் கலவரங்கள் 26 வருட ஆயுத மோதலுக்கு காரணமாக அமைந்தன. இதன்போது பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிர்களை இழந்தனர், சமூகங்கள் பெரும் பாதிப்பை சந்தித்தன, நிரந்தரமான உடல்ரீதியான உளரீதியான காயங்கள் ஏற்பட்டன.

கனடா இலங்கையில் வன்முறைகள் மற்றும் ஒடுக்குமுறைகளுக்குள்ளாகுபவர்களுக்கு அடைக்கலம் அளித்ததன் மூலம் கனடா இதற்கு பதில் நடவடிக்கையை எடுத்தது.

கறுப்பு ஜூலையின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடவடிக்கைகள் மூலம் ஆயிரத்து 800 தமிழர்கள் கனடாவில் மீள்குடியேறியதுடன் தங்கள் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பினர் சிறந்த நாட்டை உருவாக்க உதவினர்.

மிகப்பெரும் இழப்பு மற்றும் துன்பங்களின் மத்தியில் அவர்கள் வழங்கிய பங்களிப்பு வலுவான, மேலும் அமைவரையும் உள்வாங்கும், கனடாவை உருவாக்க உதவியது. கனடா உலகில் பெருமளவு புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடாக காணப்படுகின்றது.

கனடாவின் சார்பில் கறுப்பு ஜூலையின் போது துயரங்களை, அனுபவித்த தங்களின் நேசத்துக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் இலங்கையில் நிரந்தர நல்லிணக்கம் மற்றும் அமைதிக்கு வழிவகுக்கக்கூடிய பொறுப்புக்கூறும் பொறிமுறையை உருவாக்குவது குறித்து கனடா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளது. இந்த இலக்கை நோக்கிப் பாடுபவர்களுக்கு நாங்கள் தொடர்ந்தும் எங்கள் ஆதரவை வழங்கி வருகின்றோம், என்றார். (ஒ,5)

## கடையில்...

டைகள் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. வாக்காளர் அட்டைகளை உரியவரிடம் ஒப்படைக்காத தபால் திணைக்கள பணியாளர் தொடர்பில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம தபால் அதிபரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


வாக்காளர் அட்டை விநியோகம் நாடு முழுவதும் இடம்பெற்று வருகின்றது. வாக்காளர் அட்டைகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தேராவில் பகுதியில் உரியவர்களிடம் வாக்காளர் அட்டைகளை ஒப்படைக்காமல் அந்தப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் 24 வாக்காளர் அட்டைகளை தபால் திணைக்களப் பணியாளர் ஒப்படைத்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கும், மாவட்டச் செயலக தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கும் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனையடுத்து சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையத்துக்குச் சென்று இரு தரப்பினரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உரியவர்களிடம் ஒப்படைக்காமல் வர்த்தக நிலையத்தில் 24 வாக்காளர் அட்டைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வர்த்தக நிலைய உரிமையாளர் அவற்றில் 22 வாக்காளர் அட்டைகளை உரியவர்களிடம் சேர்ப்பித்துள்ளார். எஞ்சிய 2 வாக்காளர் அட்டைகளையும் மாவட்டச் செயலக முறைப்பாட்டுப் பிரிவினர் மீட்டுள்ளனர். இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம தபால் அதிபரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ,5)

# உபதலைவரானார் மொயீன் அலி

லண்டன்,ஜூலை 25




இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான இங்கிலாந்து அணியின் உப தலைவராக மொ யீன் அலி நியமி க்கப்பட்டுள்ளார்.

இந்த தொடருக்கான குழாத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிவரும் எந்த ஒரு இங்கிலாந்து வீரரும் இணைக்கப்படவில்லை.

கொவிட்19 வைரஸ் தொற்று பாதுகாப்பு விதிமுறைகள் காரணமாக இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான குழாம் மற்றும் அயர்லாந்து அணிக்கு எதிரான தொடருக்கான குழாம் என இரு வெவ்வேறு குழாம்களை அறிவித்திருந்தது.

இவ்வாறான நிலையில், இங்கிலாந்து அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான உப தலைவராக செயற்பட்டு வந்த ஜோஸ் பட்லர், மேற்கிந்தியத் தீவுக ளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடி வருவதால், அயர்லாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடும் வாய்ப்பை

இழந்துள்ளார். இங்கிலாந்து அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட அணியின் தலைவரான இயன் மோர்கனுக்கு உதவியாக, உப தலைவராக மொயீன்அலி நியமிக்கப்பட்டுள்ளார்.

மொயீன் அலி இங்கிலாந்து அணியின் வெற்றிப் பயணமான உலகக் கிண்ணத்தில், தன்னுடைய 100 ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடியிருந்த போதும், மோசமான பிரகா சிப்பின் காரணமாக அணியிலிருந்து வெளியேறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ரி2)

# தங்கமாக மாறிய வெள்ளி

புதுடெல்லி, ஜூலை 25

2018 ஆம் ஆண்டு ஆசிய போட்டியில் 4x400 மீற்றர் கலப்பு ஓட்ட பந்தயத்தில் இந்திய அணி வென்ற வெள்ளிப் பதக்கம் தற்போது தங்கமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

ஜகர்த்தாவில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டியில் 4x400 மீற்றர் கலப்பு ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவைச் சேர்ந்த முகமது அனாஸ், எம்.ஆர். பூவம்மா, ஹிமா தாஸ், ஆரோக்கிய ராஜிவ் ஆகியோர் வெள்ளிப் பதக்கம் வென்றனர். பஹ்ரைன் அணி தங்கப்பதக்கம் வென்றது. தடைதாண்டும் ஓட்டப்பந்தயத்தில் அனு ராகவன் 56.92 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து 4 ஆவது இடம் பிடித்தார்.

பஹ்ரைன் அணியில் கலந்து கொண்ட வீரர்களில் ஒருவரான கெமி அடெகோயா ஊக்கமருந்து உட்கொண்டதாக தெரியவந்துள்ள நிலையில் அந்த வீராங்கனைக்கு நான்கு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் 4x400 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் இந்திய அணி வென்ற வெள்ளிப் பதக்கம் தங்க பதக்கமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. பெண்களுக்கான தடை தாண்டி ஓடும் போட்டியில் 4 ஆவது இடம் பிடித்த அனு ராகவன் வெண்கலப் பதக்கம் பெறுகிறார். இதில் கெமி தங்க பதக்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ரி2)




# மீண்டும் அமீர்

பாகிஸ்தான், ஜூலை 25 பாகிஸ்தான் இங்கிலாந்து தொடருக்கான பாகிஸ்தான் அணியில் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஆமிர் இணைவார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் அணி மூன்று டெஸ்ட், மூன்று ரி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ளது.

இரண்டாவது குழந்தை பிறப்பதாக எதிர்பார்த்த திகதியும், இங்கிலாந்து தொடருக்கான திகதியும் ஒன்றாக இருந்ததால், மொஹமட் ஆமிர் இங்கிலாந்து தொடரில் இருந்து விலகியிருந்தார்.

இரண்டாவது குழந்தை பிறந்ததாக ஜூலை 17 ஆம் திகதி முகமது ஆமிர் சமூகவலைத்தளத்தில் குறிப்பிட்டிருந்தார். இதனால் இங்கிலாந்து சென்று தனிமைப்படுத்திக் கொண்டு பாகிஸ்தான் அணியில் இணைய கால அவகாசம் உள்ளது. இதனால் பாகிஸ்தான் அணியில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உறுதி செய்துள்ளது. இங்கிலாந்து புறப்படுவதற்கு முன் இரண்டு முறை கொரோனா பரிசோதனை செய்யப்படும். இரண்டு முறையும் நெக்கடிவ் ரிசல்ட் வந்தால் ஆமிர் இங்கிலாந்து செல்வார்.

இங்கிலாந்து பாகிஸ்தான் இடையிலான ரி20 கிரிக்கெட் தொடர் ஆகஸ்ட் 28 ஆம் திகதி மென்செஸ்டரில் ஆரம்பமாகவுள்ளது.

(ரி2)

வாடகைக்கு
316 / 3 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்திக்கு அருகில்) கடை வாடகைக்கு உண்டு.
077 360 9005

COVID-19 க்கு பின் நேரடி வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன
புதிய பிரிவு ஆரம்பம் 27/7/2020 (Mon) 8 am
IELTS
# Unique Test Tips
# 40 hrs with free 4mock exam
# Latest course Material (Book 14)
Academic module
General module
IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
DMI , British Council இன்
அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Reading Writing Listening Speaking
ENGLISH Part-I Part-II
யாழ்ப்பாணம்
Mon,Wed,Fri
8 - 11 a.m.
Unit - 1 இல் இருந்து ஆரம்பம்
German - Germany Swiss Deutsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, 021 222 4403
021 226 2470 0777577333 | 021 227 0775 0777227074 | 021 224 1970 0776032300 | 021 225 5665 0761354503 | 021 228 5655 0776398096

## மரண அறிவித்தல்



பிறப்பு
01 . 01 . 1949

இறப்பு
21 . 07 . 2020

## திருமதி சரஸ்வதி பாலசிங்கம்

ஏழாலை வடக்கு பழமுதிர்சோலையைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி பாலசிங்கம் 21.07.2020 அன்று அதிகாலை இயற்கை எய்தினார்.

அன்னார் ஏழாலை வடக்கு காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இலட்சுமிப்பிள்ளை (சந்திரமதி) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், சி.கந்தசாமி (கொழும்பு விவேகானந்தசபை, திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபை, இந்து மாமன்றம் சைவ பரிபாலனசபை, சைவ வித்தியா விருத்தி சங்கம் நிறுவனங்களின் பணியாளரும்), காலஞ்சென்ற சண்முகானந்தம் மற்றும் யோகமலர், காலஞ்சென்ற தங்கமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், சிவயாழினி (முகாமைத்துவ சேவை, உத்தியோகத்தர்), திருமாறன் ஆகியோரின் அன்புத் தாயும், விஜயகுமார் குடும்பத்தின் பேரன்பிற்குரியவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.07.2020 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிக்காக ஆலங்கட்டை மயானத்து எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"பழமுதிர்சோலை"
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(C. 32910) (13.17)

தகவல்:
சி.கந்தசாமி மற்றும் குடும்பத்தினர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.